தேவனுடைய இரட்சிப்பு

ஆஸ்வால்ட் ஜே. ஸ்மித்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு *10:8*) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

தேவனுடைய இரட்சிப்பு

DR. ஆஸ்வால்ட் ஜே. ஸ்மித்

"LITERATURE FOR JESUS"
HALLELUJA YOUTH LITERATURE SERVICE
NAZARETH-628 617
S. INDIA

பிரசுரிப்பவர்

இந்திய இல்லந்தோறும் நற்செய்தி

(தமிழ்நாடு)

1/9, ரித்தர்டன் ரோட், வேப்பேரி, சென்னை-7.

Copies 6000

THE SALVATION OF GOD

by

DR. OSWALD J. SMITH

HINDUSTAN BIBLE INSTITUTE PRESS, MADRAS-10

முன்னுரை

"தேவனுடைய இரட்சிப்பு", கிறிஸ்து இயேசுவுக்குள் பரிபூரணமும், இலவசமாகவும் உள்ளது. நாங்கள் சந்தித்து வருகிற ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்களல்லாதவர்களும், பேர்கிறிஸ்தவர்களும் இந்த இரட்சிப்பைக் குறித்துத்தப்பான கருத்துக்களைக் கொள்வது எங்களுடைய இருதயத்தில் வேதனையை உண்டாக்குகிறது. Dr. ஆஸ்வால்ட் J. ஸ்மித் அவர்கள் தனது நீண்டகால அனுபவத்தில், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதும், இந்த உன்னதமான இரட்சிப்பின் அனுபவத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுவதைப் பற்றியும் மிகவும் அரும்பாடுபட்டு இப்புத்தகத்தில் விளக்கியிருக்கிறார். இப்புத்தகத்தை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட உதவி செய்ததற்காக கர்த்தருக்கு நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் தாமே இப்புத்தகத்தை உபயோகப்படுத்தி, இதை வாசிக்கும் சகோதர சகோதரிகளின் விலையேறப்பெற்ற ஆத்துமாக்கள் தேவனுடைய இரட்சிப்பை கண்டடைய ஊக்கமாக ஜெபிக்கிறோம்.

பொருளடக்கம்

அதிகாரம் பக்கம்

1. ஒரே வழி 5

2. மனிதனின் வீழ்ச்சியும் ஆண்டவரின் மீட்சியும் ... 18

3. நித்தியத்துக்கான கேள்வி 27

4. விசுவாசிப்பதென்றால் என்ன ? 37

5. மீட்பின் வழி 45

6. பொய்யும் மெய்யும் 58

7. ஆண்டவர் அருளின பெரிய ஈவு 76

8. அறுப்புக்காலம் சென்றது 89

9. ஆழ்ந்த சிந்தனைக்குரிய ஐந்து உண்மைகள் ... 97

10. சிறப்பான செய்தி 107

ஒரே வழி

ஒரு பொருளக முதல்வருடன் வணிகர் ஒருவர் உரையாடிக்கொண்டிருந்தார். வணிகரின் ஆர்வமுற்ற வார்த்தைகளைக் குறுக்கிட்டு முதல்வர் "அதை எப்படி நம்புவது, அது மடத்தனம் அன்றோ? எனக்குப் பதிலாக இயேசுகிறிஸ்து சிலுவையில் மரிப்பதினால் தேவன் திருப்தியடைவாரா? என் சுயமுயற்சியினால் தான் இரட்சிக்கப்பட முடியும்" என்றுக் கூறி வாதாடினார். "அப்படியானால் ஆண்டவர் வகுத்தத் திட்டத்தை அசட்டை செய்துவிட்டு நீர் உமக்குப் பிரியமான ஒரு வழியைத் தெரிந்துகொள்வீரா?" என்று வணிகர் வினவினார். "நீர் கேட்பது இன்னதென்று எனக்குப் புரியவில்லையே" என்று முதல்வர் சொன்னார். அதற்கு வணிகர், "ஒருவன் உம்மிடம் வந்து எனக்கு அதிக நெருக்கடியாக இருக்கிறது, கொஞ்சம் பணம் கடனாகத்தாரும் என்று கேட்பானாகில், அந்தப் பணத்தைக் கொடுப்பதற்கான நிபந்தனைகளை வரையறுக்க வேண்டியது யார்?" என்று விசாரித்தார். அதற்கு அவர் "நான்தான்" என்று சொல்லி, கடன் என்னிடமிருந்துப் பெறும் கட்டுப்பாட்டை ஒப்புக்கொள்ள, அவனே கடமைப்பட்டுள்ளான்" என்றார்.

"அப்படியானால் அந்தக் கடனாளியின் நிலைமையில் தான் நீர் இருக்கிறீர். தேவன் பெரிய பொருளக முதல்வர் போலிருக்கிறார். நீர் இரக்கத்தையும், பாவமன்னிப்பையும் தேடி அவரிடம் வருகிறீர். அதற்கான நிபந்தனைகளைக் கூறும் உரிமை அவருக்குண்டல்லவா? என்று வணிகர் அறிவுறுத்தினார். அப்போது, "ஆ, இப்போதுதான் எனக்கு அது புரிகிறது. ஆம், ஆண்டவரே இரட்சிப்பின் வழியை எனக்குத் தெரிவிக்க வேண்டும் என்று முதல்வர் ஒப்புக்கொண்டார்.

"இரக்கத்திற்காக மன்றாடும் நீர் அவருக்கு ஆலோசனைக் கூறாமல், அவர் வற்புறுத்துவதை ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும். தமது சித்தப்படியே பரலோகத்தின் பொருளக

முதல்வர் மீட்பை வழங்குகின்றார். உமது சொந்த எண்ணங்களை விட்டு அவர் செய்திருக்கும் மாபெரும் இரட்சணிய ஒழுங்கை இப்பொழுதே ஏற்றுக்கொள்வீரா? என்று வணிகர் மீண்டும் வலியுறுத்தினார். இந்த உண்மையைக் கண்டறிந்த உடனே முதல்வர் "ஆம், ஆண்டவரின் ஒத்தாசையை முன்னிட்டு நான் இதை ஏற்றுக்கொள்கிறேன்" என்றார். இதை வாசிக்கும் என் நண்பனே! உன் நிலைமை என்ன? உன் சொந்த வழிகளை இதுவரைச் சார்ந்துக்கொண்டிருக்கிறாயா? அநேகர் அப்படித்தான் செய்கின்றனர்.

சமய வழிபாடு

மதம் இரட்சிக்குமென்று அநேகர் நம்புகின்றனர். ஆங்கிலேயப் பிரபு ஒருவர் ரஷ்யாவின் சீமாட்டியான செர்காப் என்பவளிடம், "அம்மையாரே! உங்கள் ஆன்மா எப்படி இருக்கிறது?" என்று விசாரித்தபோது அவள் சீற்றத்துடன் "அது என் சபை சாமியாருக்கும் ஆண்டவனுக்கும் அடுத்தது" என்றாளாம்.

கிரேக்க சபையாளாகிய அவள் அச்சபைக்கு ஏராளமான பணத்தைக் கொடுத்திருந்தாள். அதன் கொள்கைகளைப் பின்பற்றினாள். ஆலயத் தொழுகைக்குத் தவறாமல் சென்றாள். அதனால் தன் ஆன்மாவைக்குறித்து அவளுக்குக் கவலையில்லை. ஏனென்றால் அதைப் பத்திரமாகப் பரமபதவியில் சேர்க்கும் பொறுப்பு அச்சபையினுடையதாயிருந்தது. அன்பனே, நீயும் ஒருக்கால் உன் சபையை நம்பிக்கொண்டிருப்பாய். ஆனால் மதப்பற்று உன்னை இரட்சிக்காது என்பதை அறிந்துக் கொள். சீர்திருத்த சபையோ, ரோமான் சபையோ, வேறெந்த சபையோ, அல்லது இந்து, இஸ்லாம், புத்த மதங்களோ எதுவும் உன்னை இரட்சிக்க முடியாது. இயேசுகிறிஸ்துவாகிய ஆண்டவர் மாத்திரம் உனக்கு மீட்பை அருளிச் செய்வார்.

ஒருவேளை லூத்தரன், சி. எஸ். ஐ. பாப்திஸ்து, மெத்டிஸ்ட் அல்லது மற்றொரு கூட்டத்தை நீ சேர்ந்தவனாயிருப்

பாய். ஆயினும் நீ நித்திய அழிவுக்குச் செல்லுவாய். ஏனென்ருல் எந்தச் சபையும் உன்னை இரட்சிக்காது. கிறிஸ்துவிலேயே இரட்சணியத்தைக் கண்டடைவாய்.

எந்த மதமும், சபையும் உன் ஆன்மாவுக்கு உயிரை அளிக்காது. மீட்பைப் பெற ஒருவனுக்குப் புத்துயிர் வேண்டும்.

நிக்கொதேமு மதப்பற்றுடையவனுயிருந்தும் இரட்சிக்கப்படாதவனுயிருந்தான். இயேசு அவனிடம் "நீ மறுபடியும் பிறக்கவேண்டும்" என்ருர். அவருக்கு விருந்து அளித்தப் பரிசேயன் சமயப்பற்றுடையவனுயிருந்தான். ஆனுல் இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளாதவனுயிருந்தான். (லூக். 7:36-50). கொர்நேலியு தேவனுக்குப் பயந்தவன். அதிகமான தருமம் செய்பவன் எப்பொழுதும் ஜெபஞ்செய்துக் கொண்டிருப்பவன், அனைவராலும் நல்லவனென்று மதிப்புப் பெற்றவன். ஆயினும் இரட்சிப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியவனுயிருந்தான் (அப். 10 : 22.)

மகா சிறந்த மதப்பற்றுள்ளவன் பவுல். சிறுவயது முதற்கொண்டு தேவ பக்தி வைராக்கியங் கொண்டிருந்தான். யூதமதச் சடங்குகளைக் கடைப்பிடித்தான். ஆனுலும் தெய்வத்தின் முன் பாவியாகவே இருந்தான். அவனும் மீட்பைப் பெறவேண்டிய நிலையிலிருந்தான். ஆம், அவன் மார்க்க பக்தி நிறைந்த ஒரு பாவியாக இருந்தான். "பாவிகளில் பிரதான பாவி நான்" என்று அறிக்கையிட்டானே !

அன்பனே ! சிறந்தவரான இவர்களில் ஒருவரையாவது மார்க்கம் இரட்சிக்கவில்லை என்ருல், உன் நிலைமை என்ன ?

மெதடிஸ்ட் சபையைத் தோற்றுவித்தவரான ஜான் வெஸ்லி என்ற பெரியார் மிகவும் மார்க்கப்பற்றுள்ளவராயிருந்தார். ஆங்கிலேய சபையைச் சேர்ந்தவராயிருந்த அவர், தான் குணப்படாத நிலைமையிலிருந்தேனென்கிருர். வேதாகமத்தை வாசித்து ஆலயத்திற்குச் சென்று, ஜெபங்களை

வாசித்தபடியினுல் தன்னை ஓர் உத்தம கிறிஸ்தவனென்று எண்ணினுர். திருப்பந்தியில் பங்குபெற்றுத் தினந்தோறும் சில மணி நேரங்களைப் பக்தி முயற்சிக்காக செலவு செய்து, வாரத்தில் இரண்டு நாட்கள் உபவாசித்து இப்படியாகப் பரிசுத்த வாழ்க்கையாற்ற முயன்ருர். ஆனுலும்.........இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெருதிருந்தார். "என்னைக் குணப்படுத்தக் கூடியவர் யார்?" என்று புலம்பினுர். தூர தேசத்திற்கு அவர் மிஷனெரியாகப் போனதின் நோக்கம், ஆன்ம இரட்சிப்பைக் கண்டடைவதற்காகவே என்று தெரிவித்தார். அந்தோ! ஓர் ஆங்கிலேய சபையின் குரு சமயப்பற்றுர்வம் வாய்ந்தவராயிருந்தும் இரட்சிக்கப்படாமல் இருந்தாரே! இதை வாசிக்கிறவனே, நீயும் மதப்பற்றுள்ளவனுக மாத்திரம் இருப்பாயானுல் உனது நம்பிக்கை வீணுகும். இதுவரை கிறிஸ்துவை அறியாதிருக்கிருய். சமயப்பற்றினுல் இரட்சிப்புக் கிடைக்குமானுல் இயேசுகிறிஸ்து ஏன் மரிக்கவேண்டும்? அன்பனே, உலக இரட்சகர் அவர் ஒருவரே. எந்த மதமுமல்ல, மீட்பராகிய இயேசுவே உனக்கு வேண்டும்.

ஒழுக்கப்பண்பு

நன்னடத்தையுள்ளவராக இருப்பதினுல் தாங்கள் தேவனின் மக்கள் என்று சிலர் நினைக்கின்றனர். இரட்சிப்புக்குத் தங்கள் ஒழுக்கப்பண்பை அவர்கள் சார்ந்துக்கொண்டிருக்கின்றனர். அப்படியானுல் ஒருவன் தன் மிதியடிவாரைக் கொண்டுத் தன்னையே உயரத்தூக்க முடியுமென்றும் நம்பலாம். நீதியும் நேர்மையுமான வாழ்க்கை ஒருவனை இரட்சிக்குமானுல் கிறிஸ்து ஏன் மரிக்கவேண்டும்? உன்னையே இரட்சித்துக்கொள்ளக் கூடுமானுல் உலகத்திற்கு இயேசு கிறிஸ்து வரவேண்டியதில்லையே!

நன்னடத்தையினுல் பரலோகஞ் சென்ருல் நீ அதைக் குறித்து மேன்மை பாராட்டி, "எனக்கு இரட்சகர் தேவையில்லை, என்னை நானே இரட்சித்துக்கொள்வேன்," என்றே சொல்லுகிருய். அப்படியாக உன்னை இரட்சித்துக்கொள்ளவே முடியாது என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லுவேன்.

தேவனைத் திருப்தி செய்யும் அளவுக்கு உத்தம வாழ்க்கை யாற்ற யாராலும் முடியாது. "எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தையைப்போல இருக்கிறது." (ஏசா. 64 : 6). "நீதிமான் இல்லை, ஒருவனாகிலுமில்லை," (ரோம. 3 : 10). இப்படியாக எல்லாரும் பாவஞ்செய்தபடியினால் எல்லாருக்கும் இரட்சகரான ஒருவர் தேவையன்றோ? உன்னை நீதிமானென்று எண்ணினால், அதாவது நீ சுய நீதியை உடையவனாயிருந்தால் இயேசுகிறிஸ்து உனக்குத் தேவையில்லை. "நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேனென்றார்," (லூக். 5 : 32). உன்னை உத்தமனென்று நினைக்கிறாயா? "நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் போலவும் இல்லை" என்று பரிசேயன் சொன்னான். "இந்த ஆயக்காரனைப்போலவும் இராமல் மிகவும் நீதிமானாயிருக்கிறேன்" என்று பரிசேயன் ஜெபித்தான். ஆயக்காரனோ தலையை வணங்கி தன் மார்பிலே அடித்துக்கொண்டு "தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்று வேண்டினான். இயேசு ஆயக்காரனை நீதிமானாகத் தீர்த்து பரிசேயனை ஆக்கினைக்குள்ளாக்கினார் (லூக். 18 : 9 - 14). நீ யோக்கியனல்ல என்று உனக்கே தெரியுமல்லவா? ஏனென்றால் உன் மனதின் தீய சிந்தனைகளை உன் நண்பருக்கு மறைக்கின்றாய். அப்படியிருக்க பரிசுத்த தெய்வத்தின் முன்னிலையில் நீ உத்தமனாக நிற்கமுடியுமா? உன் அறையில் தூசி இல்லை என்பாய். ஆனால் சூரிய ஒளிக்கதிர் அதற்குள்ளே வரட்டும் அதினூடே பார். பல ஆயிரக்கணக்கான தூசிகள் பறக்கிறது தெரியும். உன்னை நல்லவனென்று நினைக்கிறாய். ஆனால் உன் உள்ளத்தில் இறைவனின் தூய ஒளி வீசினால் உன்னில் சீர்கேடு, இழிவு, ஆம், பாவமே நிறைந்திருக்கக் காண்பாய். "ஆண்டவரே, நான் பாவியான மனிதன்" என்று பேதுரு புலம்பினான் "இதோ நான் நீசன்" என்று யோபும், "ஐயோ! அதமானேன்," என்று ஏசாயாவும் ஓலமிட்டனர். எனினும் இவர்கள் எத்தனை நீதிமான்களும், சிறந்த பக்தருமாயிருந்தனர்! ஆனால் ஆண்டவரின் சமுகத்தில் தாங்கள் அருவருப்பானவர்களென்று உணர்ந்துத் தாழ்ந்தினர்.

பொது அலுவலகத்தின் செயலாளர் ஒருவர் கூறுவதாவது: ''நான் எப்பொழுதும் தேவனுக்குப் பயந்து நடந்து வந்தேன். நான் உண்மையும், நேர்மையுமாயிருக்க முயற்சித்திருக்கிறேன். அடுத்தவரையடுத்து மலைப்பிரசங்கத்தின் பொன்மொழியைப் பின்பற்ற பிரயாசப்பட்டேன். நல்ல கணவனும், தகப்பனுமிருக்க என்னால் ஆனமட்டும் எத்தனித்துள்ளேன். யாதாமொன்றில் நான் தவறியிருந்தால், அது என் உண்மையற்ற மனநிலையினால் அல்ல'' என்பதே. இவ்வார்த்தைகளைக் கேட்க இனிமையாயிருக்கிறது. ஆனால் அது முற்றிலும் தவறான ஒரு வாழ்க்கையாகும். அவன் தன்னையே முக்கியப்படுத்துகிறான். நேர்மை, உண்மை என்று சொல்லியும் கிறிஸ்துவுக்கு அவனில் இடமில்லை. மார்க்கத்தைப் பின்பற்றுகிறவனே ஒழிய அவன் இரட்சிக்கப்பட்டவனல்ல. மறு பிறப்பைக்குறித்தும், இரட்சகரை ஏற்றுக்கொண்டதைக்குறித்தும், அவன் தெரிவிக்கவில்லை. தன் சொந்த நீதியைச் சார்ந்துக்கொண்டவனாயிருக்கிறான். அது தவறான அடித்தலத்தில் ஒருவன் வீட்டைக் கட்டுவதற்கு ஒப்பாயிருக்கிறது. அந்தோ, இன்று எண்ணிறந்தவர் அதைப் போன்று தங்கள் நன்னடத்தையை நம்பிக்கொண்டிருக்கின்றனரே.

அன்பனே! நீயும் உன் சொந்த நீதியைச் சார்ந்துக் கொள்ளப்போகிறாயா? நீ உத்தமனல்ல என்பது உனக்கே தெரியும். அடுத்தவருடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் ஒருக்கால் நீ சற்று நல்லவனாகத் தோன்றுவாய். ஆனால் இறைவன் முன்னிலையில் நீ மிகவும் குற்றவாளியாக இருக்கிறாய். குறைபாடற்ற ஒரு நீதியை இறைவன் நாடுகிறார். இயேசுகிறிஸ்து ஒருவரே அவ்விதமாக வாழ்ந்தார். அவர் நீதியை உனக்குச் சொந்தமென்று நம்பினால் மாத்திரம் பரமன் உன்னை ஏற்றுக் கொள்வார். மற்றபடி உன்னைப் புறக்கணித்து விடுவார்.

ஒருக்கால் இதுவரை சிறந்த விதமான வாழ்க்கையாற்றும்படி முயன்றிருப்பாய். ஆனால் அப்படிச் செய்ய உன்னால் முடிந்ததா? இப்பொழுது உன்னால் அப்படிச் செய்ய முடிய

வில்லை என்பதை ஒத்துக்கொள். கிறிஸ்துவே உனக்கு வேண்டும். அவர் அளிக்கும் நீதியை ஆடைபோல் உடுத்திக் கொள்பவர் மாத்திரம் பரலோகத்தில் சேர்த்துக்கொள்ளப் படுவர். கெட்ட குமாரனைப்போல உனது கந்தையான உடைகளைக் களைந்துவிடு. கிறிஸ்து இயேசு தமது தூய ஆடையால் உன்னை உடுத்த அவருக்கு இடங்கொடு. உன் குண நலன்களையல்ல, அவர் நற்பண்புகளைச் சார்ந்து கொண்டு அவரை நோக்கி மன்றாடு.

அறச்செயல்கள்

நற்கிரியைகளைச் செய்வதினால் நாங்கள் இரட்சிக்க படுவோமென்று சிலர் கருதுகின்றனர். தவஞ்செய்தலையும், பலவற்றைத் துறந்து வாழ்வதையும் சிலர் மீட்புக்காகக் கடைபிடிக்கின்றனர். நன்கொடை வழங்குதல், விண்ணப்பங் களை ஏறெடுத்தல், நோயாளிகளையும் சிறைப்பட்டவரையும் சந்தித்தல் முதலியவற்றில் பலர் ஈடுபடுகின்றனர். மேலும் ஸ்தலயாத்திரை முதலியவைச் செய்து தங்கள் உடல்களை மற்றுஞ்சிலர் வதைக்கின்றனர். இப்படிச் செய்வதால் இரட் சிப்பைப் பெறுவோம் என்று நம்புகின்றனர். ஆனால் இறை வன் அளிக்கும் இரட்சிப்பு நிறைவேறும்படி நாம் பிரயாசப் படவேண்டுமென்கிறார். அதை ஏற்றுக்கொண்டவர் மாத் திரம் அதற்கு ஏற்ற பிரகாரம் நடக்கமுடியும். மாணவன் முதலாவது கல்லூரியில் சேரவேண்டும். அதன் பிறகே அவன் ஆர்வத்துடன் கல்வி கற்றுத் தேறுவான். அப்படியே இரட்ச கரையும் அவர் அருளும் மீட்பையும் ஏற்றுக்கொள். சிலுவை யில் அறையப்பட்ட வலது பாரிசத்துக் கள்ளன் இரட்சிக்கப் படும்படி எதையாவது செய்தானா? ஒன்றும் செய்ய முடியாத படி அவன் கைகள் அறையப்பட்டிருந்தன. ஆனாலும் ஆண்ட வர் அவனை இரட்சித்தார். மனிதன் எதையாவது செய்து அதைச் சம்பாதிக்க வேண்டுமென்கிறான். இறைவனாகிய கிறிஸ்து அதைச் செய்து முடித்துவிட்டார். அதற்காக நீ ஒன்றும் செய்ய அவசியமில்லை என்கிறார். இரட்சிப்பு ஒரு நன்கொடையாயிருக்கிறது. ''தேவனுடைய கிருபை வரமோ

நித்திய ஜீவன்,'' (ரோமர் 6:23) ஒருவன் இலவசமாகவே வெகுமதியைப் பெற்றுக்கொள்ளுகிருன். எனவே இரட்சிப்புக்கு விலே கொடுக்கத் தேவையில்லே.

தன்னேத் தகப்பன் ஏற்றுக்கொள்வதற்குச் கெட்ட குமாரன் எதையாவது கொடுத்தாஞ? கொடுக்க அவனிடம் ஒன்றுமில்லேயே! அப்படியே உன் நிலமையும் இருக்கின்றது. பணமுமின்றி, விலேயுமின்றி இரட்சிப்பு கிடைக்கிறது. அதைக் கிரயம் கொடுத்து வாங்கமுடியாது. இந்தியாவில் சாமியார்கள் ஆணிகளாலான படுக்கையின் பேரில் படுத்திருப்பதை நான் கண்டேன். எதற்காகவென்று அவர்களிடம் விசாரித்தால், எங்கள் பாவத்தைப் போக்கும்படிக்கே என்பார்கள். ஆனுல் கிறிஸ்து நாம் அடைய வேண்டிய வேதனேகளேயெல்லாம் ஏற்றுக்கொண்டு இரத்தஞ்சிந்தி மரிக்கவில்லேயா ? அவர் நமது பாவங்களுக்கு ஈடுசெய்து விட்டார். திருக்குமாரனின் சிலுவை பலியானது இறைவனுக்கு மனநிறைவை அளித்தது. கிறிஸ்து நிறைவேற்றி முடித்துவிட்ட மீட்புக்கு அதிகமானதொன்றையும் எவரும் செய்யத் தேவையில்லே.

திருவசனம் திட்டமும் தெளிவுமாக விளம்புவதைக் கவனியுங்கள் : ''கிருபையினுலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினுல் உண்டானதல்ல ;'' (எபேசி. 2 : 8-9). ''நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல்,'' (தீத்து 3 : 5) ; ''ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானுக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனுயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும். அந்தப்படி, கிரியைகளில்லாமல் தேவனுலே நீதிமானென்று எண்ணப்படுகின்றவன்'' (ரோம. 4 : 5, 6) என்பவைகளே.

'' கிரியை செய்யாமல்'', 'நீதியின் கிரியைகளினிமித்தம் அல்ல'', என்ற வார்த்தைகள் எவ்வளவு திட்டமாயிருக்கின்

றனே. உன்னைத் தருதியுடையவனுக்கக்கூடிய எந்த நற்கிரியை களினாலுமல்ல. கிறிஸ்துவினாலேயே நீ இரட்சிக்கப்படுகிறாய். அன்பனே, அவரிடம் வந்து, அவர் கல்வாரி சிலுவையில் செய்து முடித்ததை முற்றிலுமாக நம்பி, இப்பொழுதே இரட்சிக்கப்படுவாயாக.

கட்டளைகள்

தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதால் இரட்சிக்கப்படுவோமென்று மற்றுஞ்சிலர் நினைக்கின்றனர். "ஒருவனும் அந்த நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறதில்லை," என்று நமதாண்டவர் உரைத்ததை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஏதோ ஒரு தடவையாவது அதற்கு விரோதமாகப் பாவஞ்செய்திருக்கிறாயல்லவா? "ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்," (யாக். 2 ; 10). ஒன்றுக்குக் கீழ்ப்படியாதிருந்தால் எல்லாவற்றிலும் நீ தவறிவிட்டாய்.

அப்படியானால் தண்டனைக்கு ஆளானவனாயிருக்கிறாய். "என் வாழ்க்கையை மாற்றியமைத்து மீண்டும் தவறாமல் வாழ முயலுவேன்" என்று ஒருவேளை சொல்லுவாய். அதை எப்படி நம்பமுடியும்? அப்படிச் செய்யக்கூடுமாயினும் சென்ற காலத்தின் உன் தவறுதலுக்குத் தண்டனை உண்டல்லவா? தேவன் அதைக் கவனிக்காமல் விட்டுவிடுவாரா? ஒருக்காலும் இல்லை. கிறிஸ்து அதற்குப் பிணையாளியாக நிற்காவிடில், ஒவ்வொரு பாவத்திற்கும் நீ பொறுப்பாளியாவாய். அவர் பாவம் அற்றவராயிருந்து தேவ கற்பனைகளையெல்லாம் கடைபிடித்தார். உன் தவறுதலுக்கு ஈடாகப் பலி செலுத்தப்படவேண்டும். தேவாட்டுக் குட்டியாகிய அவர் பலியானார். அவரை உன் மீட்பராக ஏற்றுக்கொள்.

மளிகை கடையில் ஒருவன் கடனாக சாமான்களை வாங்கிவிட்டு, பின்பு சாமான்களை வாங்கும்போது அதற்கு அவன் கிரயம் கொடுப்பதால், முந்தின அவன் கடன் தீர்ந்து

விடுமோ? அதைப்போன்றே இது முதல் நீ உத்தமனுக வாழக்கூடுமானுலும், முந்தின தவறுதலுக்கான தண்டனையை நியாயமாக அனுபவிக்கவேண்டும். ஆனுல் மற்ருெருவர் முன்வந்து உன் பாக்கியைச் செலுத்திவிட்டால், ஒரு வேளை அதற்குப் பின்பு நீ கிரயத்தைக் கொடுக்க முற்படலாம். அன்பனே! உன் கடனையெல்லாம் கிறிஸ்துத் தீர்த்துவிட்டார். உன் பாவத்தின் தண்டனைக்கு, அவர் ஈடு செலுத்திவிட்டார். அதை முற்றிலுமாக நம்பு. அதற்காக அவருக்கு நன்றி செலுத்தி, இனிமேல் விடுதலைப் பெற்றவனுயிரு. ஒருவனிடம் தேவனின் கற்பனைகளைக்குறித்துப் பேசுவதானது, ஒரு புற்று நோயாளியிடம் சுகாதாரத்தையடுத்து ஒரு நூலைக் கொடுப்பதற்கு ஒப்பாகும்.

அந்தப் புற்றுநோயாளியைக் குணமாக்கவேண்டும்? அப்படியே உன் ஆன்மா நோய்வாய்ப்பட்டிருக்கிறது. உன் ஆன்மாவைக் குணமாக்கி, நற்சுகம் அளிக்கும் ஒருவர் தேவையன்ருே? உன் பாவத்தைக் கிறிஸ்து ஏற்றுக்கொண்டு, சிலுவையில் அதற்கு முடிவுண்டாக்கினுர். இப்பொழுது பரம ஜீவனுகிய நித்திய வாழ்வை உனக்களிக்கின்ருர். நியாயப் பிரமாணத்தைக்குறித்துப் பவுல் யூத மதத்தினரோடு ஓயாமல் போராடினுர். அவர் அறிவுறுத்துவதைக் கேளுங்கள்.

''எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினுலே தேவனுக்கு முன்பாக நீதிமானுக்கப்படுவதில்லை. ஆதலால் மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினுலேயே நீதிமானுக்கப்படுகிருன்'' (ரோம. 3 : 20-28) ''நீதியானது நியாயப் பிரமாணத்தினுலே வருமானுல் கிறிஸ்து மரித்தது வீணுயிருக்குமே'' (கலா. 2 : 16-21) என்பதே.

கிறிஸ்து ஒருவரே இரட்சகர்

இதுவரை ஒருவன் கடைபிடிக்கிற யாவும் வீணென்று அறிந்தோம். இப்பொழுது இறைவன் நியமித்திருக்கும் இரட்சண்ய வழியைக் கவனிப்போம். ஒருவரே நம்மை இரட்சிப்பார். மரித்து மீண்டும் உயிர்த்து இன்னும் பிழைத்திருக்கிற இயேசுகிறிஸ்துவே அவர்.

"நானே வழி......என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோ. 14 : 6). இயேசுகிறிஸ்துவாகிய "நானே மீட்பர்" என்கிறார். வேறே எந்த சமயமும், நன்னடத்தையும் ஒருவனை இரட்சிக்காது. தேவனுடைய குமாரனாகிய இயேசுவே நமது ஒன்றான இரட்சகராயிருக்கிறார். அவரே நமக்கு இரட்சண்ய பாதையாக விளங்குகிறார். அவர் வழியைக் காட்டுகிறவர் என்று நினைக்கலாகாது. மோசே, புத்தர், முகமது முதலானவர் அல்ல, மேலும் சுவாமியார், குருவானவர், அல்லது போப்பானவரும் அல்ல, கிறிஸ்துவே உன்னை இரட்சிக்கிறார். அவருக்கு உன் உள்ளத்தில் இடங் கொடுப்பாயா?

"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப். 4 : 12). இதைவிட விளக்கமான வேறொரு வசனம் இல்லை. வேறெந்த சபையின் பெயரிலும் இரட்சிப்பில்லை. ஆம், ரோமன் கத்தோலிக், புரொட்டஸ்டன்ட், லூத்தரன், சி.எஸ்.ஐ., மெதடிஸ்ட், பாப்திஸ்து, அல்லது புத்தமதம், முகமதியமதம், இந்து மதம் போன்ற எந்தப் பெயரும் ஒருவனை இரட்சியாது. "அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்." அப்படியானால் மற்ற எவரையும் விட்டு விலகி அவரை மாத்திரம் பற்றிக்கொள். அவர் மாத்திரமே உன்னைப் பாவத்திலிருந்து மீட்டுக்கொள்வார்.

"என்னை இரட்சிப்பாரோ?" என்று ஒருவேளை கேட்பாய். ஆம், "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை," என்கிறார் (யோ. 6:37). உன்னைப் புறக்கணிக்கவோ, அல்லது ஏற்றுக்கொள்ளவோ அவரால் கூடும். அவரோ உன்னைத் தள்ளாமல் ஏற்றுக்கொள்வேன் என்று வாக்களிக்கிறார். அப்படிக்கொத்த இரட்சகருக்காக நன்றி செலுத்துவாயாக.

உன் கடமை என்ன?

எல்லாவற்றையும் அவர் செய்துவிட்டதால், இனிமேல் நான் பேசாமல் அமர்ந்திருக்க வேண்டியதுதானே என்பாய். அப்படி அல்ல. அவருடைய அன்பளிப்பை நீ ஏற்றுக்கொள்ள வேண்டும். "தெரிந்துக்கொள்," "ஏற்றுக்கொள்," "பெற்றுக் கொள்" என்று திருவேதம் வலியுறுத்துகின்றது. மீட்பு ஒரு நன்கொடையாக அருளப்படுகிறது. ஆனால் ஒருவன் அதைத் தன் உள்ளத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும்? மருத்துவர் கொடுக்கும் மருந்தை நோயாளி குடிக்காதிருந்தால் அவனுக்கு நன்மையுண்டாகுமா? அப்படியே இரட்சிக்கப்படுவதற்கு இயேசுவை நீ ஏற்றுக்கொள்ளவேண்டும். "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்" (யோ. 1 : 12). அவரை ஏற்றுக்கொள்ளுகிற வர் மாத்திரம் அவருடைய புதல்வரும் புதல்விகளுமாவர். எதையும் அடைவதற்குமுன் ஒருவன் அதைக்குறித்துத் தீர் மானிக்க வேண்டுமல்லவா? அப்படியே இரட்சிக்கப்படுவதற் குக் கிறிஸ்துவை உன் உள்ளத்தில் ஏற்றுக்கொள். ஆம், இப் பொழுதே ஏற்றுக்கொள்.

தலையறிவைக் கொண்டு அதை நம்புவது அல்ல, உள்ளத் தில் அவரை ஏற்றுக்கொள்வது அவசியம். மாடி ஏறி இறங்க உதவும் ஒரு கூண்டில் ஏறினால் அது உன்னை மேலே கொண்டு போகும் என்று நம்புகின்றாய். ஆனால் உண்மையாக அதற்குள் நீ சென்று, அதனால் தூக்கப்பட்டு மேலே செல்வது தான் காரியம். அப்படியே புகைவண்டியில் ஏறினால் ஊர் போய்ச் சேரலாம் என்று அறிவாய். ஆனால் வண்டியில் ஏறி உட்காராமல் அங்குப் போகமுடியுமா? இயேசு உன்னை இரட் சிப்பார் என்று நம்புகின்றாய். ஆனால் நீ நம்புகிறபடியே அவ ரைப் பற்றிப்பிடித்துக்கொள்ளும்வரை இரட்சிப்பின் நிச்ச யத்தை அடையமாட்டாய். ஓர் ஆங்கிலப் புதுத் திருப்புதலில் "ஆண்டவராகிய இயேசுவிலேயே உன் நம்பிக்கையை வைத்து

விடு. அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய்'' என்றிருக்கிறது. எனவே, கிறிஸ்துவை உன் இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவரையே முற்றிலுமாகச் சார்ந்துக்கொள். ஆம், உன்னை அவருக்கு ஒப்புக்கொடுத்து அவரையே நம்பு. விசுவாசப் பற்றுதல்தான் ஒருவனை இரட்சிக்கும்.

இப்பொழுதே இரட்சணிய நாள்

இந்த இரட்சிப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அறிந்திருந்தும், முடிவு செய்யாமல் நீ காலதாமதஞ் செய்கின்றுயா? எதிர்காலமென்பதே தேவனுக்கு இல்லை. அவர் இப்பொழுதே என்கிறுர். "இதோ, இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்", (2 கொரி. 6 : 2), ''நாளையத் தினத்லதக்குறித்துப் பெருமைபாராட்டாதே; ஒருநாள் பிறப்பிப்பதை அறியாயே,'' (நீதி. 27 : 1). எனவே காலத்தைக் கடத்திக்கொண்டிராதே. கிறிஸ்துவை ஏற்றுக்கொள். ஆம், இப்பொழுதே அவரைப் பற்றிக்கொள். இந்தக் கணமே நித்திய வாழ்வு உன்னுடையதாகும். பிறகு பார்க்கலாமென்று சாத்தான் சொல்வதைக் கேட்டால், நித்திய அழிவுக்குள்ளாவாய். இப்பொழுது தானே அவரிடம் வந்து அவரைப் பற்றிப் பிடித்துக்கொள். '' கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்,'' (ஏசா. 55:6). அவரைக் கண்டுபிடிக்க முடியாத ஒரு காலம் வரும். எனவே இப்பொழுதே அவரை ஏற்றுக்கொள்.

2

மனிதனின் வீழ்ச்சியும் ஆண்டவரின் மீட்சியும்

எருசலேம் சிறை கூடத்தின் இருண்ட அறையில் பரபாஸ் நடுக்கத்துடன் முடங்கிப் படுத்திருக்கிறுன். அடுத்த நாள் காலே காவலன் வந்து அந்த அறையின் கதவைத் திறந்து அவனேச் சிலுவையில் அறையும்படி அழைத்துச் செல்வானென்று அறிவான். அந்தப்படியே சிறைக் காவலன் வந்துக் கதவைத் திறந்து, ''பரபாசே உனக்குத் தெரியுமா அந்த நற்செய்தி'' என்றுன். ''அதென்ன? ஐயோ, என் அக்கிரமங்களினிமித்தம் என்னே சிலுவையில் அறையப் போகிறீர்கள், அது தானே'' என்றுன்.? ''இல்லே பரபாசே, கேள், உனக்குப் பதிலாக யாரோ ஒருவர் மரித்தார்,'' என்றுன் காவலன். ''எனக்காக ஒருவர் மரித்தாரா, அதெப்படி எனக்குப் புரியவில்லேயே?'' காவலன் அவனிடம் ''என்னுடன் வா, அவரை உனக்குக் காட்டுகிறேன்'' என்று சொல்லி அவனே எருசலேமின் வீதிகளின் வழியாக அழைத்துச் சென்றுன். ''அதோ அந்தக் குன்றின்மேல் மூன்று சிலுவைகளேப் பார்க்கிருயா?'' ''ஆம், தெரிகிறது,'' என்றுன். ''நடுவிலே ஒருவர் சிலுவையில் தொங்குகின்றுர் அல்லவா?'' ''ஆம், அவரைப் பார்க்கிறேன்'' என்றுன் பரபாஸ். '' அந்தச் சிலுவை உனக்காகச் செய்யப்பட்டது. இன்று காலே அதில் நீ அறையப்பட்டு மரிக்க வேண்டியவனுயிருந்தாய்,'' என்றுன் காவலன். ''அப்படியானுல் அதில் தொங்குகின்றவர் எனக்குப் பதிலாக அதில் அறையுண்டு மரிக்கின்றுரா?'' ''ஆம், உனக்காக ஒருவர் மரித்தார் என்று நான் சொல்லவில்லேயா, அதோ அவரைப்பார்'' என்று காவலன் கூறினுன். ''அவர் ஏன் எனக்குப் பதிலாக மரிக்கிறுர்? ஐயோ, நான்தான் என் அக்கிரமங்களுக்காக சிலுவையில் அறையுண்டு மரிக்கவேண்டும். ஏன் தானே அவர் எனக்குப் பதிலாக மரிக்கிறுர்? ஆயினும் அதை நான் இப்பொழுது நம்புகிறேன்,'' என்றுன் பரபாஸ். ''பரபாசே! உனக்காக அவர் மரிக்கிறுர்'' என்று காவலன் மீண்டும் கூறினுன்.

பாவியாகிய நண்பனே! பரபாகக்காக மட்டுமல்ல. உனக்காகவும் அன்று இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்தார். உன்னுடைய இடத்தில் உனக்குப் பதிலாக: ஆம், உன் பிணையாளியாக அவர் அறையப்பட்டார். உன் பாவங்களை ஏற்றுக் கொண்டு, கெட்டுப்போன பாவியாகிய நீ, நித்திய அழிவுக் குள்ளாகாதபடிக்குத் தமது உயிரை உனக்காகக்கொடுத்தார். அன்பனே, உனக்காக இறைவன் செய்திருக்கும் பெரிய மீட்பைப் பார். மனிதனின் வீழ்ச்சியையும், ஆண்டவர் செய் திருக்கும் மீட்சியையும் குறித்துத் திருவேதம் நான்கு உண்மை களைத் தெரிவிக்கின்றன. அவற்றைக் கவனிப்போம்.

1. தேவனுக்கு முன் எல்லாரும் பாவிகள். அதினாலே அவர்கள் அழிவின் பாதையில் செல்லுகின்றனர்.

இதோ, ஓர் உயர்ந்த செங்குத்தான பாறையிலிருந்து மானிடர் அழிவை நோக்கி விரைந்துச் செல்லுகின்றனரே! "நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்," (ஏசா. 53:6) மானிடர் கெட்டழிந்து போனதினால் அவர்களை மீட்கும்படி இயேசுகிறிஸ்து வந்தார். "இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்," (லூக். 19:10) இறைவனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்தபடியினால் நாம் கெட்டழிந்து விட்டோம். ஒருவர் தவறாமல் எல்லாரும் பாவிகளாயிருக்கிறோம். "எல்லாரும் பாவஞ் செய்து தேவ மகிமையற்றவர்களானோம்," (ரோமர் 3:23). "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை," (ரோமர் 3:10). எனவே பரமன் முன்னிலையில் எல்லாரும் பாவிகளாக இருக்கிறோம். பாவஞ் செய்வதினால் ஒருவன் பாவியாயிராமல், அவன் பாவி யாயிருப்பதினாலேயே பாவஞ்செய்கிறான். நீ பாவ இயல் புடையவனாயிருக்கிறாய். பாவத்திலே உருவாகி, பாவத்தில் பிறந்திருக்கிறாய். மாமரமாயிருப்பதினாலேயே அதில் மாம் பழம் விளைகிறது. அதுபோன்று நாம் பாவிகளாயிருப்பதி னாலேயே பாவஞ்செய்கின்றோம். பொறுப்பிற்குரிய வயதுக்கு வந்தது முதல் ஓயாமல் தீமைகளை நாம் செய்கிறோமல்லவா? "துன்மார்க்கன் ஆபத்து நாளுக்கென்று வைக்கப்படுகிறான்"

(யோபு, 21:30). "துன்மார்க்கரை அழித்து, அவர்கள் நாமத்தை என்றென்றைக்கும் இல்லாதபடி குலைத்துப் போட்டீர்," (சங். 9:5). "துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும் நரகத்திலே தள்ளப்படுவார்கள்," (சங். 9:17). மேலும் சங். 37இல், "பொல்லாதவர் அறுப்புண்டு போவார்கள்; துன்மார்க்கரோ அழிந்துபோவார்கள்; அக்கிரமக்காரர் ஏகமாய் அழிக்கப்படுவார்கள்," என்று எழுதியிருக்கிறது. மல்கியா 4-1இல், இதோ, சூளையைப்போல எரிகிற நாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள் ; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற்போகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்," என்று வாசிக்கிறோம். "அவர்கள் நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்களென்று" பவுல் 2 தெ. 1 : 10இல் பகருகிறான். இறுதியாக வெளிப்படுத்தல் 20 : 15, "ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்படுவான்" என்று அறிவிக்கிறது.

எனவே கிறிஸ்துவுக்குப் புறம்பேயிருக்கிறவன் அழிவுக்குத் தப்பமுடியாது. துன்மார்க்கர் நாசமாவார்கள். ஜீவ் புத்தகத்தில் எவருடைய பெயர் எழுதப்படவில்லையோ அவர்கள் நித்திய அக்கினிக்கு இரையாவார்கள். தேவனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்தபடியினால் ஆக்கினைக்குள்ளாவர்.

அன்பனே, நீ எங்கே இருப்பாய்? துன்மார்க்கரோடே நித்திய அழிவுக்குச் செல்வாயா? பயங்கரமான ஆக்கினை உனக்குண்டு. ஏனென்றால் சர்வவல்லவருக்கு எதிராகக் கலகஞ்செய்தாய். தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளுடன் உனக்கும் நித்திய நரகத்தில் பங்குண்டு. ஒருவேளை நான் அத்தனை பெரிய பாவி அல்ல என்பாய். அற்பமான பாவத்திற்கும் பரலோகத்தில் இடமில்லை. ஒரே பாவம் செய்திருந்தாலும் நீ அங்குப் பிரவேசிக்க முடியாது. ஏனெனில் தேவ

கற்பனையை மீறிஞய்? உன் மனச்சான்றுக்கு விரோதமாகப் பாவஞ்செய்தாய். பரிசுத்தமுள்ள தேவனை சந்திக்கமுடியாது என்பதை நீயே அறிந்திருக்கிறுய். ஆண்டவராகிய இயேசுவை உன் சொந்த இரட்சகராக இதுவரை ஏற்றுக் கொள்ளாதிருந்தால், அவருடைய பேரன்பையும், இரக்கத் தையும் புறக்கணிக்கிறுய். அப்படியாளுல் நீ மகாபெரிய பாதகத்திற்காளானவன் அன்றோ? அவர் அளிக்கும் மன்னிப்பை உதறித்தள்ளி தேவகுமாரனுகிய இயேசு கிறிஸ்துவை அவமதிக்கின்ருயே! எனவே உனக்கு வேறே ஒரு நம்பிக்கையுமில்லை. நீ அழிவின் பாதையில் செல்ல வேண்டியவனே.

2. எல்லோரும் மரிக்கவேண்டியவர், ஆனுல் மரணத் திற்குப் பின்பு நியாயத்தீர்ப்பு உண்டு, அதற்கு எவரும் தப்ப முடியாது.

"பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோம. 6 : 23). "பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்" (எசேக். 18 : 4) என்று பரிசுத்த வேதம் விளம்புகிறது. பாவத்தின் விளைவாகவே மரணம் வந்தது. மரணம் அதன் தண்டனையாயிருக் கிறது. மரணம் என்ருல் உடலைவிட்டு உயிர் பிரிகிறதல்ல, ஆன்மாவின் மரணத்தை நான் குறிப்பிடுகிறேன். ஒருவன் இங்கு இறந்த பிறகு இரண்டாம் மரணத்திற்காளாகிருன். ஒரே தடவை பிறந்தவர் இருமுறை மரிக்கவேண்டும். ஆனுல் இருமுறை பிறந்தவர் ஒரே விசை மரிப்பார். அந்தோ, நித்திய மரணத்தைவிட பயங்கரமானது வேருென்றில்லையே! அதின் வேதனைக்குத் தப்ப நீ விரும்புகிறதில்லையா? சற்று அதைச் சிந்தனை செய். மரணம்! அதாவது நித்தியமான அழிவு. "ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது." உயிர் நம்மை விட்டு பிரிந்த பிறகு நியாயந்தீர்க்கப்படுவதும், அதற்கு நாம் தப்ப முடியாதென்பதும் எத்தனை திடுக்கிடத்தக்கது! ஒருநாள் வரப்போகிறது. அன்று கிறிஸ்துவுக்குப் புறம்பேயிருக்கிறவர் சிருஷ்டிகரைச் சந்திப்பர். இயேசுகிறிஸ்து நியாயாசனத் தில் வீற்றிருப்பார். இன்று அவரை இரட்சகராக அறிவிக்கி

ரேம். அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்ள மனமற்றவர், நியாயாதிபதியாக அவரைச் சந்திக்கவேண்டும். நியாயத் தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறூர் (யோ. 5 : 22). மனிதனுகத் தோன்றின இயேசுவே மனிதருக்குத் தீர்ப்புக் கூறுவார். இவ்வுலகில் முறை மன்றத்தின் தீர்ப்பாளர் முன் நிற்பதும், அவர் தீர்ப்பைப் பெறுவதும் எத்துணை நடுக்கத்திற்குரியது. ஆண்டவர் நீதியாகத் தீர்ப்பளிப்பதினுல் எவரும் தப்பமுடியாது. ஒருவன் நினைத்தவை, பேசியவை, செய்தவை முதலான எல்லாவற்றையும் அவர் அறிவாரல்லோ? அவருக்கு நமது பாவங்கள் மறைந்திருக்க முடியுமா? அவரை அறியாதவர் எல்லாரும் அவர்முன் நிறுத்தப்படுவர். ''ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே!'' *(எபி. 10:31)*

இதையறிவது எத்தனை நடுக்கமாயிருக்கிறது? நமது காரியங்கள் ஒவ்வொன்றும் வெளியரங்கமாக எல்லாருக்கும் முன்பாக விசாரிக்கப்படுமே! உன் வாயைத் திறக்கக்கூடாமல் அப்பொழுது திகைப்பாய். அன்பனே, இரட்சிப்பை ஏற்றுக் கொள்ளாமல் அவர்முன் நிற்கப்போகிறுயா ?

3. நற்கிரியைகளினுல் ஒருவனும் தண்டனைக்குத் தப்பான் அழிவினின்று எந்தச் சபையும் ஒருவனை விடுவியாது.

நற்கிரியைகள் உன்னைத் தற்காக்காது. தான் நம்பியிருந்த நீதியான கிரியைகளை விட்டுப் பவுல் விலகினுன். அவன் சொன்னதாவது: ''கிருபையினுலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல,'' என்பதே *(எபேசி. 2:8,9)*. ''கிரியைகளினுல் அல்ல'' என்ற சொற்களைக் கவனித்தாயா? நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல்,'' (தீத். 3:5). நாம் செய்தவைகளல்ல, ஆண்டவர் நமக்காகச் செய்து முடித்திருப்பதே நம்மை இரட்சிக்கும். ''இரட்சிப்பு கர்த்தருடையது.'' தன்னையே ஒருவன் தூக்க முடியாததுபோல், தன்னைத் தான் அவன் இரட்சித்துக் கொள்ளவும் முடியாது.

மேலும் நித்திய அழிவினின்று எந்தச் சபையும் உன்னைத் தற்காக்காது. ரோமான் சபையோ, சீர்திருத்த சபையோ, அல்லது இஸ்லாம், புத்தமதம், இந்துமதம் போன்ற எதுவும் ஒருவனை இரட்சிக்காது. எந்தச் சபையைச் சேர்ந்தவனுயிருந் தாலும் அது உன் ஆத்துமாவுக்கு மீட்பை அளிக்காது.

நோயாளியைக் குணமாக்காமல், பல நல்ல ஆலோசனை களை மாத்திரம் கூறுவதினால் அவனுக்குப் பயனுண்டா? இறை வன் முன் பாவியாயிருக்கும் உன் பாவ நோய் நீங்க வேண்டு மன்றோ? உன்னை நீயே குணமாக்க முடியாது. எந்த ஒரு சபையிலும் உறுப்பினராகும்படி நான் எவருக்கும் சொல்வ தில்லை. அதை நம்பி அவர்கள் ஏமாற்றமடையக்கூடும். ஏராளமானவர் இரட்சிப்புக்காகத் தங்கள் சபையைச் சார்ந் திருக்கின்றனரே! ஆதலால் திருமுழுக்கைப் பெறவும், ஒரு சபையில் சேரும்படியும் நான் எவரையும் அழைப்பது கிடை யாது. சபையில் இருப்பதினால் ஒருவன் இரட்சிக்கப்பட மாட்டான் என்பது நிச்சயம்.

4. இரட்சிப்பு இறைவனின் அன்பளிப்பாயிருக்கிறது, அதை விசு வாசத்தின் வாயிலாகக் கிறிஸ்துவினிடமிருந்தே ஒருவன் பெறக் கூடும்.

இரட்சிப்பு ஆண்டவரின் அருட்கொடையாயிருக்கிறது. அப்படியானால் அதைச் சம்பாதிக்கவும், உரிமை பாராட்டிப் பெறவும் முடியாது. கிறிஸ்மஸ் பண்டிகையன்று ஒருவர் கொடுக்கும் வெகுமதியை ஏற்றுக்கொண்டு, மிக்க நன்றி என்று மாத்திரம் ஒருவன் சொல்வான். அப்படியே இரட்சிப் பிற்குரிய பெரிய கிரயத்தை ஆண்டவர் செலுத்திவிட்டார். இறைவன் தமது ஒரேபேறான குமாரனை உலகத்திற்கு அளித் தார். கல்வாரி சிலுவையில் இயேசு தமது குருதியைச் சிந்தி னார். பாவத்தின் தண்டனையான சாவை ஏற்றுக்கொண்டு இயேசு தமது உயிரைக் கொடுத்தார். தேவ நீதியை நிறை வேற்றி அதற்கு ஈடுசெய்தார்.

“தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்த ராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்,” (ரோம. 6:23). “தேவன் நமக்கு நித்தியஜீவனைத் தந்திருக்

கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறது. குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.'' எனவே இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதினால் இறைவனின் இரட்சிப்பை இலவசமாகப் பெற்றுக்கொள். நீ கெட்டழியத் தேவையில்லை. என்னால் செலுத்த முடியாத பெரிய கடனிருக்குமானால் அதை மற்றொருவர் எனக்குப் பதிலாகக் கொடுக்க வேண்டும். அல்லது அதற்காக நான் தண்டிக்கப் படுவேன். இறைவன் முன்னிலையில் நமது நிலைமை அப்படியே இருக்கிறது. என்னால் தீர்க்க முடியாத பாக்கியை இயேசு செலுத்தினார். அதை ஒருவன் நம்பி ஒத்துக்கொள்ளுகையில் அவன் விடுதலையடைகிறான். ''கர்த்தரோ நம்முடைய அக்கிரமத்தை அவர்மேல் விழப்பண்ணினார்,'' (ஏசா. 53:6). கிறிஸ்து அவனுடைய பதிலாளியாக ஈடு செலுத்தினபடியினால், இரட்சணியத்தை இறைவன் இலவசமாக அளிக்கின்றார்.

மற்றொன்றையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். கிறிஸ்துவை நீ விசுவாசக் கரத்தினாலேயே பற்றிக்கொள்ள முடியும். தலையறிவினால் அல்ல உள்ளத்தில் அதை நம்ப வேண்டும். ஒரு புகைவண்டியையும், நிதிமனையையும் நம்புவதைப்போன்று அவரை நம்பு. உன் விசுவாசம் செயல் வகையில் ஈடுபட வேண்டும். இம்மைக்கும், நித்தியத்திற்குமாக அவரை முற்றிலும் சார்ந்துக்கொள். ஆம், அவரை ஏற்றுக்கொள். ''அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும் படி அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்'' (யோ. 1:12). ''ஆண்டவராகிய இயேசுவில் நம்பிக்கை வை, நீ இரட்சிக்கப் படுவாய்'' (பு. தி. ஆங்கிலம் அப்.16:31). வெறும் அறிவாற்றலுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. உன் கொள்கைகளைக் குறித்தும், நம்பிக்கையைக் குறித்தும் நான் கேட்கவில்லை. இயேசுகிறிஸ்துவை நீ பற்றிப் பிடித்துக் கொண்டாயா? இப்பொழுது அவருடைய பிள்ளையாயிருக்கிறாயா? இப்படியாக ஆண்டவராகிய ஒருவரே உன்னை இரட்சிக்கிறார். தண்ணீரில் மூழ்கின ஒருவனை யாராவது ஒருவர் தூக்கி

எடுக்க வேண்டுமல்லவா? அப்படிச் செய்ய அவரும் தன்னி
ருக்குள் சூழ்குவார். அந்தச் சூழ்நிலையில் நன்னடக்கையான
வாழ்க்கையையும் சபை உறுப்பினராயிருந்ததையும் நீக்க
சூழ்கிறவனுக்கு இடமில்லை. அவ்வாறே ஆண்டவராகிய
இயேசு என்ற ஒருவர் உன்னைத் தூக்கி எடுக்கின்றார். அவர்
உன்னை இரட்சிக்காவிடில் நீ தப்பமுடியாது. அவர் ஒருவரே
இரட்சகர். அதனால் "குமாரனை உடையவன் ஜீவனை உடைய
வன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவனில்லாத
வன்" என்று வேதம் விளம்புகின்றது. கிறிஸ்துவில் நித்திய
மான வாழ்க்கையைக் கண்டடைகிறோம். அதனால் அவரை
உன் இரட்சகராக ஏற்றுக்கொள்.

வெளி. 3:20இல், "இதோ, வாசற்படியிலே நின்று தட்டு
கிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு கதவைத் திறந்
தால் அவனிடத்தில் நான் பிரவேசிப்பேன்" என்றார். அப்படி
யாலும் கிறிஸ்து உன் உள்ளத்திற்கு வெளியே நிற்கின்றார்.
தாழ்ப்பாள் உள்ளேயிருக்கிறது. அதைத் திறந்து அவரை
வரும்படி அழைக்க வேண்டியவன் நீயே. அப்படிச் செய்தால்
அவர் உள்ளே வருவார். நீ இரட்சிக்கப்படுவாய். அவர் உன்
வாழ்க்கையில் பிரவேசிக்கும்போது நீ மறுபடியும் பிறக்கிறாய்.
அதாவது ஆவியானவரால் பரலோகத்தின் புத்துயிரைப்
பெற்றுக்கொள்கிறாய். மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குள்
வந்திருக்கிறாய். இயேசுகிறிஸ்துவை உன் சொந்த இரட்ச
கராக ஏற்றுக்கொண்டு அவரை நம்பியிருப்பதினால், இன்றும்
என்றுமாக நீ இரட்சிக்கப்பட்டிருக்கிறாய்.

"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை;
நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும்,
மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல்
வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை." உலகின்
வேறெந்த மதங்களும், ஆலயங்களும், சொரூபங்களும் எவரை
யும் இரட்சியாது. ஆகவே மனிதரால் தோன்றின எல்லா
மார்க்கங்களையும் விட்டு ஒருவன் விலகவேண்டும். அதைத்
தோற்றுவித்தவர் மாண்டு மடிந்தனரே! அவர்களால் எப்படி
ஒருவனை இரட்சிக்கமுடியும்? ஆனால் இரட்சகராகிய இயேசு

என்றென்றுமாக உயிரோடிருக்கிறார். "அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறார்" (எபி. 7:25). மற்றபடி இயேசுவாலும் இரட்சிக்க முடியாது. அவர் மரித்தார் மீண்டும் உயிர்த்தார். இன்று அவர் உயிரோடிருக்கிறார். ஜீவித்திருக்கும் இயேசுவே நம்மை இரட்சிக்கிறார். அவர் கல்லறை வெறுமையாயிருக்கிறதே!

"நானே வழி.....என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று இயேசு வலியுறுத்தியிருக்கிறார் (யோ. 14:6). எல்லா சமயங்களும் இறைவனிடம் செல்லும் பாதைகளல்ல. ஒரே வழிதான் உண்டு, அது இயேசு தான். முகமது, புத்தர், போப்பாண்டவர், கிருஷ்ணன் போன்ற எவருமில்லை. அவரைத்தவிர வேறே எந்த வழியுமில்லை. ஒரு மார்க்கமோ, சபையோ, திருமுழுக்கோ, திடப்படுத்தலோ, ஏனைய நற்கிரியைகளோ மற்றும் உத்தம வாழ்க்கையோ ஒருவனை இரட்சிக்காது. இயேசுவைத் தவிர இறைவனிடம் செல்ல மற்றொரு பாதையில்லை. ஆம், யூதமார்க்கமோ மிஷன்மார்க்கமோ அல்லது லுத்தரன், கத்தோலிக் முதலிய இதர சபைகளோ அல்ல. இரட்சகராகிய கிறிஸ்து "நானே வழி" என்கிறார்.

அப்படியானால் நண்பனே, இறைவனின் குமாரனாகிய உயிர்த்தெழுந்த இயேசுவை நம்பு. அவரை ஏற்றுக்கொள். அவர் பேரில் விசுவாசமாயிரு. மற்றெல்லாவற்றையும் விட்டு விலகு. அவர் மாத்திரம் உன்னை இரட்சிக்கிறவராதலால், அவரை அண்டிக்கொள். உயிருள்ள மீட்பரே இரட்சிப்பார். இதை நான் தெளிவுபடுத்திவிட்டேன். இப்போது உன் நிலைமை என்ன? நீ இரட்சிக்கப்பட்டாயா? அல்லது அதற்குப் புறம்பே இருக்கிறாயா? மனிதர் செல்லும் அழிவின் பாதையா அல்லது இறைவனின் மீட்பின் பாதையா? இரட்சிக்கப்படாதவனாயிருந்தால் இப்பொழுதே இயேசுகிறிஸ்துவை உன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள வருந்திக் கேட்கிறேன். "உன் நம்பிக்கையை ஆண்டவராகிய இயேசுவின் பேரில் வை, அப்பொழுது நீ இரட்சிப்பைப் பெறுவாய்." அப்படிச் செய்வாயா? ஆம், அதை இப்பொழுதே செய்.

3

நித்தியத்துக்கான கேள்வி

யாதொரு பெரிய குற்றத்திற்கும் ஆளாகாதிருந்த ஒரு வாலிபன் சீட்டாடுகையில் கோபங்கொண்டுத் தன் எதிரியைச் சுட்டுவிட்டான். அவனைத் தூக்கிலிட வேண்டுமென்று நிர்மானித்தனர். ஆனால் இச்சம்பவத்திற்கு முன்பு எப்போதும் அவன் சிறந்த குணசாலியாயிருந்தபடியினால், அவனுடைய இனத்தார் அவனைப் பாதுகாக்க விரும்பினர். ஆகவே ஊராரிடமிருந்து ஏராளமான கையொப்பங்களைப் பெற்று மாநிலத்தலைவருக்கு அனுப்பினர். நல்ல கிறிஸ்தவராயிருந்த அவர் அப்படியே மன்னிப்புச்சீட்டை எழுதி எடுத்துக் கொண்டு, ஒரு குருவானவரின் உடையில் சிறை அறைக்கு வந்தார். அந்த வாலிபனோ கோபத்துடன் அவரைப்பார்த்து, " நீர் என்னிடம் ஒன்றும் பேசவேண்டாம்." உம்மைப்போல் அநேகரைச் சந்தித்துவிட்டேன், எங்கள் வீட்டில் எவ்வளவோ பக்தியாயிருந்தோமே" என்றான். மாநிலத்தலைவர் அவனிடம் " சற்று பொறு, உனக்கு ஒரு செய்தியை அறிவிக்கப் போகிறேன், அதைக்கேள் " என்றார். அவனோ மீண்டும் சீறி விழுந்து " நீர் வெளியே போகாவிடில் நான் காவல் காரனைக் கூப்பிடுவேன்," என்றான். மறுபடியும் அவர் மகனே, மிகவும் நல்ல ஒரு செய்தியைச் சொல்லுகிறேன், அதைக் கேள் " என்று வருந்திக் கேட்டார். அவனோ மீண்டும் " உடனே நீர் இவ்விடத்தை விட்டுப் போகாவிடில் காவல் காரனைக் கூப்பிடுவேன் " என்று அவரைப் பயமுறுத்தினான். ஆகவே தலைவர் மனமுடைந்து அவனை விட்டுப்போய் விட்டார்.

சிறிது நேரத்திற்குப் பின்பு காவலாளன் வந்து, "மாநிலத்தலைவர் உன்னைச் சந்தித்தாரல்லவா?" என்று வினவினான். அதற்கு வாலிபன் "குருவானவரின் உடையில் வந்தவரா அவர்? என்று கேட்க, காவலாளன் ஆம், அவர்

உனக்கு மன்னிப்பு அளிக்கும்படி வந்தார், நீயோ அவரைத் துரத்திவிட்டாயே,'' என்று வருத்தத்துடன் சொன்னான். திடுக்கிட்ட வாலிபனோ ''எனக்குக் காகிதம், பேனா கொடு'' என்று அவற்றை வாங்கி, ''மாநிலத்தலைவர் அவர்களே எனக்கு மன்னியுங்கள், உம்மை இன்னாரென்று நான் அறிய வில்லை,'' என்றெழுதி அனுப்பினான். மாநிலத்தலைவரோ இனிமேல் அவன் காரியத்தில் எனக்கு அக்கறையில்லை என்று அதில் எழுதிவிட்டார். தூக்கிலிடும் முன்பு அவனிடம் ''ஏதாவது நீ சொல்ல வேண்டுமா,'' என்று கேட்டபோது, அவன் ''அமெரிக்காவின் இளைஞருக்கு நான் தெரிவிப்ப தாவது: நான் கொலை செய்ததிற்காக மரிக்காமல், மாநிலத் தலைவர் அளித்த மன்னிப்பின் செய்திக்குச் செவிசாய்க்காமல் மரிக்கிறேன்'' என்பதே.

நண்பனே! நீயும் உன் பாவங்களுக்காக அல்ல, தேவன் தமது குமாரன் மூலம் உனக்களிக்கும் பாவமன்னிப்பை ஏற்றுக்கொள்ளாமல் போவதற்காகவே ஆக்கினையடை வாய். இயேசுகிறிஸ்துவை நீ புறக்கணித்தால் ஆண்டவர் என்ன செய்வார்? இரட்சிப்புக்கான ஒரே வழியை நீ அசட்டை செய்கிறாயல்லவா?

1892 இல் வில்சனும், போல்டரும் அஞ்சலைக் கொள்ளை யடித்ததற்காக மரணாக்கினைக்குள்ளாயினர். போல்டரைத் தூக்கிலிட்டனர். ஆனால் வில்சனை நீதிமன்றம் மன்னித்தது. ஆனால் மன்னிப்பை அவன் ஏற்க மறுத்தான். அப்பொழுது தலைமைத்தீர்ப்பாளர் கூறினதாவது: ''மன்னிப்பை ஒருவன் ஏற்றுக்கொள்ளாவிடில் அதை அவனுக்கு வழங்க முடியாது. அதைப் புறக்கணிக்க அவனுக்கு உரிமை உண்டு. அவனைக் கட்டாயப்படுத்தமாட்டோம்,'' என்பதே. எனவே மன் னிப்பை அடைவது உன் பொறுப்பாகும். ''இவ்வளவு பெரி தான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போ மானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்?'' (எபி. 2 : 4).

பிலாத்து

"கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்யவேண்டும்?" (மத். 27:22) என்று பிலாத்து மக்களிடம் வினவினான். இதுவே நித்தியத்தை முடிவு செய்யும் கேள்வியாக விளங்குகிறது. இயேசுவை விடுவிக்க பிலாத்து பன்முறை முயற்சித்தான். பிறகுப் பரபாசை அவருடன் நிறுத்தி "இவர்களில் யாரை விடுதலை செய்ய வேண்டுமென்றான்," ஆசாரியர் தூண்டுதலினால், "பரபாஸ், பரபாஸ்" என்று எல்லாரும் கத்தினர். அப்பொழுது பிலாத்து, "இயேசுவை நான் என்ன செய்யவேண்டும் ?" என்று கேட்டான். தன் பொறுப்பைப் பிறர் மேல் தள்ளிவிட பிலாத்து முயற்சித்தான். மேலும் உங்கள் பிரமாணத்தின்படி அவனுக்குத் தீர்ப்புச் செய்யுங்களென்று யூதரிடம் கூறினான். அவர்கள், ஒருவனுக்கு மரணாக்கினைக் கொடுக்க எங்களுக்கு அதிகாரமில்லை என்றனர். பின்னர் ஏரோதுவினிடம் இயேசுவை அனுப்பினான். அவனும் இயேசுவைத் திரும்ப பிலாத்துவினிடமே அனுப்பிவிட்டான். இறுதியாக ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டுவரச் சொல்லி, "இதற்கு நான் பொறுப்பாளி அல்ல," என்று தன் கைகளைக் கழுவினான். பிலாத்துவைக் குறித்து ஒரு கட்டுக்கதை உண்டு. அதாவது, அவன் அடிநரகத்திலிருந்து இப்போதும் ஓயாமல் தன் கைகளைக் கழுவிக் கொண்டே இருக்கிறானும். ஆனாலும் அவன் கைகள் இரத்தக் கறையாயிருக்கக் காண்கிறான். எத்தனைத் தடவைக் கழுவினாலும் அது அகலாதபடியினால், "இது ஒருபோதும் சுத்தமாகாதா?" என்றுக் கேட்டுக்கொண்டே இருக்கிறானும். "பிலாத்தே! நீ தேவகுமாரனின் இரத்தத்திற்குக் குற்றவாளியானதினால் அது ஒருபோதும் கழுவப்படமுடியாது." ஆம், பிலாத்து இன்றுவரை ஆவியின் உலகில் உயிரோடிருக்கிறான். சென்ற பத்தொன்பது நூற்றாண்டுகளாக தனக்கு முன்பாக நின்ற இயேசுவுக்குத் தான் செய்ததை மறக்கமுடியாமலிருக்கிறான். பிலாத்துவுக்குக் கிடைத்த வாய்ப்பு கடந்துபோய்விட்டது. அவன் இனி இரட்சிக்கப் படவே முடியாது. அந்தோ, நித்திய முடிவைச் செய்துவிட்

டானே! ஆனால் நீயோ இன்னும் உயிரோடிருக்கிறாய். ஆன தால் இயேசுவை முன்னிட்டு என்ன செய்யப்போகிறே னென்று தீர்மானிக்கக் கூடிய நிலைமையிலிருக்கின்றாய். அதை யடுத்தே உன் நித்திய வாழ்வு முடிவு செய்யப்படும்.

இரண்டில் ஒன்றைத் தெரிந்துகொள்

இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள ஒருவன் முன் வர லாம், அல்லது அவரைப் புறக்கணித்துவிடலாம். ஒருவேளை இரண்டையும் செய்யாமல் நான் நடு நிலைமை வகிப்பேன் என்பாயா? அது முடியாது. நான் ஒரு நன்கொடையை உனக்களிப்பேனென்றால், அதை ஏற்றுக்கொள்ளவோ, அல்லது மறுத்துவிடவோ உன்னால் முடியும். இயேசுவைக் குறித்துக் கேள்விப்படாதிருக்கும்வரை அந்தப் பொறுப்பு உனக்கில்லை. ஆனால் அவரை ஏற்றுக்கொள்ளும்படி ஒருவர் அழைத்த உடனே, அவரைப்பற்றி நீ ஏதாவது ஒன்றைத் தீர்மானம் செய்ய வேண்டியவனாயிருக்கிறாய், இன்று அவரை நம்பி ஏற்றுக்கொள்ளாவிடில் அவரை வேண்டாமென்றுத் தள்ளுகிறாய். தொடர்ந்து அவரைத் தள்ளிவிடப் போகின் றாயா அல்லது உன் சொந்த இரட்சகரென்று ஒப்புக்கொள்ளப் போகின்றாயா? அதை முடிவு செய்வது உன் கடமையாகும்.

இறைவனின் தீர்ப்புக்கு அடிப்படையாயிருப்பது எது?

இறுதியாக நீ முடிவு செய்வதையடுத்தே அவர் உனக்குத் தீர்ப்பளிப்பார். இன்றைக்கு இயேசுவை ஏற்றுக்கொள்ள உனக்கு மனமில்லை. ஒருவேளை அடுத்தநாள் உன் மனத்தை மாற்றி அதைச் செய்யலாம் என்று நினைப்பாய். ஆனால் அதற்குள்ளாக நீ மரித்தால் அவரை ஏற்றுக்கொள்ளாதவ னாக நித்திய முடிவை அடைவாய். கடைசி தீர்ப்புநாளில் பாவத்தைக் குறித்தல்ல, ஒருவன் இயேசுவையடுத்து என்ன செய்தான் என்பதே கேள்வியாயிருக்கும். நான் ஆலயத் துக்குச் சென்றேன், மிகவும் பக்தியாயிருந்தேன் என்று ஒரு வன் சொல்வதையல்ல, "என் குமாரனை இயேசுவை ஏற்றுக்

கொண்டாயா" என்றே தேவன் கேட்பார். ஆண்டவரே, நான் நல்லவனுக வாழ்ந்தேன் என்று ஒருவன் சொன்னுல், அவர் உன் வாழ்க்கையைப் பற்றி நான் விசாரிக்கவில்லை "என் திருக்குமாரனை ஏற்றுக்கொண்டாயா"? என்பார்.

அல்லது, "உமது குமாரன் மகா சிறந்தவரென்று நான் அறிவேன்," என்று நீ சொன்னுல், அவர் "அவரைக் குறித்து நீ என்ன நினைத்தாய் என்று கேட்கவில்லை, அவரை ஏற்றுக் கொண்டாயா அல்லது அசட்டை செய்தாயா என்பது தான் என் கேள்வி' என்பார்.

அன்பனே! அப்போது பதில் சொல்லக் கூடாமல் திகைப் பாய். ஏனென்ருல், அவரை நீ புறக்கணித்துவிட்டாய். அந்தோ, உன் தீவினைகளுக்காக அல்ல. நீ செய்யத் தவறின தற்காகவே அழிவுக்காளாவாய்.

மக்கள் அழிவது ஏன்?

ஒரு சபையைச் சேர்ந்திருந்த வாலிப பெண் ஒருத்தி நோய்வாய்பட்டிருந்தாள். ஒரு நாள் மெய் மறந்த நிலையில் அவள் ஒரு கனவு கண்டாள். அதில் மரித்துப்போன அவள் பரலோகத்தின் வாசலில் காபிரியேல் தூதன் முன் நின்று கொண்டிருந்தாள். ஜீவபுத்தகத்தில் அவள் பெயரைத் தூதன் தேடிப்பார்த்து, வெகு துக்கத்துடன் "உன் பெயரைக் காணேமே" என்ருன். "ஐயோ, என் பெயர் இல்லையா? கட்டாயம் இருக்க வேண்டும்," என்ருள் பெண்மணி. தூதன் மறுபடியும் தேடிவிட்டு, "உன் பெயரைக் காணேம்" என் ருன். அதற்கு அவள் "நான் என்ன செய்தேன், என்பேர் ஏன் இல்லை?" என்று கூக்குரலிட்டாள். அப்பொழுது தூதன், "நீ தகாததொன்றைச் செய்ததினுல் அல்ல. ஆனுல் பெரிய இரட்சணியத்தை ஏற்காமல் போனுயல்லவா?" என்று வினு வினுன். திடுக்கிட்டு விழித்தெழுந்த அவள் உடல் நலமில்லா திருந்தும் படுக்கையை விட்டு இறங்கி, முழங்காலூன்றி, தன் உள்ளத்தில் அவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டாள்.

ஆகவே, மக்கள் அழிவது ஏன்? "விசுவாசமில்லாதவனா யிருந்தபடியினால்," என்று யோவான் 3:18 இல் ஆண்டவர் தெரிவிக்கிறார். எனவே பாதாளமொரு சபையில் உறுப்பினரா யிராததினாலாவது, அல்லது பாவம் செய்ததினாலாவது அல்ல. "அவரை விசுவாசியாதபடியினால்" ஒருவன் ஆக்கினைக்குட்படுகிறான்.

கொலைகாரன், சூதுகாரன், திருடன், இப்படிப்பட்ட ஒருவனாயிருந்தானென்று ஆண்டவர் உன்னை ஆக்கினைக்குள்ளாக்க மாட்டார். அந்தக் குற்றங்களையெல்லாம் அவர் மன்னிக்கிறார். ஆனால் தமது குமாரனை அசட்டை செய்யும் பாவத்தை அவர் மன்னிக்கவே மாட்டார். இயேசுகிறிஸ்துவை நீ ஏற்றுக்கொள்ளாவிட்டால் தண்டனைக்குத் தப்ப வேறு வழியின்றித் திகைப்பாய்.

இரக்கமுள்ள மனிதன்

இறைவன் அப்படிச் செய்வது நியாயமில்லை என்பாய். இவ்வளவு நல்லவனாக இருந்த என்னை இயேசுவை ஏற்றுக் கொள்ளாததினிமித்தம் தண்டிக்கலாமா என்று ஒருவேளை கேட்கிறாய். ஓர் ஊரில் மிகவும் அன்புள்ள ஒரு மனிதனிருக்கிறான். அவன் தன் பெற்றோரை நேசிக்கிறான். பிள்ளைகளை நேசிக்கிறான். தன் நண்பரிடமும் மற்றவரிடமும் அன்பாயிருக்கிறான். ஆனால் தான் நேசித்துக் காப்பாற்றுவதாக வாக்களித்த மனைவியை ஒருநாள் இழிவாகப் பேசி அடித்ததினால் அவள் தரையில் அரை உயிராகக் கிடக்கிறாள். அவனைச் சிறை செய்துவிட்டனர். நாலுபேர் வந்து, "இவனை நன்கறிவோம். தன் பெற்றோரையும் பிள்ளைகளையும் நேசித்தவன். எல்லாரிடமும் மிகவும் அன்பாயிருந்தவன்" என்று சாட்சியம் அளிக்கின்றனர். ஆனால் நீதிபதி எழுந்து நின்று "அவன் மற்றெல்லாரிடத்திலும் அன்பாயிருந்தானா என்று நான் விசாரிக்கவில்லை. தன் மனைவியை நேசித்தானா என்பது தான் கேள்வி" என்கிறார். அதற்குச் சாட்சியளிக்க ஒருவனும் இல்லாததால் அவன் குற்றவாளியாவான். அப்படியே

நீயும் எல்லாரிடமும் இரக்கமுள்ளவனுயிருந்தும், தேவ குமாரனை நேசியாவிட்டால் தண்டனைக்குத் தப்பமாட்டாய். ஆகவே, உன் வாழ்க்கை எப்படிப்பட்டது? பிறரிடம் நல்ல வனாக நடந்து கொண்டாயா? என்பதைக் குறித்தல்ல, நீ இயேசுவை அசட்டை பண்ணினுயா என்றே இறைவன் விசாரிப்பார். அவருடைய திருக்குமாரனை அசட்டை செய்ப வர் தண்டனைக்குள்ளாவர். ஆம், பத்தொன்பது நூற்றுண்டு களுக்கு முன்னர், இறைவன் தன் ஏக புதல்வனை உனக்காகக் கொடுத்தார். இயேசுகிறிஸ்து உன் பாவங்களைத் தமது சரீரத்தில் சுமந்து சிலுவையில் மரித்தார். இப்பொழுது இல வசமாக இரட்சிப்பை அளிக்கின்றுர். அவரை உன் இரட்ச கராக ஏற்றுக்கொள்ள வருந்தியழைக்கின்றுர். அப்படிச் செய்ய நீ மறுத்தால் தண்டனைக்குத் தப்பமுடியுமா? எனவே, இயேசுகிறிஸ்துவுடன் உனக்குள்ள உறவையடுத்தே முடி வான தீர்ப்புச் செய்யப்படும்.

சென்ற காலமெல்லாம் அவர் உன் இருதயத்தின் வாசல் முன் நின்றுகொண்டிருக்கிறுர். அவரை ஏற்றுக்கொள்ள மனமற்றவனுயிருக்கிருயே!

மேலும் எல்லாரிடத்திலும் கொண்டிருந்த உன் அன்பு எப்படி இயேசுவினிடம் நீ அன்பற்றவனுயிருந்ததற்கு ஈடு செய்யமுடியும்? தேவகுமாரனைப் புறக்கணிக்கும் பாவத்திற்கு இணையாக ஒருவன் வேறெந்த பயங்கர பாவத்தையும் செய்ய முடியாது. அதுவே என்றும் மன்னிக்கப்பட முடியாத பொல் லாங்காக இருக்கும்.

உன் எதிரி

இயேசுவை ஏற்றுக்கொள்ளாததற்காக என்னைக் குற்ற வாளியாகத் தீர்ப்பது அநியாயம் என்று ஒருவேளை சொல்லு வாய்.

சரி, உனக்கு ஒரு பகையாளி இருக்கிறுன் என்று வைத்துக் கொள், கணக்கற்ற தீமைகளை அவன் உனக்குச் செய்திருக் கிறுன். மேலும், அவனுலே உன் இல்லம் சிதைந்து, குடும்ப

வாழ்க்கைப் பாழாயிற்று. அப்படியிருந்தும் ஒரு நாள் அவன் பசியினால் சாகக்கிடக்கிறானென்று கேள்வியுற்று, உன் உள்ளம் உருகி, அவனைத் தேடிச் சென்றாய். அவனை வீட்டிற்கு அழைத்து வந்து, போதுமான நல்ல ஆகாரத்தை அவன் முன் வைத்துப் புசிக்கும்படி வேண்டுகிறாய். அவனோ உனக்குச் செவிசாய்க்காமலும், தன் உயிரைப் பொருட்படுத்தாமலும், அந்த உணவை உட்கொள்ள மறுத்துச் செத்துப்போகிறான். அவன் ஏன் சாகவேண்டும்? அவனைக் காப்பாற்ற வேறே ஏதாவது செய்ய முடியுமா? உயிர் பிழைக்க மனமின்றியே அவன் செத்தான். பிழைக்கும்படி உணவைக் கொடுத்து, அதைச் சாப்பிடும்படிக்கு வருந்திக் கேட்டும், அந்தோ, அவன் சாவைத் தெரிந்து கொண்டானே!

இயேசு இல்லாமல்

பிலாத்துவின் கேள்வியை வேறு விதமாகக் கேட்டால் நல்லது. அதாவது "இயேசு இல்லாமல் நான் என்ன செய் வேன்?" என்று விசாரிப்போம். சாகும்வேளையில் இயேசு இல் லாமல்என்ன செய்வாய்? அந்தக் கடைசி சத்துருவைத் தனி மையாகச் சந்திக்க நீ துணிவாயா? அந்த மரண இருளின் பள் ளத்தாக்கில் இயேசுவைத் துணையாகக் கொள்ளாமல் என்னால் செல்லமுடியாது. மேலும் கடைசி தீர்ப்புநாளில் இயேசு இல்லாமல் நீ என்ன செய்வாய்? இறைவன் முன் தன்னந் தனியாக நிற்க முடியுமா? இவ்வுலகிலுள்ள செல்வத்தை யெல்லாம் கொடுத்தாலும், உறுதுணையாளரான இயேசு வின்றி அவர் முன் நிற்க நான் துணியேன்?

நீடூழிக்காலமாக இயேசுவின்றி நீ என்ன செய்வாய்? ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் ஏதோ ஓரிடத்தில் நீ இருப் பாய்? அதுவே நித்தியத்தின் ஆரம்ப நாளாயிருக்கும். இயேசு வில்லாமல் முடிவில்லாத அக்காலத்தை ஒருவன் எப் படிப் பின்னிடுவான்? துக்கம், துயரம் உன்னைச் சூழ்ந்துக் கொள்கையில் இயேசுவின்றி என்ன செய்வாய்? இப்போது ஒருக்கால் இளமை பருவத்திலிருக்கிறாய். இதுவரை அருமை

யானவரை இழக்கக் கொடாதிருப்பாய். ஆனால் சில ஆண்டுகளுக்குள் துன்பம் துயரத்திற்கு நீ ஆளாவாய். அவற்றை இயேசுவின்றி எப்படிச் சகிப்பாய்?

இரு அமெரிக்க இந்திய தாய்மார்

நான் பத்தொன்பது வயதாயிருக்கையில் அலாஸ்கா என்ற இடத்திலிருந்த அமெரிக்க பழங்குடி மக்கள் மத்தியில் திருத்தொண்டாற்றினேன். செத்துப்போன அவர்களுடைய சிசு ஒன்றை பசிபிக் கடற்கரையோரத்தில் புதைத்தனர். குழியில் மண்ணைப் போடுகிறதைக் கண்ட மாத்திரத்தில், அதன் தாய் தன் கைகளினால் தலைமயிரைப் பிய்த்தெடுத்துக், கதற ஆரம்பித்தாள். இரத்தம் கசியும் தலையுடன் அலறிக்கொண்டு ஊருக்குள் வந்தாள். சில நாள் கழித்து மற்றொரு குழந்தை இறந்தது. அந்த மக்களின் மரபுபடியே, வரிசையாக அவர்கள் என் பின்னே வருகையில், அந்தக் குழந்தையின் உடலை நான் தூக்கிச்சென்றேன். குழித்தோண்டி அதை அடக்கஞ் செய்கையில், அதனுடைய தாயும் கண்ணீர் உதிர்த்தாள். ஆனால் தன் தலைமயிரைப் பிடுங்கவும் கதறவுமில்லை. அமைதலாக அழுதுகொண்டே வீடு திரும்பினாள். ஏன் இந்த வேற்றுமை? இருவரும் பிள்ளைகளை இழந்தனர். எல்லா தாய்மார்களைப்போன்று அவர்களும் குழந்தைகளை நேசித்தனர். ஆனால் ஒருவள் துக்கத்தைச் சகித்துக்கொண்டாள். மற்றவளால் அப்படிச்செய்ய முடியவில்லை. காரணம் யாதென்றால், முந்தினவள் தேவனை அறியாதவளானபடியினால், செத்துப்போன தன் பிள்ளையைத் திரும்பப் பார்க்கவே முடியாதென்று தலைமுடியைப் பிடிங்கிக்கொண்டுப் புலம்பினாள். அடுத்தவள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவள். உயிர்த்தெழுதலைக்குறித்த நிச்சயமுடையவள். "அவன் என்னிடத்திற்கு திரும்பி வரமாட்டான். ஆனால் நான் அவ்விடத்திற்குப்போவேன்" என்ற நம்பிக்கை அவளுக்குண்டு. பெரிய மேய்ப்பர் தன் அருமையான ஆட்டுக்குட்டியை அவர் மடியில் வைத்திருந்து, தான் அவரிடம் போகையில் அதைத் திரும்பத் தன்னிடம் தருவார் என்றறிவாள். அப்பொழுது நீடூழி காலமாக அப்பிள்ளை அவளோடிருக்கும். கல்லறையில் மரித்தவரை அடக்கஞ்செய்ய நான் செல்லும் போதெல்லாம்

இதைக் கவனிக்கிறேன். இயேசுவை அறிந்திருப்பவர் நாங்கள் மீண்டும் இறந்துபோனவரைச் சந்திப்போம் என்ற மன உறுதியினால் துக்கத்தைத் தாங்கிக்கொள்ளுகின்றனர். ஆனால் அவரை அறியாதவர் மனமுடைந்து துயரத்தில் ஆழ்ந்து விடுகின்றனர்.

உன் தீர்மானம்

"கிறிஸ்து என்னும் இயேசுவைக்குறித்து நான் என்ன செய்யவேண்டும்" என்ற கேள்விக்குச் சரியான விடையளிக்கும்போது மாத்திரம், "இயேசு என்னைக்கொண்டு என்ன செய்வார்" என்ற அடுத்த கேள்வி பிறக்கும். ஆம், இப்பொழுது இயேசுவைப்பற்றி நீ செய்கிற முடிவைப் பொறுத்தே, அவர் உன்னை இனிமேல் பயன்படுத்தக்கூடும். இந்தத் தீர்மானத்தை நீதான் செய்யவேண்டும். மற்றொருவர் உனக்காக அதை ஏற்சமுடியாது. இயேசுவைக்குறித்து என்ன செய்யபோகிறாய்? ஒருவன் எந்தச்சபையைச் சேர்ந்தவன், எவ்விதமாகத் திருமுழுக்கைப் பெற்றான் என்பதைக் குறித்துக் கவலையில்லை. இயேசுகிறிஸ்துவுடன் ஒருவனுக்குள்ள உறவே முதன்மையான காரியமாகும்,

அவரைக்குறித்து என்ன செய்யபோகிறாய்? எதை நம்புகிறாயென்றல்ல, அவரையடுத்து என்ன செய்வாய் என்பதே கேள்வி. அது உன் தலை அறிவை அல்ல, உன் உள்ளத்தையும், விருப்பத்தையும் தட்டிக்கேட்கிறது. செயல்முறையில் அவரையடுத்து என்ன செய்வாய்? அவரை ஏற்றுக் கொள்ளப் போகிறாயா, அல்லது புறக்கணிக்கப் போகிறாயா? உன் தீர்மானம் நித்தியத்திற்கானது.

இப்பொழுதே அதைச் செய்யும்படி உருக்கமாக உன்னைக் கேட்கிறேன். இன்றே அதை முடிவுசெய், நாளையத்தினத்தை நம்பாதே. "இதோ, இப்போதே அனுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்," (2 கொரிந்தியர் 6 : 2). நண்பனே, உன் மறுமொழி என்ன? அவரை ஏற்றுக்கொண்டால் இரட்சிக்கப்படுவாய், மறுத்துவிட்டால் நித்திய அழிவைக் காண்பாய். ஆம், இப்பொழுதே அவரைப்பற்றிப் பிடித்துக் கொள்.

4

விசுவாசிப்பதென்றால் என்ன ?

இரட்சிக்கப்பட்டேனா இல்லையா என்று நிச்சயமற்றிருந்த காலத்தில் நான் ஒரு சங்கத்தில் செய்திகளைக் கொண்டுபோகின்ற வேலையைச் செய்துகொண்டிருந்தேன். அக்கடிதங்களைக் கொண்டுபோகையில் என் மனத்தில் ஒரே காரியம் உறுத்திக் கொண்டிருக்கும். அதாவது நான் இரட்சிக்கப்பட்டேனா, இல்லையா என்று தெரியவில்லையே, அந்த நிச்சயம் கிடைத்தால் எத்தனையாக உம்முடைய இரட்சணியத்தில் நான் களிகூறுவேன் ஆண்டவரே, என்று சொல்லுவேன்.

விசுவாசத்தினால் இரட்சிக்கப்படுவதை நம்பாத ஒரு குழுவினர் நடத்தின கூட்டங்களுக்குச் சென்றேன். இரவு தோறும் பிரசங்கத்திற்கு பின்பு மக்களை அழைக்கையில் நான் முன்சென்று முழங்கால் படியிடுவேன். அவர்களும் என் இரட்சிப்புக்காக மன்றாடுவர். நான் பயத்துடன் வீடு திரும்புவேன். 16 வயதாயிருந்தவனாகிய நான் "பரலோகம் போகிறேனா அல்லது நரகம் போகிறேனா" என்று அறியாமல் மனக் குழப்பமுற்றிருந்தேன்.

ஒரு ஞாயிறன்று பிரசித்தி பெற்ற திருத்தொண்டரின் பிரசங்கத்தைக் கேட்கும்படி அவருடைய ஆலயத்திற்குச் சென்றேன். ஆண்டவரே அவர் தமது அருள் உரையில் விசுவாசம் என்பதற்கு விளக்கம் கூறவேண்டுமென்று ஜெபித்து விட்டு வெகுக் கவனமாக அவர் ஆற்றின அருள் உரைக்குச் செவிசாய்த்தேன். ஆனாலும் இரட்சிப்பின் நிச்சயமில்லாதவனாகவே வீடு திரும்பினேன். ஏனென்றால் "ஆண்டவராகிய இயேசுவை விசுவாசி அப்பொழுது இரட்சிக்கப்படுவாய்" என்று பன்முறை வலியுறுத்தியும், விசுவாசிப்பதென்றால் என்ன என்பதை அவர் தெளிவுபடுத்தவில்லை. அக்காலத்திலிருந்த மக்கள் எல்லாரும் இறைவனையும், திருவேதத்தையும், கிறிஸ்துவையும், பொதுவாக விசுவாசிப்பவராகவே இருந்த

ன். நாத்திகரையும், பரலோகத்தை நம்பாதவரையும் மாற்ற நீர் ஆறுதல் அளிக்கும் பலர் குருமாராகும், நிருபர்கள், போதகர்களாக இருந்தனர். என்னும் அவர்கள் நம்பிக்கை நிச்சயமாக்கிய வரையில் கொள்ளவில்லை.

இன்றைய உங்கள் நிலை என்ன? அந்நேர நாத்தி கனாக்காரனை விசாரித்தாலும், இரட்சிப்பின் நிச்ச யத்தை பெற்றுக்கொண்டீர்களா? பிறகு "பாருங்கள், நீங்கள் மகிழ்ச்சி" என்ற நிலைமையை ஒரு சிறு நூல் நான் வாசித் தேன். அப்பொழுது என் சந்தேகம் நீங்கத் தொலைந்து இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றேன். ஆக பாவங்களிலிருந்து விடுவிக்கப் படுதல், அதைப்பெற்றபின் அதன் பிறகு என் னைக் காக்கவும் முடிந்தது.

மூன்று படிகள்

இரட்சிப்புக்கேற்ற விசுவாசத்திற்கு மூன்று காரியங்களை ஒருவர் செய்யவேண்டும். முதல் இரண்டு காரியங்களை மட்டும் கடைப்பிடித்து ஒருவர் நிற்கலாம். ஆனால் மூன்றாவது படியில் ஏறின பிறகு அப்பொழுதே இரட்சிப்பின் நிச்சயம் கிடைக்கும்.

சத்தியத்தைக் கேள்

"அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசு வாசிப்பார்கள்." ஆம், விசுவாசிக்கும் முன்பு இயேசுவு டைய இரட்சண்யத்தின் விவரத்தை ஒருவன் தெரிந்து கொள்ளுதல் அவசியம். அதற்காகவே நாட்டை நாடுகளுக்கும் தேவன் ஊழியர்களை அனுப்புகிறார். இதைக் குறித்துக் கேள்விப்படாத மக்களுக்கு முதலாவது அவரைப் பற்றிய நற்செய்தியைப் பறைசாற்றவேண்டும். ஆனால் உங்களில் அநேகர் கிறிஸ்துவைப் பற்றிய விவரங்களை அறி வீர்கள்.

அதை விசுவாசி

விசுவாசம் என்பதின் அர்த்தமென்ன? நம் அன்றாட வாழ்க்கையில் ஒருவரை ஒப்புக்கொள்வதே விசுவாசம் என்பது அகராதியின்

விளக்கம். ஆகவே இந்த உண்மையை சரி என்று உன் சிந்தையில் ஒப்புக்கொள்ளுகையில் இரண்டாம் படியில் நீ அடியெடுத்து வைக்கிறாய்.

பழைய ஏற்பாட்டாகமங்களில் இந்த எபிரேயு சொல்லை ''நம்பிக்கை'' என்று மொழிபெயர்த்திருக்கின்னர். ஆனால் புதிய ஏற்பாட்டில் அச்சொல்லை ''விசுவாசம்'' என்றே திருப்பியிருக்கின்றனர். ஆங்கிலத் திருப்புதலிலும் இதே விதமான தவறு செய்திருக்கின்றனர். ''விசுவாசிப்பது நமது புத்திக்கடுத்ததாயிருப்பதினால், இயேசுகிறிஸ்துவைப் பற்றின உண்மைகளை எல்லாம் நீ மனப்பூர்வமாக ஒத்துக்கொண்டாலும், நீ இன்னும் இரட்சிக்கப்படாதவனாகவே இருக்கிறாய். ஏனென்றால் பிசாசுகளும் அதை விசுவாசித்து நடுங்குகின்றன என்று பரிசுத்த வேதம் விளம்பவில்லையா? ஆம், நம்மைவிட சற்று அதிகமாக கிறிஸ்து தேவன் என்பதை அறிந்து அவைகள் நடுங்குகின்றன. ஆனால் அந்த அறிவினால் பிசாசுகளின் வாழ்க்கையில் எந்தவித மாறுதலும் உண்டாவதில்லை. நிச்சயமாக அழிவு வருமென்று மாத்திரம் அவைகளுக்குத் தெரியும்.

ஒரு சபைக் குழுவினிடம் ''நீங்கள் எப்படி ஒருவரைச் சபை உறுப்பினராக ஏற்கின்றனர்'' என்று விசாரித்தேன். ''இறைவன் உன்னை நேசிக்கிறாரென்றும், இயேசுகிறிஸ்து உனக்காக மரித்தாரென்றும் விசுவாசிக்கிறாயா?'' என்ற கேள்விக்கு, அவர் ''ஆம்'' என்றால் நாங்கள் அவரைச் சபை உறுப்பினராக ஏற்போம் என்றனர். பரிசுத்த வேதத்தை ஒப்புக்கொள்ளுகிறவரும், இயேசு பாவங்களுக்காக மரித்தாரென்பதையும் விசுவாசிப்பர் அல்லவா? அதனால் மாத்திரம் அவர்கள் வாழ்க்கை மாறி உத்தம கிறிஸ்தவராகின்றனரா?

இப்படியாக வேத சித்தாந்தங்களைப் பலர் ஒப்புக்கொண்டும், சபையில் உறுப்பினராயிருந்தும் இரட்சிப்பின் நிச்சயமற்றவராக இருப்பர். மக்களை என் சபையில் சேர்த்துக்கொள்ளுகையில் நான் அவரிடம் ''நீ மறுபடியும் பிறந்திருக்கிறாயா? நீ இரட்சிக்கப்பட்டிருக்கிறாயா? இயேசுவை உன்

இரட்சகராக ஏற்றுக்கொண்டாயா?'' என்றே விசாரிப்பேன். அவை ஒருவனுடைய சொந்த அனுபவத்தைப் பற்றினதா யிருக்கின்றதல்லவா ?

நம்பிக்கை வை

உண்மையான இரட்சிப்பிற்கு ஒருவன் நம்பிக்கை வைக்க வேண்டும். அண்மையில் வெளிவந்த ஆங்கில புதுத் திருப்புதலில், இந்த விசுவாசம் என்ற சொல்லின் மொழிபெயர்ப்புச் சரியாயிருக்கிறது. அதாவது : ''இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டுமென்று'' சிறைச்சாலேக்காரன் கேட்டதற்கு மறு மொழியாகப் பவுல், ''ஆண்டவராகிய இயேசுவில் நம்பிக்கை வை; அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய்'' என்று அதில் திருப்பியிருக்கிறது. (அப். 16 : 30-31). இந்தத் திருப்புதலில் விசுவாசம் என்ற சொல்லுக்குப் பதிலாக ''அவரில் பற்றுதல் வை'' என்றும், ''ஆண்டவராகிய இயேசுவில் நம்பிக்கைக் வை'' என்றுமிருக்கிறது. நம்பிக்கை என்பது ஒருவன் தன் அறிவை கொண்டல்ல, தன் சித்தத்தைப் பயன்படுத்தித் தீர்மானிக்கும் காரியமாகும். அந்தோ, இன்று ''விசுவாசிக்கிறவரான'' எண்ணிறந்தவர் ஒருபோதும் ஆண்டவனில் நம்பிக்கை வைக்காதிருக்கின்றனரே! சங். 4 : 5இல் இரட்சிக்கப்படும்படி '' கர்த்தர்மேல் நம்பிக்கையா யிருங்களென்று'' சொல்லியிருக்கிறது. ஆகவே புதிய ஏற்பாட்டில் ''ஆண்டவரை விசுவாசி'' என்று நாம் வாசிக்கும் போது, பழைய ஏற்பாட்டுச் சொல்லேப் பயன்படுத்தி, ஆண்டவர் பேரில் நம்பிக்கை வை, அப்பொழுது இரட்சிக்கப் படுவாயென்று சொல்வதுதான் நியாயம். அப்படியானுல் ''நம்பிக்கை'' என்பதின் கருத்தென்ன ?

சுய முயற்சியை விட்டு விலகு

முதலாவது உன் சொந்த முயற்சிகளேக் கைவிடு. ஒருவனுக்கு நீச்சலே கற்றுக்கொடுக்கிறவன் அவனிடம், '' தண்ணீர் உன் பளுவைத் தாங்கிக்கொள்ளும், அதனுல் தண்ணீரை முற்றிலுமாக நம்பி, அதில் நீ மிதந்துப்பார்,'' என்பான்

ஆனால் அவனோ தண்ணீரில் விழுந்து அமிழ்ந்து போவான். திரும்ப அவன் எழுந்து வந்த உடனே அவனிடம் "நீ உன் கை கால்களை இறுக்கி வைத்துக்கொண்டாய். மேலும் மூச்சை அடக்கிக்கொண்டாயல்லவா? பெரிய கப்பல்களை இந்தத் தண்ணீர் மிதக்கச் செய்கிறதே. அதை நீ நம்பக்கூடாதா? உன் மூச்சை அடக்காமல் மிதந்துப்பார்" என்று சொல்லுவான். அதைக் கடைப்பிடிக்கையில் அவன் மிதப்பான். அதைப்போன்றே இறைவன் அளிக்கும் இந்த இரட்சணியத்திலும் நம்பிக்கையுடன் மிதக்க இவர் முன் வரமாட்டீர்களா? பலவற்றைச் செய்ய முற்படுவதினாலும், சுய பக்தியினாலும் பலனில்லை. ஒருவன் நீந்தும்படிக்குத் தண்ணீரில் மிதப்பதைப் போன்றே, அவரைச் சமூலமாகச் சார்ந்துக்கொள். யாதாமொன்றைச் செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கையில் ஆண்டவரில் நீ நம்பிக்கை வைக்கமாட்டாய்.

ஒப்படைத்தல்

அடுத்தபடியாக நம்பிக்கை வைக்கிறவன் தன்னை ஒப்புக்கொடுப்பான். திருமணஞ்செய்வது இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது. ஒரு பெண்ணைத் திருமணஞ்செய்ய ஒருவன் விரும்புகிறான். அதற்கான மண உறுதி நடந்தப் பின்னும் பெண் தன் பெற்றோருடன் தங்கி, அவர்களுடைய ஆதரவைப் பெறுகின்றாள். ஆனால் தேவாலயத்தில் சபை போதகர் முன் இருவரும் ஒரு நாள் வந்து நிற்கின்றனர். அவருடைய கேள்விகளுக்கு மறுமொழியாக மணமகள் "ஆம், அவரை என் கணவனாக ஏற்றுக்கொள்ளுகிறேன்" என்று வாக்களித்துத் தன்னை அவனுக்கு ஒப்புக்கொடுக்கிறாள். அன்று முதல் அவளை ஆதரித்துப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பை வாழ்க்கைத் துணைவன் ஏற்றுக்கொள்ளுகிறான். உண்மைதான், மண உறுதி நடந்த நாளில் அவனை முற்றிலுமாக அவள் விசுவாசித்திருப்பாள். எனினும் அவளை நம்பி தன்னை அவனுக்கு ஒப்புக்கொடுத்தப் பின்னரே, அவன் பொறுப்பை ஏற்று, அவளைப் பாதுகாக்கிறான். அந்தப்படியே இயேசுகிறிஸ்துவுக்கு உன்னை சமூலமாக ஒப்புக்கொடுத்து

அவர் பேரில் நம்பிக்கை வைக்கையில் நீ இரட்சிக்கப்படுகிறாய்.

இவ்விதமாக உன்னை அவருக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறாயா? அது உன் மேல் விழுந்த கடமையாகும். அந்தப் பெண்மணி மணவாளனுக்குத் தன் வாழ்க்கையைச் சமர்ப்பித்து விட்டாள். அதைப்போன்றே ஆண்டவராகிய இயேசுவுக்கு இன்றும் என்றுமாக நீ சரணடைகையில், இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெறுவாய். ஆம், அவ்வண்ணமாகவே பரம மணவாளனுடைய கரத்தில் உன் உள்ளத்தை இப்போதே ஒப்புக்கொடு. ஆண்டவரே உம்மை என் தலைவராக ஏற்றுக்கொண்டு, இதுமுதல் உமக்கே உண்மையாயிருப்பேன் என்று சொல். அப்பொழுது நீ அவருக்குச் சொந்தமானவளாக இருப்பாய். அது முதற்கொண்டு உன்னை இரட்சிக்கும் பொறுப்பை அவர் ஏற்பார்.

இதோ, ஒருவன் தண்ணீரில் மூழ்கிக்கொண்டிருக்கிறான். கரையில் திறமையாக நீந்துபவன் ஒருவன் நின்றுகொண்டு அவனை அமைதியாகக் கவனிக்கிறான். இரண்டாம் தடவையும் தண்ணீரில் அமிழ்ந்து, தன் கைகளை அடித்து உயிர் தப்பும்படி போராடுகிறான். "எனக்கு உதவி செய்யுங்கள்" என்று கூப்பிடுகிறான். உடனே கரையில் நின்றவன் குதித்து அவனைக் காப்பாற்றுகிறான். ஏன் அவன் அதுவரைக் காத்துக்கொண்டிருந்தான்? தண்ணீரில் மூழ்கினவன் தன்னையே இரட்சிக்கப் போராடினது பெருந்தடையாயிருந்தது. ஒன்றுஞ்செய்யக் கூடாமல் தன்னை ஒப்புக்கொடுக்கும்வரை அவனைக் காப்பாற்ற முடியாது. அதைப்போன்றே உன்னை மீட்க வல்லவரான உயிர்த்தெழுந்த இரட்சகருக்கு உன்னை ஒப்படைக்கையில் நீயும் இரட்சிக்கப்படுவாய். அவரைக்குறித்த விவரங்களை விசுவாசிப்பதினால் பலனில்லை. அவர்மேல் உன் முழு நம்பிக்கை வைத்து, அவரைப் பற்றிப்பிடித்துக்கொள். எனவே விசுவாசி என்றல்ல, இயேசுவில் உன் நம்பிக்கையை வை என்றே இரட்சிப்பைத் தேடுகிற மக்களிடம் நான் சொல்லுகிறேன்.

செயல்படு

மூன்ருவதாக செயல்படுவதே நம்பிக்கையாகும். இதன் கருத்தை விளக்குவேன்.

நயாகரா நீர் வீழ்ச்சி இதோ, பயங்கர குமுறலுடன் பாதாளத்தில் பாய்ந்து ஓடுகிறது. 1858-ம் ஆண்டு, ஜூன் மாதம் 30ம் தேதி காலையில் இக்கரைக்கும் அக்கரைக்குமாக 1100 அடி நீளமான கயிறு குறுக்கே கட்டப்பட்டிருந்தது. உலகப்பிரசித்திபெற்ற சார்லஸ் பிலான்டின் என்பவன் அதன் மேல் நடக்கிறதைப் பார்ப்பதற்கு நாளு திசையின்று மக்கள் திரண்டு வந்திருந்தனர். 40 பவுண்டு எடையுள்ள நீண்ட கோலினுல் விழாமல் தன்னைத் தற்காத்துக் கொண்டவனுக அவன் கயிற்றின் மேல் நடந்தான். சூழ்ந்திருந்தவர் கண் சிமிட்டாமல் அதைக் கவனித்தனர். அவன் அக்கரை சேர்ந்ததும் மக்களின் மகிழ்ச்சியின் ஆரவாரம் நீர்வீழ்ச்சியின் சத்தத்தையும் மிஞ்சிவிட்டது. வெற்றிப் பெற்ற அவனே ''ஒருவன் என் முதுகின் மேல் ஏறிக்கொண்டால் நான் அவனையும் கயிற்றின் வழியாக அக்கரைக்குக் கொண்டு போவேன்'' என்ருன். அங்கு நின்றுகொண்டிருந்த ஒருவனைப் பார்த்து, ''உன்னைச் சுமந்துகொண்டு அக்கரைச் சேர்ப்பே னென்று நீ நம்புகிருயா? என்று வினவினுன். ''ஆம், அதை நிச்சயமாக நம்புகிறேன்,'' என்று சொன்னதினுல், அவனைத் தன்மேல் ஏறிக்கொள்ள அழைத்தான். அவனே பயந்து நழுவி விட்டான். பிறகு தனது மேலாளராகிய ஹென்ரி கோல்கூானிடம், ''நீர் என்னை நம்புகின்றீரா'' என்று விசாரித்தான். ''ஆம், அதைப்பற்றி எனக்குச் சற்றும் சந்தேகமில்லை'' ''அப்படியானுல் என்னேடு வாரும்'' என்று அழைத்துத் தன்னை நம்பி வந்த அவனைத் தூக்கிக் கொண்டான்.

38 அடி நீளமான கழியைப் பிடித்துக்கொண்டு மீண்டும் நடந்தான். அதை மக்கள் திகிலுடன் பார்த்துக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு அடியாக வைத்து கயிற்றின் மையத்துக்கு வந்து இக்கரைக்குச் சமீபித்து விட்டான். இருவருக்கும் எவ்வளவு நம்பிக்கை, என்ன துணிவு! ஆனுல் கரையிலிருந்த

கம்பத்தின் ஆதாரக் கயிற்றைச் சூதாட்டக்காரனொருவன் அறுத்துவிட்டான். அதனால் அவர்கள் அதிகமாக ஊசலாட ஆரம்பித்தனர். உடனே கோல்கார்டை முதுகினின்று இறங்கச் சொல்லி ஒரு காலில் நின்று தன் கையை அவன் தோளின்மேல் வைத்து, இனிமேல் உன்னையும் பிலான்டினாகவே நினைத்துக்கொள். என்னோடு ஒருமனப்பட்டவனாயிரு. நான் ஒரு பக்கம் சாய்கையில் நீயும் அப்பக்கமே சாய வேண்டும் என்று சொல்லி, திரும்ப அவனை முதுகின்மேல் ஏற்றிக்கொண்டு ஓட ஆரம்பித்தான். இருவரும் பத்திரமாக வந்துச் சேர்ந்தனர். குழுமியிருந்தவர்கள் வானத்தைப் பிளக்கத்தக்கதாக ஆரவாரஞ் செய்தனர். ஆம், இவ்வுலகத்தையும் நித்தியத்தையும் இரட்சணியத்தின் கயிறு இணைக்கின்றது. இயேசுகிறிஸ்து ஒருவர் தான் அதைக் கடந்துச் செல்ல முடியும். அவரைப் பற்றின விவரங்களையெல்லாம் நீ அறிந்திருக்கிறாய். ஆனால் முதல் மனிதனைப்போன்று அதை விசுவாசித்தாலும், அடுத்தவனைப் போல் உன்னை அவருக்கு ஒப்புக்கொடுத்தாலொழிய, நீ கடந்துச் செல்ல முடியாது. விசுவாசிப்பதுடன் அவரை நம்பி உன்னை ஒப்புக் கொடுக்கவும் வேண்டும். அன்பனே, இப்படியாக அவரை நீ நம்பினதுண்டா? தலையறிவால் மாத்திரம் ஒத்துக்கொண்டு, முக்கியமான இக்காரியத்தைச் செய்யத் தவறிவிட்டாயா? அப்படியானால் இப்பொழுது அதை உறுதியாகத் தீர்மானித்து "ஆண்டவராகிய இயேசுவில் உன் நம்பிக்கையை வை." அப்படிச் செய்தால் இரட்சிக்கப்படுவாய். இப்பொழுதே அப்படிச் செய்வாயா?

5

மீட்பின் வழி

இவ்வுலகில் வாழ்கின்றவரை இரு குழுவினராகப் பிரிக்கலாம். அதாவது அவர்களைக் குற்றவாளிகள், குற்ற மற்றவரென்று அழைக்கலாம். இதில் ஏதாவது ஒருவரைச் சேர்ந்தவனாக நீ இருப்பாய். ஆம், மெய்க்கிறிஸ்தவனாகவோ அல்லது பேர்க்கிறிஸ்தவனாகவோ இருப்பாய்.

இரண்டே வழிகளின் வாயிலாக மறுலோகம் செல்லு கின்றோம். அழிவுக்கும், மரணத்துக்கும் கொண்டு போகும் பரந்த வழியும்; மோட்சத்துக்கும், நித்திய வாழ்வுக்கும் நடத்துகின்ற இடுக்கமான வழியும் இருக்கின்றன. இதற்கு மத்தியில் மற்றொரு பாதையில்லை. பரம வீட்டிற்கோ அல்லது நகரத்திற்கோ நீ சென்றுக் கொண்டிருக்கிறாய்.

இறைவன், சாத்தான் என்ற இரு தலைவர்களில் ஒருவரை நீ சேவிப்பாய். தம்பனே, நீ எந்த வகுப்பைச் சேர்ந்தவன்? எந்த வழியில் செல்லுகின்றாய்? யாரைச் சேவிக்கின்றாய்?

ஒரு குழுவினர் குற்றவாளிகளாவர், அடுத்தவர் குற்ற மற்றவராவர். ஒருவன் நல்லவனோ, கெட்டவனோ பெரிய பாவியோ, சின்ன பாவியோ யாராயினும் அவன் குற்றவாளி யாயோ அல்லது குற்றமற்றவனாயோ இருப்பான். பல சபை களிலும் உன் பெயரைப் பதிவு செய்திருப்பாய். மேலும் அதற்கடுத்த பல ஊழியங்களைச் செய்வாய். அல்லது பெரிய குற்றத்தைச்செய்து சிறைச்சாலைக்குச் சென்றிருப்பாய். அதைப் பற்றிக் கவலையில்லை. நீ இரட்சிக்கப் படாதவனாக இருந்தால் குற்றவாளியாக அழிவின் பாதையில் செல்லு கிறாய். ஒருக்கால் நற்பண்புள்ளவனாயும், நாகரீகமுள்ளவனாயு மிருந்தாலும், ஆண்டவர் உன்னைச் சீர்கெட்ட பாவிகளில் ஒருவனாகவே கருதி, உன்னைக் குற்றவாளியாகத் தீர்க்கின் றார். "வித்தியாசமே இல்லை, எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவராயினர்," *(ரோமர் 3:22-23).*

ஜலப்பிரளயம்

பேழையிலிருந்த நோவாவையும் அவன் குடும்பத்தாரையும் தவிர மற்றெல்லாரையும் ஜலப்பிரளயம் அழித்துவிட்டதன்றோ? ஒழுக்கப் பண்புடனிருந்த பாவிகளும், ஏனைய துன்மார்க்கருடன் சேர்ந்து அழிந்தனர். இரு கூட்டத்தாரைக் காண்கின்றோம். அவர்கள் பேழைக்குள் இருந்தவர், அல்லது அதற்கு வெளியே இருந்தவராவர். நல்லவரோ கெட்டவரோ, அற்ப குற்றவாளிகளோ அல்லது பெரிய பாவிகளோ அவர்கள் எல்லாரும் ஆண்டவருக்குக் கீழ்ப்படியாதவராவர். எச்சரிப்பை ஏற்றுக்கொண்டு மீட்புக்காக அவர்களில் ஒருவரும் பேழைக்குள் பிரவேசிக்கவில்லை. உள்ளே இரட்சிப்பும் வெளியே அழிவுமிருந்தது. மலையின் உச்சிக்கு ஏறியும், கூக்குரலிட்டும் ஜெபம் பண்ணியும் ஒருவரும் தப்பவில்லை. ஏனென்றால் பேழையில் நுழைய மனமற்றவராயிருந்தனர். பெரிய கொலைபாதகராயிருந்ததினால் அல்ல, தப்பும்படி அளிக்கப்பட்ட ஒரே வழியை அசட்டை பண்ணினதினால் நிர்மூலமாயினரன்றோ? "இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம்" (எபிரெயர் 2:3). மேலும் "துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும், நரகத்திலே தள்ளப்படுவார்கள்" (சங்கீதம் 9:17). எந்தப் பயங்கரப் பாவத்தையும் செய்யாமலிருந்தும், இறைவனின் மீட்பை நீ அசட்டை செய்கிறாய். இயேசுகிறிஸ்துவாகிய இரட்சணிய பேழைக்குள் வராதிருந்தால் அன்பனே, நீ அழிவது திண்ணம்.

சம பூமியின் பட்டணங்கள்

சோதோம் கொமோரா என்ற பட்டணங்களை ஆண்டவர் அழித்தபோது அங்குள்ள எல்லாருமே பயங்கர பாவிகளாயிருந்தனரா? சிலர் பெரிய குற்றவாளிகளாயும் மற்றவர் அற்பமான பாவங்களைச் செய்தவராயுமிருப்பர். ஆயினும் எல்லாரும் இறைவன் முன் குற்றவாளிகளாயிருந்தனர். எனவே அங்கிருந்த பெரியோர், சிறியோர், நல்லார், பொல்

லார் யாவரும் அக்கினிக்கும் கந்தகத்திற்கும் இரையாயினர். ஏனென்றால் அந்த பட்டணங்களில் இருந்த அனைவரும் குற்றவாளிகளாவர்.

எகிப்தின் தலைப்பிள்ளை

எகிப்திலிருந்த தலைப்பிள்ளைகளெல்லாரும் பொல்லாதவ ராயிருந்தனர் என்போமா? சிறந்த தலைவர், கவிஞர், அறி வாளிகள் மதகுருக்கள் முதலானவர் அங்கிருந்தனர். ஆயி னும் ஆண்டவர், "அந்த இரத்தத்தை நான் காணும்போது உங்களை விட்டுக் கடந்துபோவேன்" என்றார் (யாத்திராகமம் 12:13) எனவே இரத்தம் தெளிக்கப்பட்டிருந்த வீடுகள் மரணத்தினின்றுப் பாதுகாக்கப்பட்டன. பாவத்தின் அகோரத்தையல்ல, கீழ்ப்படிதலையும், இரத்தம் தெளிக்கப் பட்டதா இல்லையா என்றும் ஆண்டவர் கவனித்தார். இங் கும் இரு வகுப்பினரைக் காண்கின்றோமல்லவா? அதாவது இரத்தத்தினால் தங்களைப் பாதுகாத்துக் கொண்டவரும், அப்படிச் செய்யத் தவறினவருமாவர்.

நண்பனே, இயேசுவினுடைய இரத்தத்தினால் மறைக்கப் பட்டிருக்கின்றாயா? "ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே," (லேவியராகமம் 17:11). "இரத்தஞ் சிந்துதலில்லாமல் மன்னிப்பில்லை." (எபிரெயர் 9:22) "அந்த இரத்தத்தை நான் காணும்போது உங்களைவிட்டுக் கடந்து போவேன்" என்று உண்மையுள்ள தேவன் வாக்களித்திருக் கின்றார் (யாத்திராகமம் 12:13) கிறிஸ்துவின் இரத்தம் உன் மேல் தெளிக்கப்பட்டிருக்கிறதா? இல்லாவிடில் ஆண்டவ ரின் ஆக்கினை உனக்கு வரும். நித்திய மரணத்திற்கு நீ தப்ப முடியாது.

எல்லாரும் குற்றவாளிகள்

ஒரு சிறைச்சாலையில் சகலவிதமான குற்றவாளிகளையும் காணலாம். கொலை செய்தவர்களுடன் நாட்டுச் சட்டத் திற்குக் கீழ்ப்படியாதவர், போர்முனைக்குச் செல்ல மறுப்ப

வர் முதலானவரும் அங்கிருப்பர். தண்ணீரில் மூழ்கிச் சாகும்படி ஒருவன் ஒரு மைல் ஆழம் போகத் தேவையில்லை. அவன் தலைக்குமேல் ஓரடித் தண்ணீர் இருந்தாலும் போதுமல்லவா? அப்படியே ஒரே பாவத்தைச் செய்வதாலும் பரலோகத்தில் உனக்கு இடமில்லாமல் போகும். "ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாவான்" (யாக்கோபு 2 : 10) என்று ஆண்டவர் சொல்லுகிறார். ஒரே காரியத்தில் தவறி ஆம். ஒரு கற்பனையை மாத்திரம் மீறி இப்படியாக ஒரே குற்றத்தைச் செய்வதினால் நீ எல்லாவற்றிலும் குற்றவாளியாகிறது எத்தனைத் திடுக்கிடத்தக்க உண்மை.

பத்து வளையமுள்ள சங்கிலி

பத்து வளையங்களாலான ஒரு சங்கிலியைப் பிடித்துத் தொங்குகையில் ஒருவன் திடீரென்று அறுந்து விழுகின்றான். ஆனால் சங்கிலியின் ஒரே வளையம் அதில் உடைந்திருக்கிறதென்றுக் காண்கிறான். மற்ற ஒன்பதும் சரியாயிருந்தும் சங்கிலி அறுந்தது. அப்படியே தேவனின் பத்து கற்பனைகளில் ஒன்றை மீறினாலும் நாம் தண்டனைக்குத் தப்பமுடியாது. ஆண்டவரின் பிரமாணங்களில் ஒன்றையாவது நீ மீறியிருக்கிறாயல்லவா? அது எதுவென்று கேட்கத் தேவையில்லை. ஒருக்கால் அது கொலையாயிருக்கலாம், அல்லது நீ சொன்ன ஒரு பொய்யாக இருக்கலாம். ஆம், ஒரு வேளை அது முறைகேடான நடத்தையாயிருக்கும் அல்லது அற்ப திருட்டாயுமிருக்கும். ஏதாயிருப்பினும் தேவனின் கற்பனையை மீறினதினால் நீ ஆக்கினைக்குள்ளானவனாக இருக்கிறாய்.

மகா பெரிய பாவம்

ஒருவேளை நான் ஒரு குற்றவாளியல்ல, நான் எந்தப் பாவத்தையும் செய்தது கிடையாது என்பாய். ஆனால் உன்னை மகா பெரிய பாதகனென்று நான் சொல்லுவேன். ஏனென்றால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப் புறக்கணித்து விட்டாய். அவர் அன்பை அலட்சியம் செய்து,

அவர் உருக்கமான வேண்டுதல்களை அசட்டைபண்ணி, மேலும் அவர் இரத்தத்தை உன் காலின்கீழ் மிதித்து விட்டாயே! அவர் அளிக்கும் இரக்கத்தின் நன்கொடையை ஏற்க மறுத்து விட்டாய். ஆதனால் பரிசுத்த வேதாகமம் விளம்பும் மகா கொடிய பாவமாகிய அவநம்பிக்கை என்ற குற்றத்திற்கு நீ ஆளானவன். ஆம், செய்நன்றி மறத்தல் என்ற பாதகத்தைச் செய்திருக்கின்றாய். தமது திருக்குமாரனை அன்பளிப்பாக அவர் தந்தும், நீ அவரை வேண்டாமென்கின் றாய். பரிசுத்த ஆவியானவராகிய "அவர் வந்து, பாவத்தைக் குறித்து உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்." அந்த பாவமானது என்ன? கொலையா, விபசாரமா, களவா? இல்லை. "அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக்குறித்து" என்று உரைத்தார். (யோவான் 16 : 8, 9). அவிசுவாசமே மன்னிக்க முடியாத பெரிய பாவமாகும். உலக நண்பர் ஒருவர் அளிக்கும் பரிசை ஏற்க மறுத்து நாம் அவர் மனத்தைப் புண்படுத்துவோமா? அப்படியிருக்க தேவனுடைய நித்திய இரட்சிப்பாகும். ஈவை அசட்டை பண்ணுவது எத்தனை பயங்கரம் ஆகவே இன்னமும் நீ இரட்சிக்கப்படாதிருந்தால் அவிசுவாசமாகிய பெரிய குற்றத் தைச் செய்கிறாய்.

எவ்வளவு அதிகமான பாவம் என்பதல்ல

திரளான பாவத்தைச் செய்தாயா என்றல்ல, இயேசுவை யடுத்து எப்படி நடந்து கொண்டாய் என்றே இறைவன் விசாரிப்பார். அவரை உன் இரட்சகராக ஏற்றுக்கொண் டாயா? "கிறிஸ்து என்ற இயேசுவைக்குறித்து நான் என்ன செய்ய வேண்டும்?" என்று பிலாத்துக் கேட்டதைவிட மற்றொரு பெரிய கேள்வி இல்லை. இயேசுவோடு உனக்கிருக்கும் உறவையடுத்தே உன் இறுதி முடிவு நிர்ணயிக்கப்படும். இப்பொழுது உன்னைக் குற்றவாளியென்று ஒத்துக்கொள் வாயா? பாவத்தைக்குறித்து நீ உணர்த்தப்படவில்லையா? ஒரே பாவம் உன்னை பரலோகத்தினின்று விலக்கிவிடும். அப்படிச் செய்வது நியாயமா என்று கேட்பாய். ஆனால்

மற்ருேர் உண்மையை நீ அறிந்திருக்க வேண்டும். அதாவது ஏற்கனவே தகுதியாக்கப்பட்டவர்களுக்காகவே பரலோகத்தை ஆண்டவர் ஆயத்தப்படுத்தியிருக்கிருர். பாவத்துடன் ஆண்டவர் உன்னைச் சேர்த்துக் கொண்டால் அங்கு நீ சந்தோஷமாயிருப்பாயா? இப்போதே தேவ பக்தரின் மத்தியிலிருக்க விரும்புகிருயா? இல்லையல்லவா? உன்னைப் போன்றே பாவத்தில் பிரியங்கொள்ளுகிறவருடன் நீ உறவாடுகிருய். அதனுல் மோட்சவீடு செல்ல இங்கேயே ஒருவன் தகுதியாக்கப்பட வேண்டும். மறுபிறப்பின் வாயிலாக நீ புதிய தன்மையைப் பெறுகின்ருய். அப்பொழுது தான் பரலோகத்தின் பாக்கியங்களில் நாம் களிப்புற்றிருப்போம். தூய்மையற்றவர்களுக்கு மோட்சத்தில் இடமில்லை. ஏனெனில் ''இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்,'' (மத்தேயு 5:8) என்று வாசிக்கிருேம்.

இரட்சிப்பைக்குறித்துத் தவருன கருத்துக்கள்

இரட்சிக்கப்படாதவராயிருந்தும் தங்களை உத்தம கிறிஸ்தவரென்று நினைத்துக் கொண்டிருக்கும் மக்களை எங்கும் காண்கிறேன். சபைகளிலிருக்கும் ஆயிரக்கணக்கானவருக்கு, நித்தியத்தைப்பற்றின தங்கள் நம்பிக்கையைக்குறித்துச் சரியான நியாயத்தைக் கூறமுடியாது. இறைவனைச் சந்திக்க ஆயத்தமாயிருக்கிருேமென்றுச் சொல்லியும், கிறிஸ்துவைப் பற்றிக் கேள்விப்படாத ஒருவனைப் போன்றே இரட்சணியத்தின் வழியை அவர்கள் அறியாதிருக்கின்றனர்.

அவர்கள் மனந்திரும்பி குணப்படாதபடிக்குச் சாத்தான் அவர்கள் கண்களைக் குருடாக்கியும் செவிகளை மந்தமாக்கியும் இருக்கின்ருன். அப்படிக்கொத்தவர் இன்று சபைகளில் பதவிகளை வகித்து, பணிவிடையாற்றுகின்றனர். அவர்களில் சிலர் நன்னடக்கையுள்ளவரும், நேர்மையானவருமாயிருந்தும், இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெருதவராயிருக்கின்றனர். தங்களை உத்தம கிறிஸ்தவரென்றுப் பாவித்துக்கொண்டு

மோட்சம் செல்வோம் என்று நம்புகின்றவர், அந்தோ, மரித்த பின்பு பரலோகத்தின் வாசல் அடைப்பட்டிருக்கிறதைக் கண்டு திடுக்கிடுவர்! எனவே, உன்னை வஞ்சித்துக் கொள்ளாத படி இருக்க வெகு தெளிவாக இரட்சிப்பின் வழியை உனக்குத் தெரிவிக்க ஆசிக்கின்றேன்.

இரட்சிப்பையடுத்து மனிதரின் கருத்து

இரட்சிக்கப்படும்படி யாதாமொன்றைச் செய்ய வேண்டுமென்றே ஒருவன் நினைப்பான். இந்தியாவில் தங்கள் மீட்புக்காக சிலர் எடுக்கும் முயற்சிகளும், பாடுகளும் சொல்லி முடியாதது. ஒருவன் கொளுத்தும் வெயிலில் ஆணிகளின் மேல் படுத்துக் கொண்டிருப்பான். சிலர் மௌனம் சாதிப்பர். மற்றவர் கைகளை விறைத்துப்போகும் வரை உயரத் தூக்கிக் கொண்டிருப்பர். மற்றுஞ்சிலர் தரையில் உருண்டு கொண்டோ அல்லது நடந்தோ தூரமான இடங்களுக்கு யாத்திரையாகச் செல்வர். ஆயிரக்கணக்கானவர் நதியில் நீராடுவர்.

அப்படியே யூதரும், ரோமானித்தரும் ஏனைய மதத்தினரும் ஏதாவதுப் புண்ணிய கிரியைகளைச் செய்துகொண்டேயிருக்கின்றனர். அந்தோ இவை எத்தனையாக ஒருவனை அடிமைபோல் கட்டுப்படுத்துகின்றன. இப்படியாக மனிதன் தன்னை வதைத்துக் கொள்ளுகின்றான். ஆண்டவரோ, பரம ஜீவனை ஒருவனுக்கு இலவசமாக அளிக்கின்றார். அதை அவன் நற்கிரியைகளினால் சம்பாதிக்க முடியாது. இறைவனின் அன்பளிப்பாகவே ஏற்கவேண்டும்.

இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்

பரிசுத்த வேதம் வெகு அழுத்தந்திருத்தமாகத் தெரிவிப்பதாவது: உன் ஈடேற்றத்திற்காகவும், இரட்சிப்புக்காகவும் நீ ஒன்றுஞ்செய்ய வேண்டாம். பரலோகத்தின் இறைவனே அதை உனக்காக நிறைவேற்ற முடியும். அவர் சகலத்தையும் செய்து முடித்து, இப்பொழுது அதை உனக்கு ஒரு

நன்கொடையாக அருளுகின்றார். ஆனால் அதை ஏற்றுக் கொண்ட பிறகு, அந்த இரட்சிப்பு உன் வாழ்க்கையில் நிறைவேறும்படிக்கு நீ உழைக்க வேண்டும் என்பதே. கல்லூரியில் படிக்கும் முன்பு ஒருவன் மாணவனாக அதில் இடம் பெற வேண்டுமல்லவா? அவ்வாறே இறைவனின் இரட்சணியத்தை முதலாவது ஏற்றுக்கொண்ட பின்பே, அதற்கேற்றவனாக வாழ உன்னால் பிரயாசப்பட முடியும்.

தன்னை ஒருவன் இரட்சித்துக்கொள்ளமுடியாது

இறைவனுக்குத் தங்கள் இரத்தத்தைக் கொடுத்து இப்படியாக உலக மதத்தினர் தங்களை அவருக்குத் தகுதியுற்றவராக்க எத்தனிக்கின்றனர். ஆனால் கிறிஸ்துவின் இரத்தமோ மனிதர்பால் சிந்தப்படுகிறது என்று பரிசுத்த வேதம் விளம்புகிறது. அதுவே இறைவனின் அருளாக இருக்கிறது. சிலர் நாட்டிற்காகத் தங்கள் உயிரைக் கொடுப்பதினால் நித்திய வாழ்வைப் பெறுவோம் என்றும் நினைக்கின்றனர். அது தவறு.

உலகத்திலுள்ள எல்லா மனிதரின் இரத்தமும், ஆம், உலக வரலாற்றின் போர்க்களத்தில் பிரவாகித்த குருதியின் திரள் கூட ஒரு பாவத்தையாகிலும் கழுவ முடியாது. ஆனால் பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன்னர், கல்வாரியில் சிந்தப்பட்ட திருக்குமாரனின் செந்நீர், எக்காலத்திலுமுள்ள சகல மனிதரும் செய்த பாவங்களனைத்தையும் துப்புரவாகச் சுத்திகரிக்கப் போதுமானதாயிருக்கிறது. நித்திய வாழ்வைச் சுதந்தரிக்கும் தகுதி எவருக்குமில்லை. ஆனால் "முடிந்தது" என்று இயேசு உரத்த குரலுடன் கூறினபோதோ, இரட்சணியம் முற்றுப்பெற்றது. இப்படியாக நிறைவேறி விட்ட இரட்சிப்புக்குக் கூடுதலாக மனிதன் செய்ய வேண்டியது ஏதாவதுண்டா?

ஒருவனுடைய உத்தம வாழ்க்கையும், நீதியும் போதுமானதாக இருந்தால் கிறிஸ்து மரிக்கத் தேவையில்லையே. "நியாயப்பிரமாணத்தினால் நீதி உண்டானால் கிறிஸ்து

மரித்திருக்க வேண்டியதில்லையே," (கலாத்தியர் 2:21). மனிதர் தங்களையே மீட்டுக்கொள்ளக்கூடுமானால், தேவ குமாரனாகிய கிறிஸ்துவின் மரணத்தை உலகில் நிகழ்ந்த ஒரு கொடூர அட்டூழியமென்றுதானே நினைக்கவேண்டும். ஆனால் தகுதியற்ற மனிதருக்காகவே தேவன் தமது திருக்குமாரனை அன்பளிப்பாக சந்தருளினார்.

பரிசேயனும் ஆயக்காரனும்

"இரண்டு மனிதர் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்றான். ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்பேரில் கிருபையாயிரும் என்றான்." (லூக்கா 18:9–14), "நான் உபவாசிக்கிறேன்", "நான் கொடுக்கிறேன்", "நான் அப்படிப்பட்டவனல்ல", என்பதாகச் சொல்லி பரிசேயன் தன்னையே முக்கியப்படுத்தினான். இதுவே சுயநீதியான வாழ்க்கையாகும். அப்படியே அநேகர் இன்று "நான் ஆலயத்துக்கு ஒழுங்காகச் செல்லுகிறேன், என் தசமபாகத்தைக் கொடுக்கிறேன், ஞாயிறு பள்ளியில் நான் ஆசிரியராயிருக்கிறேன், திருமுழுக்கைப் பெற்றிருக்கிறேன், சபைக்கடுத்த பல அலுவல்களைச் செய்கிறேன்" என்பர். கிறிஸ்து செய்ததை அல்ல, தாங்கள் செய்கிறதையே வலியுறுத்துவர்.

ஆனால் பவுலோ "நான் அல்ல கிறிஸ்துவே" என்கிறான். நம்மைப் பாவிகளென்று ஒத்துக்கொள்வோமாக. நமது உள்ளம் சீர்கெட்டது. நமது நீதிகளெல்லாம் கந்தை போலிருப்பதினால், கிறிஸ்து நிறைவேற்றியுள்ள கிரியையில்

மேன்மை பாராட்டுவோமாக. மீட்பின் கிரயத்தை இயேசு செலுத்திவிட்டார். எனவே, "வேறொருவராலும் இரட்சிப் பில்லை; நாம் இரட்சிப்பைப் பெறுவதற்கு வானத்தின் கீழ் மனுஷருக்குள் அருளப்பட்ட வேறொரு நாமமுமில்லை;" ஒரு வரும் பெருமைப் பாராட்டாதபடி இது கிரியைகளினால் உண்டானதல்ல," (எபேசியர் 2:9). உன்னையும், உன் கிரியை களையும் சார்ந்துக் கொள்வாயானால் நீ கெட்டழிவாய். தன்னைத் தான் ஒருவனும் மீட்டுக்கொள்ள முடியாது.

இரட்சிப்பையடுத்து இறைவனின் திட்டம்

நற்கிரியைகளினால் இரட்சிக்கப்படுவேன் என்று மனிதன் நினைக்கையில், இறைவன் "கிருபையினாலேயே இரட்சிக்கப் பட்டீர்கள்" என்கிறார், (எபேசியர் 2:8). கிருபை என்பது இறைவனின் அருளைக் குறிக்கும். அது மனிதனின் கிரியைக்கு நேர்மாறானது. நாம் பறைசாற்ற வேண்டிய செய்தியைக் "கிருபையின் சுவிசேஷம்" என்றழைத்திருக்கிறது. மேலும் "அவர் கிருபையினாலேயே, கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட் பைக்கொண்டு இலவசமாய் நீதிமான்களாகத் தீர்க்கப்படு கிறார்கள்." "மீட்பு" என்றால், "மீண்டும் கிரயம் கொடுத்து வாங்குதல்" என்றர்த்தம். முதல் ஆதாம் மானிடரைச் சாத்தானுக்கும், பாவத்திற்கும், சாவுக்குமாக விற்றுவிட் டான். ஆனால் கிறிஸ்து பாவத்தையும் அதனால் வந்த விளை வுகளையும் தாமே ஏற்றுக்கொண்டு, அதற்கான கிரயத்தைச் செலுத்தி, சாத்தானின் அடிமைத்தனத்தினின்று மக்களை மீட்டுக்கொண்டார். அவர் செலுத்தின கிரயம் தமது சொந்த இரத்தமாகும். "அழிவுள்ளவைகளாகிய வெள்ளி யினாலும் பொன்னினாலும் நீங்கள் மீட்கப்படாமல், மாசில் லாத கறையற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலை யேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்டீர்கள்" என்று அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். (1 பேதுரு 1:18, 19).

ஆகவே மீட்பின் கிரயம் கொடுக்கப்பட்டு விட்டதினால், இறைவன் நம்மை "இலவசமாக" நீதிமான்களென்றுத் தீர்க்கிறார். இந்தச் சொல்லைக் "காரணமில்லாமல்" என்று

யோவான் 15:25இல் கூறியிருக்கிறது. என்னைப் பகைத்ததற்கு எந்தக்காரணமுமில்லை என்று ஆண்டவர் விளம்பினதைப் போன்று, எந்த நியாயமும் ஆதாரமுமின்றி இலவசமாக ஒரு பாவியை அவர் நீதிமானுக்குகின்றார். எனவே கிருபை என்றால், "அருகதியற்ற ஒருவனுக்குக் கிடைக்கும் தயவு" என்பது கருத்து. அபாத்திரனுக்கு இரட்சிப்பை இலவசமாக இறைவன் அருளுகின்றார். அதைப் பெற்றுக்கொள்ளும் தகுதி ஒருவனுக்குமில்லை. மேலும் அதற்கான கிரயத்தை அவன் கொடுக்கவும் முடியாது.

சட்டத்திற்கு ஒருவன் கீழ்ப்படியலாம், அல்லது அதை மீறி தண்டிக்கப்படலாம். "பாவத்தின் சம்பளம் மரணம்," (ரோமர் 6:23). பாவஞ்செய்கிற ஆத்துமா சாகும்," (எசேக்கியேல் 18 : 4). சட்டத்தை மீறினவன் தண்டனையடைய வேண்டுமல்லவா? ஆனால் பாவியை இரட்சிக்க இறைவன் விரும்பினார். ஆகவே "தாம் நீதியுள்ளவரும் இயேசுவினிடம் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாய்த் தீர்க்கிறவருமாய் விளங்கும்படி, "கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாகக் கொடுத்தார்".

அதாவது அவர் மனிதனுடைய பாவத்திற்கு ஈடு செலுத்தி, இப்படியாக தேவநீதியைத் திருப்தி செய்தார். நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாக இயேசு இருக்கிறார் (1 யோவான் 2:2). பாவத்தின் தண்டனையான மரணத்தை இயேசு தாமே அனுபவித்தபடியினால், இறைவன் மக்கள் பேரில் அருள்பாவித்து இரட்சிக்கின்றார்.

மனம்திரும்புதலைப் பற்றி சிலர் நினைப்பது என்ன?

தேவன் உரைப்பதை உள்ளபடியே நம்ப சிலர் தயங்குவர். தேவதயவைப் பெறும்படி ஏதோ ஒன்றைச் செய்ய வேண்டுமென்பர். மனந்திரும்புதலைப் பற்றிச் சிலருக்குத் தவறான எண்ணமுண்டு. பாவத்திற்காக வெகு நாட்களாக

மனஸ்தாபப்பட்டுத் துக்கிக்க வேண்டுமென்பர். ஆண்டவர் அதை விரும்புவதாக மனிதன் நினைக்கின்றான். உள்ளம் உடைந்து, மேடைக்கு முன் வந்து விழுந்து, தன் பாவங்களை யெல்லாம் ஒருவன் அறிக்கை செய்தால்தான் அவன் பாவ மன்னிப்பைப் பெறுவான் என்பர். பாவ உணர்ச்சியடைவதினால் மட்டும் ஒருவன் மனந்திரும்பி குணப்படுவதில்லை. இரட்சிக்கப்படுதற்கு நீண்டகாலமாக மனந்திரும்பிக் கொண்டிருக்கும் அனுபவம் தேவையென்று பரிசுத்த வேதம் வலியுறுத்தவில்லை.

“எந்தக் கிரியைகள் ஜெபங்கள் கண்ணீர்களும்
உன்னை இரட்சிக்க மாட்டாதே! பார்!
திருரத்தமே தஞ்சம் என்றோடிவந்தால்
வல்ல மீட்பர் கடாட்சஞ் செய்வார்.”

உன் சொந்தக் கிரியைகளான கண்ணீர், பாவ அறிக்கை, மனஸ்தாபம் முதலானவற்றையும் தள்ளிவிட்டு, இயேசுவின் பேரில் மாத்திரம் உன் நம்பிக்கையை வை. இரட்சிப்பின் கிரயத்தை இயேசு செலுத்திவிட்டார் என்று நம்பி, கல்வாரியில் முற்றுப்பெற்ற அவருடைய கிரியையிலும், அவர் சிந்தின திருரத்தத்திலும் உன் நம்பிக்கையை வைப்பாயாக.

தேவனைப்பற்றிய தவறான எண்ணம்

ஒரு சமயம் நான் கை பிரதிகளை வழியில் செல்பவருக்கு இலவசமாக வழங்கிக்கொண்டிருந்தேன். யாரோ ஒருவன் கைகளிலும் முழங்காலிலும் தவழ்ந்துக்கொண்டு வந்து என்னிடம் கெஞ்சினானென்று வைத்துக்கொள்ளுங்கள். ஒரு வேளை அதைப்பார்க்கிறவன் என்னைக்குறித்து, “அவன் என்ன அற்பகுணமுள்ள மனிதன், கீழே விழுந்து அதற்காக அவன் கெஞ்சிக்கொண்டிருக்கிறானே,” என்றே சொல்லுவான் அல்லவா? அது நியாயமாகுமா? எவ்வளவோ ஆவலுடன் எல்லாருக்கும் நற்செய்திதாளை நான் தருகிறேன். அப்படியிருக்க அவன் என்னிடம் வந்து அதைப்பெற்றுக் கொண்டுப் போகவேண்டியதே அவன் கடமை.

பரம பிதா தமது முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டிருக்கவில்லை. தங்களை இரக்கமாகக் கண்ணோக்கும் படிக்கு எவரும் அவரை நோக்கிக் கதறிக்கொண்டிருக்கத் தேவையில்லையே. இதோ உன்னை அரவணைக்கவும், மன்னிக்க வும் அவர் மகா ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கிறார்! அதற்காகவே தமது சொந்தக் குமாரனைத் தந்தார். ஆம், பேரன்போடும், இரக்கத்தோடும் உன்னைப்பார்த்து "என் னிடம் வா, என் இரட்சிப்பை ஏற்றுக்கொள், என்னை நம்பு" என்று அழைக்கிறார். அவர் மனமுவந்து அளிப்பதை நன்றி யறிதலுடன் ஏற்றுக்கொள்ளாமல் அதற்காகக் கண்ணீர் விட்டு மன்றாடிக்கொண்டிருப்பது எத்தனை புத்தியீனம்!

பண்டிகை நாட்களில், அல்லது பிறந்த நாட்களில் நண் பர் அளிக்கும் வெகுமதியை நீ எத்தனை ஆவலுடன் ஏற்றுக் கொள்ளுகிறாய்? அதை மறுத்து விடுவதினால் அவர்களுக்கு மனநோவை உண்டாக்க விரும்புவாயா? "மிக்க நன்றி" என்று சொல்லி அதை வாங்கிக்கொள்ளுகிறாயல்லவா? அப் படியே ஆண்டவர் உனக்கு அருளுகின்ற பாவ மன்னிப்பை யும், இரட்சிப்பையும் ஏற்றுக்கொண்டு "ஆண்டவரே உமக்கு ஸ்தோத்திரம்" என்று சொல். ஆம், விசுவாசத்துடன் அதைப் பெற்றுக்கொள்ளுகையில், பரிசுத்த ஆவியானவர் நித்திய ஜீவனை அளித்து உனக்குள் மனமாறுதலை உண்டாக்குவார். இரட்சிப்புக்கு ஆதாரமாயிருப்பது கிறிஸ்துவின் மரணமாகிய கிருபாதாரபலியே ஆகும். விசுவாசம் ஒரு சங்கிலிபோல் பாவியையும் கிறிஸ்துவையும் ஒன்றாக இணைக்கின்றது. இறை வன் நிறைவேற்றினதை விசுவாசம் முற்றிலுமாகச் சார்ந்துக் கொள்ளுகிறது. "கர்த்தராகிய இயேசுவில் உன் நம்பிக் கையை வை, அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய்" (அப் போஸ்தலர் 16 : 31). அன்பனே இப்பொழுதே அதைச் செய்ய முன்வரமாட்டாயா?

6

பொய்யும் மெய்யும்

மோட்சம் போகும்படி மக்கள் பலவற்றைக் கடைப் பிடிப்பர். அவர்கள் அனைத்தும் பொய்யான வழிகளாகவே இருக்கும். அவற்றில் எதையாவது நாம் நம்பிக்கொண்டிருக் கிறோமா ?

தேவன் பரலோகத்தில் ஏற்றுக்கொள்வார் என்பதற்கு உறுதியான ஆதாரம் நமக்குண்டா ? இந்த முக்கியமான கேள்விக்கு நாம் மறுமொழி கொடுக்கவேண்டும். பொய் யான வழிகளை அறிவித்தப்பின்பு, மெய் வழி இன்னதென்றுத் தெரிவிப்பேன்.

பொய்யான வழிகளாவன

1. கிறிஸ்தவ மார்க்கம்

மார்க்கம் என்றால் என்ன? மனிதன் சுயமாக ஈடுபடும் பல காரியங்கள் அதில் அடங்கியிருக்கின்றன. ஞானஸ்நானம் பெற்று, ஆலய வழிபாடுகளுக்குச் சென்று, திருவிருந்தில் பங்கு பெறுவதும், மேலும் தசமபாகம் முதலியன செலுத்து வதும் கிறிஸ்தவ பக்தி என்று நினைப்போம். ஆனால் மார்க்க நெறிகளைக் கடைபிடிப்பவருக்கு இரட்சிப்புக் கிடைக்குமென்று பரிசுத்த வேதம் உறுதிமொழி கூறுவதில்லை. ஆம், கிறிஸ்து வற்ற கிறிஸ்து மார்க்கமும், ஏனைய இந்து மதம், புத்த மதம், முகமதிய மதம் போன்றவைகளும் ஒருவனை இரட்சிக்க முடி யாது. அந்தோ, ஆன்ம உயிரற்ற இப்படிக்கொத்தக் கிறிஸ்து மார்க்கத்தை ஆயிரக்கணக்கான சபையார் நம்பிக் கொண்டிருக்கின்றனரே! ரோமான், கிரேக்க, புரோடஸ் டண்ட் முதலிய சபைகளிலும், ஏனைய பற்பல கிறிஸ்தவ கூட்டங்களிலும் இப்படிக்கொத்தவர் ஏராளமாக இருக்கின்ற னர். மனமாறுதலின்றியே ஒருவன் மதமாற்றம் செய்துக் கொள்வான். ஆகவே அவர்கள் மறுபிறப்படையாம

லிருப்பர். இவர்கள் இறைவனுடன் உறவு கொள்ளாமல், ஏதோ ஒரு சபை பிரிவாரோடே கூடிக்கொள்ளுவர். உலகப் பிரகாரமாக மதிப்புக்குரியவராயிருந்தும் அவர்கள் மறு பிறப்பாகிய ஆவியானவரின் அனுபவத்தை அடையாதிருக் கின்றனர். "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவ னுடைய ராஜ்யத்தைக் காணமுடியாது" (யோவான் 3 : 3) என்று இயேசு வலியுறுத்தியுள்ளார்.

புகழ்பெற்ற பண்டித ராமாபாய் அம்மை கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய பின்னும், எட்டு ஆண்டுகளாக மறுப் பிறப்படையாத கிறிஸ்தவளாக இருந்ததாக அறிவித்தாள். கிறிஸ்தவ மார்க்கத்தில் சேர்ந்தும் அவள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவில்லை. பின்னர் தான் கெட்டுபோன ஒரு பாவி யென்றும், தனக்கு ஒரு இரட்சகர் தேவையென்றும் அறிந்துக் கொண்டாள். இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட பிறகே, அவள் உள்ளத்திலும், வாழ்க்கையிலும் மகிமையான மாறுதல் உண்டாயிற்று. அவளுடைய சாட்சிய மாவது: "பாவமன்னிப்பைப் பெறுவதற்காக நான் மனஸ் தாபப்பட்டு, அதை விட்டுவிலகத் தீர்மானித்தால் போது மென்று எண்ணினேன். ஞானஸ்நானம் பெறுவதினால் மறு பிறப்படைவேன் என்றும், என் பாவங்கள் கழுவப்படுமென் றும் நம்பினேன். பூர்வீக என் இந்து மதக்கொள்கைகளுக்கு இச்சித்தாந்தம் ஏற்றதாக இருந்ததினால், அதை நான் எளி தாக ஒப்புக்கொண்டேன். ஆனால் எட்டாண்டுகளுக்குப் பின்பு நான் கிறிஸ்துவையல்ல, வெறும் கிறிஸ்தவ மார்க் கத்தை மாத்திரம் சேர்ந்தவளாயிருந்தேன் என்று அறியலா னேன். ஆம், கிறிஸ்து மார்க்கமல்ல ஜீவனுள்ள கிறிஸ்துவே எனது தேவை" என்பதே.

நண்பனே, உன் நிலைமை என்ன? மதம் மாறியும் மறு பிறப்பு அடையாதிருக்கிறாயா? கிறிஸ்து மார்க்கத்தின் நடு நாயகராக விளங்கும் கிறிஸ்துவானவர் உன் சொந்த ஆண்ட வரும் இரட்சகருமாயிருக்கின்றாரா? இல்லாவிடில் நீ பரலோ கத்தில் பிரவேசிக்க முடியாதென்று உன்னை எச்சரிக்கிறேன். ஆம், நீ மறுபடியும் பிறக்கவேண்டும்.

2. சபை உறுப்பினர்

மெய்த் திருச்சபையில் ஒரு வேளை நீ இதுவரை உறுப்பி னனுயிராதிருப்பாயென்பதை அறிந்துகொள்ள வேண்டும். அதை விளக்கஞ்செய்வேன். அரசர் குடும்பத்தைச் சேர்ந்த வனுயிருக்க ஒருவன் ஆசிக்கிறுனென்று வைத்துக்கொள் வோம். அப்படியானுல் அந்த அரசனின் இரத்தம் அவனில் ஓடவேண்டுமல்லவா? அதாவது அவர் குடும்பத்தில் அவன் பிறந்தவனுயிருக்கவேண்டும். மெய்த் திருச்சபையை அடுத் தும் இது உண்மையாகும். ரோமான் கத்தோலிக், புரோ டஸ்டண்ட் அல்லது மற்றொரு சிறந்த கூட்டத்தாரைப் பற்றியல்ல, கிறிஸ்துவின் சரீரமாகிய ஒரே மெய்த்திருச் சபையைக்குறித்து இப்பொழுது நான் பேசுகிறேன்.

திருச்சபை என்பது தேவனுடைய குடும்பமாகும். ஒரு வனும் தன் மனம்போல் அதில் இடம் பெறமுடியாது. அவன் அந்தக் குடும்பத்தில் பிறக்கவேண்டும். அரச குடும்பத்தில் பிறவாமல் ஒருவன் அரச மரபு உடையவனுயிருக்கமுடியாது. அதைப்போன்றே ஒரு மெய் விசுவாசியினுள் பரமனின் ஜீவன் வழிந்தோடாமல் வெறுமையாக ஒரு சபையில் சேர்ந் திருப்பதால் பயனில்லை. நீ யாதாமொரு சபையில் மாத்திரம் உன் பெயரைப் பதிவுசெய்து வைத்திருக்கிருயா? உலகிலுள்ள எந்தச் சபையும் ஒருவனை இரட்சிக்காது. கிறிஸ்து ஒருவரே இரட்சிக்கிறவர். "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தைக் காணமுடியாது."

இன்றைக்கு எண்ணிறந்த சபைகளிருக்கின்றன. பரலோ கத்தில் அவை ஒன்றிற்கும் இடமில்லை. அவற்றில் எதைச் சேர்ந்தவனென்று ஆண்டவர் உன்னிடம் கேளாமல், திரு ரத்தத்தினுல் கழுவப்பட்டிருக்கிருயா, நித்திய ஜீவனை உடை யவனுயிருக்கிருயா என்றே விசாரிப்பார். சபை உறுப்பினரு யிருப்பதையடுத்தல்ல, பரலோகத்தின் ஜீவ புத்தகத்தில் என் பெயர் எழுதப்பட்டிருக்கிறதா, பாவியாகிய நான் கிருபையினுல் மீட்கப்பட்டிருக்கிறேனு என்பதை உறுதிப் படுத்திக்கொள்.

3. இன்பந்துறத்தல்

இந்துக்களும், ரோமானித்தரும் மற்றுஞ்சில கிறிஸ்தவ குழுவினரும் ஒருவர் தேவ பக்தராயிருக்கும்படிக்கு திருமணஞ்செய்யாது, உலக இன்பங்களைத் துறந்துவிடவேண்டும்; உலக மக்களுடன் உறவுகொள்வதினல் பல சோதனைகளுக்கு ஆளாகிறேம். ஆகவே அவர்களைவிட்டுப் பிரிந்துத் தனித்திருப்பதினுலே தூய வாழ்க்கையாற்றக்கூடும் என்கின்றனர். சிலர் பல திருத்தலங்களுக்கு நீண்ட யாத்திரை செய்து, இவ்விதமாக உடலை ஒடுக்க முற்படுகின்றனர். ருஷ்ய கவிஞர் ஒருவர் இப்படி எழுதியுள்ளார். அதாவது சீர்கெட்டவராயிருந்த பலர் வசித்த இடத்திற்குச் சென்று, பாவங்களுக்காக துக்கித்து அழுது, தங்களை வதைக்க ஆரம்பித்தனர். உலகத்தை வெறுத்து, உபவாசத்திலும், வேண்டுதலிலும் தரித்திருந்தனர். ஆயினும் அவர்களுக்கு மன நிறைவு கிடைக்கவில்லை. மரிக்கவும் மனமற்றவராயிருந்த அவர்கள் உலக வாழ்க்கைக்குத் திரும்பிவந்தனர். இப்படியாகத் தங்களையே இரட்சித்துக்கொள்ள அவர்களால் கூடாதிருந்தது.

நமது பாவங்களுக்காகக் கிறிஸ்து மரித்துப் பூரண இரட்சணியத்தை உண்டுபண்ணியுள்ளார். நமது சுய முயற்சிகளால் இரட்சிக்கப்படமுடியாது. அப்படிச் செய்தவரிடம் ''மனுஷனுடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து, தொடாதே, ருசி பாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உடன்படுகிறதென்ன?'' என்று பவுல் வினவுகிறர். (கொலோசெயர் 2 : 20-23).

4. ஞானஸ்நானம்

இரட்சிக்கப்படுவதற்கு ஞானஸ்நானம் பெறவேண்டுமென்பர். ஞானஸ்நானம் அவசியமென்று நான் நினைத்தாலும் அது ஒருவனை இரட்சிக்காது. ''ஞானஸ்நானத்தைக் கொடுக்க அல்ல, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே கிறிஸ்து என்னை அனுப்பினர்'' (1 கொரிந்தியர் 1 : 17) என்று பவுல் எழுதுகிறர். ஆகையால் இரட்சிப்புக்கு ஞானஸ்நானம்

அவசியமில்லை என்று அறிகிறோம். மற்றபடி பவுல் அறை குறையாகத் தன் ஊழியத்தைச் செய்திருப்பானல்லவா? மேலும் அது இன்றியமையாததானால் ஞானஸ்நானம் பெறும் முன்பு ஒருவன் இறந்துபோனால் அவன் எப்படி மோட்சம் போவான்.

வலது பாரிசத்துக் கள்ளன் ஞானஸ்நானம் பெறாமல் பரலோகஞ் சென்றான். இன்னும் ஞானஸ்நானம் பெறாத சில சிறந்த பக்தர் "இரட்சணிய சேனை", "குவாகர்ஸ்" என்றழைக்கப்படும் நண்பர் குழுக்களில் இருக்கின்றனர். ஞானஸ்நானத்தையும், திருப்பந்தியையும் அவர்கள் அனுசரிப்பதில்லை. ஆனால் கிறிஸ்துவின் மீட்பைப்பெற்று மகா பரிசுத்தவான்களாயிருக்கும் அவர்கள் நரகமா செல்வர்? ஆயினும் "ஒருவன் ஞானஸ்நானத்தினால் தேவனுடைய பிள்ளையாகி, பாவங்களினின்று சுத்திகரிக்கப்பட்டு, அவன் பரலோக ராஜ்யத்திற்குச் சுதந்தரவாளியாகிறான்" என்று ஞான உபதேச நூலில் எழுதியிருக்கிறது. அது திருவசனமாயிராமல், உலக மனிதர் எழுதின வார்த்தைகளாகும். நண்பனே, நீ சிறு பிள்ளையில் ஞானஸ்நானம் பெற்று, அதன் பிறகு திடப்படுத்தலைப்பெற்று, ஒரு பெரிய சபையின் உறுப்பினராயிருந்தாலும் இன்னமும் பிசாசின் பிள்ளையாகவே இருப்பாய். அதாவது குணப்படாமல் ஞானஸ்நானம் பெற்றிருப்பாய். அது உன்னை இரட்சியாது.

"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16 : 16). இரட்சிப்பின் நற்செய்தியை நம்புவதுதான் முக்கியம். அப்படி அதை விசுவாசியாமல் ஞானஸ்நானம் பெறுவதால் பயனில்லை. ஞானஸ்நானம் பெறாதவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று அவர் சொல்லாமல், "விசுவாசியாதவனுக்கு" ஆக்கினை வருமென்கிறார். எனவே இரட்சிக்கப்படுவதற்கு இன்றியாமையாதது விசுவாசமேயன்றி ஞானஸ்நானம் அல்ல (1 கொரிந்தியர் 1 ; 17 ; அப்போஸ்தலர் 20 : 21). விசுவாச

மில்தாத ஒருவனுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதால் அது அவிசுவாசியின் ஞானஸ்நானமாக மாறுகிறதல்லவா?

"ஜலத்தினாலும், ஆவியினாலும் ஒருவன் பிறவாவிட்டால்" (யோவான் *3 : 5*) என்பதற்குக் கருத்தென்ன? இந்த ஆவிக்குரிய பிறப்பைக்குறித்துப் பரிசுத்த வேதத்தின் ஏனைய பகுதிகளில் "ஜலம்" என்பது "திருவசனம்" என்று வாசிக்கிறோம். அது தண்ணீரால் பெறும் ஞானஸ்நானம் அன்று, (*ஏபேசியர் 5 : 26 ; 1 பேதுரு 1 : 23*). கொர்நேலியும் அவன் வீட்டாரும் குணப்பட்ட விவரம் இந்த உண்மையைத் தெளிவுபடுத்துகிறது. (*அப்போஸ்தலர் 10 : 43 - 48 ; 11 : 14-17*). தேவ வசனத்தைக் கேட்டவர்கள் மேல் பரிசுத்த ஆவியானவர் இறங்கவே, அவர்கள் பல பாஷைகளைப்பேசி இயேசுவை விசுவாசித்தனர். முதலாவது ஜீவனுக்கேதுவாக மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டனர். அதன் பிறகே அவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர் என்பதைக் கவனிக்கவும். ஞானஸ்நானம் பெற்ற பின்பும் நீ பாவத்தில் பிழைத்துக்கொண்டிருந்தால் உன்னை இரட்சிக்கப்பட்டவனென்று எப்படிச் சொல்லமுடியும்? இரட்சிப்பு ஒருவனை விடுதலையாக்கி, அவனுக்கு மனமாறுதலை அளித்துப் புதிய சிருஷ்டியாக்குகிறது. "அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனத்தின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" (மத்தேயு *1 : 21*). பாவங்களினின்று நீ விடுதலை பெறாதிருந்தால் நீ இரட்சிக்கப்பட்டவனல்ல, ஞானஸ்நானத்தினால் மாத்திரம் ஒருவன் பாவத்தினின்று விடுவிக்கப்படுவானா?

மேலும், இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியமென்பது, தேவனுடைய கிருபையைப் பற்றின பவுலின் உபதேசத்திற்கு முற்றிலும் முரண்பாடாகும். விசுவாசத்தினால் மாத்திரம் ஒருவன் இரட்சிக்கப்படுவான் என்பதைப் புதியஏற்பாடு வெகு திட்டமும் தெளிவுமாக வலியுறுத்துகின்றது. அடுத்து வரும் வசனங்களை வாசித்து அநேகர் மறுபிறப்பைக் கண்டடைந்திருக்கின்றனர். அவையாவன: யோவான் *1:12 ; 3 : 14—18, 36 ; 5 : 24; 6 : 47 ;* அப்போஸ்தலர் *10 : 43 ; 13 : 39 ; 16 : 31 ;* ரோமர் *1 : 16; 3 : 19 - 26 : 4 : 5 ;*

கலாத்தியர் 2 : 16 ; எபேசியர் 2: 8 - 9 ; பிலிப்பியர் 3 : 9 முதலியவையே. இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் இன்றியமையாததென்றால் இயேசுகிறிஸ்து தாமே யோவான் சுவிசேஷத்தில் உரைத்த வசனங்கள் அபத்தமானதன்றோ?

கிரியைகளினாலோ அல்ல தேவனுடைய சுத்த கிருபையினாலே ஒருவன் இரட்சிக்கப்படுவான். மற்றபடி இரண்டையும் கடைபிடிக்க முடியாது. ரோமர், காலத்தியர் நிருபங்களில் பவுல் அதை அழுத்தந்திருத்தமாகத் தெரிவிக்கிறான். " ஒருவரும் பெருமை பாராட்டாதபடி இது கிருபையினால் உண்டாயிருக்கிறது," (எபேசியர் 2 : 9). ஆகவே பிரமாணங்களைக் கடைபிடிப்பதும், ஞானஸ்நானம் பெறுவதும், மற்றெந்த நற்கிரியைகளைச் செய்வதும் எவரையும் இரட்சிக்காது. ஞானஸ்நானத்தை " நீதியின் கிரியை " என்று இயேசு சொன்னார். எல்லாக்கிரியைகளையும் கிறிஸ்து கல்வாரியில் நிறைவேற்றி விட்டார். அன்பனே, உன் சொந்தகிரியைகளை அகற்றி இயேசுவில் விசுவாசப் பற்றுக்கொள்.

5. மத்தியஸ்தர்

அதாவது மரியம்மாளையும், ஏனைய பரிசுத்தவான்களையும் நோக்கி வேண்டுதல் செய்வதால், மீட்புக்கிடைக்குமென்று சிலர் நம்புகின்றனர். " நான் பெரிய பாவியாயிருக்கிறபடியினால் என்னை இரட்சித்துக்கொள்ள முடியாது. பரலோகத்தில் நடுவர் பலர் இருக்கின்றனர். அவர்கள் எனக்காக இயேசுவிடம் வேண்டுதல் செய்து, பரலோகத்தின் வாசலைத் திறந்து வைப்பர் " என்று சிலர் நம்புகின்றனர். தங்கள் பாவங்களை விட்டு மனந்திரும்ப மனமற்றவர், பரலோகில் இருக்கும் புனிதர் தங்களுக்காக தேவனிடம் பரிந்துப்பேசுவர் என்று நினைக்கின்றனர்.

மரியம்மாளும் ஏனைய பரிசுத்தவான்களும் ஒரு பாவிக்கு எந்த உதவியும் செய்ய முடியாது. இவர்களல்ல, கிறிஸ்துவே இரட்சிப்பை நிறைவேற்றினார். அதனால் இரட்சகரான இவர் மூலமாகவே இறைவனிடம் நாம் சமீபித்து வரமுடியும். " நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனு

ஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப்போஸ்தலர் 4 : 12). "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே" (1 தீமோத்தேயு 2 : 5). அந்த ஒரே மத்தியஸ்தர் இயேசுவேயன்றி கன்னி மரியாளும், ஏனைய பரிசுத்தவான்களும் அல்லர். சிறந்த வழக்கறிஞர் ஒருவர் ஒருவருக்காக வழக்காடுகையில், அவரை விட அற்பமானவரின் உதவியை அவன் தேடுவது நியாயமாகுமா நமக்காகப் பரிந்து பேசுகிறவரும், நமக்கு மத்தியஸ்தராக இருப்பவரும் கிறிஸ்துவே. ஆம், அவர் நமக்குப் போதுமானவராயிருக்கையில் ஏன் மற்றவரின் ஒத்தாசையை நாம் நாடவேண்டும்?

அன்பனே, உன் பாவங்களுடன் பயப்படாமல் அவரிடம் வா. தம்மிடம் வருகிற எவரையும் அவர் தள்ளமாட்டார். அவர் பாவிகளின் நேசர். ஆனால் உன் பாவங்களை விட்டு விலக மனமின்றி, மற்றவரிடம் வேண்டுதல் செய்தால், நீ ஒரு நன்மையையும் கண்டடைய மாட்டாய். எவராலும் உனக்கு உதவிசெய்ய முடியாது.

6. கற்பனைகளைக் கைக்கொள்ளுதல்

தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதினால் இரட்சிக்கப்படுவோமென்று அநேகர் நினைக்கின்றனர். அதைச் செய்யாதே இதைச்செய்யாதே என்று கற்பனைகள் தடை செய்கின்றன. ஆனால் இயேசு முடித்து தீர்த்த ஒரு இரட்சிப்பில் நம்பிக்கை வைக்கும்படி நாம் அழைக்கப்படுகிறோம்.

சில நிமிடங்களில் மரிக்கும் தருவாயில் ஒருவனிருக்கிறான். "நான் எப்படி இரட்சிக்கப்படுவேன்" என்று ஆவலுடன் கேட்கிறான். "நீ கற்பனைகளைக் கைக்கொள்" என்று அவரிடம் சொல்லுவது எத்தனை புத்தியீனம். சீக்கிரத்தில் சாகபோகிறவனால் எதைச்செய்ய முடியும்? எனவே நியாயப்பிரமாணத்தைக் கடைபிடிப்பதினால் மீட்பை எதிர்ப்பார்க்கிறவன் ஏமாந்தே போவான். இயேசு நாதர் யூதர்களிடம் "உங்களில் ஒருவனும் அந்த நியாயப்பிரமாணத்தின்

படி நடக்கிறதில்லை" என்றார். (யோவான் 7:19) ஒருவேளை அவற்றின்படி நடக்கிறேன் என்று நீ நினைப்பாயானால், மத்தேயு 5 : 27, 28; 22 : 34 - 40 வசனங்களைக் கவனமாக வாசித்துச் சிந்தனைசெய். அதன் பிறகுப் பத்தாம் கற்பனையையும் வாசி.

ஒருக்கால் அப்படி யாராவது கற்பனைகளைக் கைக்கொண்டாலும், அது அவனுக்கு நித்திய வாழ்வை அளிக்காது. நான் கொலை செய்வதில்லை, திருடுவதில்லை, விபசாரம் செய்வதில்லை. மேலும் யூதருடைய ஓய்வுநாளான சனிக்கிழமையை ஆசரிக்கிறேன் என்பாய். ஆனால் இயேசுவையும், அவர் பிணையாளியாக மரித்து சம்பாதித்த ஒன்றான இரட்சிப்பையும் ஏற்க மறுக்கின்றாயல்லவா? ஆம், சிலவற்றைச் செய்யாமலிருப்பதற்காக மாத்திரம் இறைவன் பரம ஜீவனை ஒருவருக்கு அளிக்க மாட்டார். "உயிரைக் கொடுக்கத்தக்க நியாயப்பிரமாணம் அருளப்பட்டிருந்ததானால், நீதியானது நியாயப்பிரமாணத்தினால் உண்டாயிருக்குமே," (கலாத்தியர் 3 : 21).

7. மரித்தோருக்காக வேண்டுதல்

இவ்வுலகில் இருக்கையில் நான் இரட்சிக்கப்படாவிட்டாலும், எனக்கு நம்பிக்கை உண்டு. நான் மரித்த பிற்பாடு இரட்சிப்பைப் பெறுவேன் என்று நம்பும் கிறிஸ்தவரும் உளர். அதாவது அவர்கள் செத்தப்பின்பு தங்கள் ஆன்மா இளைப்பாறும்படி அவர்கள் சபை வேண்டிக்கொள்ளும் என்று நினைக்கின்றனர். இந்தக் கூற்று நமது பொது அறிவுக்கும் நீதி முறைக்கும் ஒவ்வாததாகும். இதை நம்புகிறவன் எவ்வளவு பாவங்களையும் துணிந்துசெய்ய முற்படுவான் அல்லவா? ஏனென்றால் சபை அவனுக்காக மன்றாடி, அவனை நித்திய நரகத்துக்குத் தப்புவிக்கும் என்று அவன் நம்புகின்றான். பாதாளத்தில் தன் வேதனையைக் குறைக்கும்படி அந்தச் செல்வந்தன் வேண்டினபோது, அவனுக்கும் லாசருவுக்கும் நடுவே கடக்க முடியாத பெரும் பிளப்பு இருக்கிறதென்று அவனுக்குச் சொல்லப்பட்டதே. (லூக்கா 16 : 25). எந்தச் சபையும்

அவனுக்காக வேண்டுதல் செய்து, அவனைத் தப்புவிக்க முடியாது. உண்மையாக மனந்திரும்புகிற எவரையும் அவர் ஏற்றுக்கொள்ளுவார். ஆண்டவராகிய இயேசுவின் திரு இரத்தத்தில் அவன் நம்பிக்கை வைப்பதினால், அவனை நீதிமானென்றும் தீர்க்கிறார். மேலும், அவனுக்கு நித்திய ஜீவனாகிய ஈவை அளிக்கிறார். நீ மரித்தபின்பு, உன்னை உத்தரிக்கும் இடத்திலிருந்துத் தப்புவிக்கும்படி மற்றவர் மன்றாடுவர் என்ற வஞ்சகத்தை நம்பி பாவத்தில் நிலைத்திராதே. இப்பொழுதே மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவை உன் இரட்சகராகப் பற்றிக்கொள். "இதோ இப்பொழுதே அனுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்" (2 கொரிந்தியர் 6:2).

8. இயன்றவரை உத்தமனாக வாழ்தல்

உன்னால் கூடியவரை உத்தமனாயிருக்கும்படி நீ முயலுகிறாயா ? ஏதோ ஒரு முறையாவது தவறியிருக்கிறாயா? ஆம், முற்றிலும் சிறந்தவற்றை எப்போதும் செய்யக்கூடாமல் போயிற்று என்று ஒத்துக்கொள்வாய். அப்படியானால் உன் வார்த்தையின்படியே நீ அழிவுக்குச் செல்லுகிறாய். ஏனென்றால் தான் அறிந்தவற்றின்படியே நடந்து, எப்போதும் சிறந்தவற்றையே நடப்பித்தவர் எவருமில்லை. அதனால் அதை நீ சார்ந்துகொள்வது தவறாகும்.

9. சீர்திருத்தம்

வேறு சிலர் தங்கள் வாழ்க்கையைச் சீர்திருத்திக்கொள்ளலாம் என்று நினைக்கின்றனர். அது புத்தியீனமாகும். ஒரு மாணவன் தான் பார்த்து எழுதும் ஏட்டில் மையைக் கொட்டிவிட்டான். பின்னர் சுத்தமான மறு பக்கத்தில் எழுத ஆரம்பித்தான். ஆனால் ஆசிரியர் முந்தின பக்கத்தைப் பார்த்தபோது அது மையினால் கறைபட்டிருந்தது. அங்ஙனமே புதிய வாழ்க்கையாற்ற நீ தீர்மானித்தாலும், உன் முந்தின சீர்கேடான நடக்கைக்காகத் தண்டிக்கப்பட வேண்டியவனன்றோ ? "உமது முந்தின வாழ்க்கையைப்பற்றி என்ன ? நீர் தவறவில்லையா? அதைக்குறித்து உமக்குப் பயமில்லையா?" என்று ஒருவேளை என்னிடம் கேட்பாய். ஆம், எல்லாரையும்

போன்று நானும் ஒரு பாவியே. ஆனால் எனக்குப்பயமில்லை. அதை உனக்கு விளக்கும்படி லூத்தரைப் பற்றின ஒரு கதையைச்சொல்லுவேன். ஒரு சமயம் பெரிய சுருள் ஒன்றை எடுத்துக்கொண்டு சாத்தான் அவரிடம் வந்தானும். இரண்டு பக்கங்களிலும் அதில் எழுதியிருந்தது. அதைக்குறித்து சாத்தானிடம் அவர் கேட்டபோது, அவன் "இதில் உன் பாவங்களின் விவரங்கள் அடங்கியிருக்கின்றன," என்றுனும். அவர் அதைக்கூர்ந்து வாசித்தபோது அவை முற்றிலும் உண்மையென்று கண்டார். ஆம், அவர் மறந்துபோன பழைய பாவங்களும் அவர் நினைவுக்கு வந்தன. லூத்தர் சாத்தானிடம், "என் பாவங்கள் இவ்வளவுதானு" என்று வினவ, அவன் "இன்னும் ஒருசுருள் இருக்கிறது" என்று சொல்லி மற்றென்றையும் கொண்டுவந்தான். அதிலும் அவர் செய்திருந்த ஏராளமான பாவங்களின் விவரங்களைக் கண்டார். "வேறே சுருள் உண்டா" என்று லூத்தர் கேட்க, "ஆம்" என்று மூன்றும் சுருளையும் கொண்டுவந்தானும். அதையும் வாசித்தப் பின்பு அவர், "அவ்வளவுதானு" என்று கேட்க? சாத்தான் "ஆம், இவைகளெல்லாம் நீ செய்த பாவங்களாயிற்றே" என்று சொல்லி புன்முறுவல் பூத்தான்.

ஆனால் வெகு அமைதலுடன் லூத்தர் தன் பேனவைச் சிவப்பு மையில் தோய்த்து அந்தச் சுருள் ஒவ்வொன்றிலும், "அவருடைய குமாரனுகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்" என்று மிகக்களிப்புடன் எழுதினுராம்.ஏமாற்றமடைந்த சாத்தானே எரிச்சலுடன் ஓடி மறைந்தான். லூத்தரைப்போன்று நானும் ஒரு குற்றவாளியே. ஆயினும் அநேக ஆண்டுகளுக்கு முன் இயேசுவை என் இரட்சகராக ஏற்றுக்கொண்டேன். அவர் என் பாவங்களையெல்லாம் கழுவிவிட்டார். என் அற்ப வாழ்க்கையை அடுத்தும் மந்திரம்போன்று அந்த வார்த்தைகளையே நம்புகிறேன். என் பாவங்களை அவர் மன்னித்து விட்டதினுல் இனிமேல் அவற்றை எனக்கு விரோதமாக நினைக்கமாட்டார். இயேசுகிறிஸ்துவின் குற்றமற்ற நீதியின் உடையினுல் என்னை அவர் உடுத்தியிருக்கிறுர். தமது தூய குருதியினுல் என்

பாவங்களை அறவே அகற்றிவிட்டார். அவருக்குத் துதியும் மகிமையும் உண்டாவதாக. கிணற்றின் தண்ணீர் அசுத்தமாயிருக்கையில் அத்தண்ணீரை வெளியே கொண்டுவரும் குழாய்க்கு வண்ணம் பூசுவதினால் மாத்திரம் தண்ணீர் சுத்தமாயிருக்குமா? "அப்படியே மனிதனுடைய உள்ளம் கெட்டுப்போயிருக்கையில், புறம்பான சீர்திருத்தங்கள் நற்பண்புகள் எப்படி அதை மாற்றக்கூடும். சட்டங்களும், கல்வி முதலான பயிற்சிகளும் ஒருவேளை மது அருந்துதல், கொலை, களவு முதலானவற்றைச் செய்யாதபடி சில சமுதாய சீர்திருத்தங்களை உண்டாக்கி, தண்ணீர் குழாய்க்கு வண்ணம் பூசினது போன்று புறம்பான தோற்றமளிக்கலாம். ஆனால் உள்ளான பாவத்தன்மையைக் கிறிஸ்துவின் இரத்தம் ஒன்றே மாற்றும். பாத்திரத்தின் உட்புறம் முதலாவது சுத்தமாக வேண்டும்.

" இரட்சிப்பு வேறே இல்லை
இயேசுவின் இரத்தம் தானே,
புண்ணியத்தாலே பலனில்லை,
இயேசுவின் இரத்தம் தானே."

கட்டிக்கு மேலே மருந்து போடுவதால் பயனில்லை. அதைக்கீறி எடுத்தால் தான் குணமாகும். அப்படியிருக்க புறம்பான சீர்திருத்தங்கள் எப்படி பாவமாகிய அரிபிளவையைக் குணமாக்கக்கூடும்.

ஜான் பனியன்

சீர்திருத்தலையடுத்து ஜான் பனியன் என்பவர் சிறந்த விதமாக அறிக்கையிட்டிருப்பதாவது: "நான் வேத புத்தகத்தை வாசிக்க ஆரம்பித்தேன். மேலும் அதை வாசிப்பதில் ஆர்வங்கொண்டேன். அதன் விளைவாக என் பேச்சிலும், நடக்கையிலும் சில சீர்திருத்தங்கள் உண்டாயின. மோட்சம் செல்வதற்காகத் தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ள முயன்றேன். நாட்டிலுள்ள ஏனைய சிறந்த மக்களைப்போன்று நானும் ஒருவனென்று நினைத்தேன். இப்படியாக ஓராண்டு காலமாக என் அயலார் யாவரும் என் வாழ்க்கையில் பெரிய

மாறுதல் வந்துவிட்டதென்று நினைத்தனர். நானோ கிறிஸ்துவை இன்னும் அறியவில்லை. கிருபை, விசுவாசம், நம்பிக்கை முதலியவற்றின் கருத்து இன்னதென்று எனக்குத் தெரியாது. அந்த நிலையில் நான் மரித்திருந்தால் அந்தோ, அழிவுக்குள்ளாயிருப்பேன். அதற்கு முன் மகா பொல்லாதவனாயிருந்த நான், சிறந்த ஒழுக்கப் பண்புடையவனாக மாறினதைக்கண்டு எல்லாரும் என்னைப் புகழ்ந்துப் பாராட்டினர். பக்தி வேடம் பூண்டவனாயிருந்த நானோ, அதை முன்னிட்டுப் பெருமிதங் கொண்டேன். பிறர் காண்பதற்காகவும், என்னை மேன்மையாக அவர்கள் எண்ணும்படிக்கும் மாத்திரமே நான் சிறந்த வாழ்க்கையாற்றலானேன்.'' இப்படிக்கொத்த சீர்திருத்த வாழ்க்கை பனியன் என்பவரை இரட்சிக்கவில்லை. அப்படியே உன் புறம்பான மாறுதல்களினால் மீட்பை அடையமாட்டாய். இவையாவும் பொய்யான ஆதாரங்களாகும். மணல் போன்ற அவற்றைச் சார்ந்துக் கொண்டிருக்கிறாயா? அல்லது நித்தியமான பாறைபோன்ற இயேசுவில் உன் நம்பிக்கையை வைத்திருக்கிறாயா? ஒருவனும் உன்னை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. மனிதன் நம்புகின்ற மற்றெந்த வழிகளும் தவறானவையே. இரட்சிப்பை இயேசுவின் மூலமாக மாத்திரம் நாம் பெற்றுக்கொள்ள முடியும். மனிதன் கடைபிடிக்கும் ஏனைய முறைகள் பயனற்றவையாகும்.

மெய்யான வழி

இப்பொழுது மெய் வழி எதுவென்று விசாரிப்போம்? சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வயதுசென்ற ஆபிரகாமும், அவன் மகன் ஈசாக்கும் பாலஸ்தீனத்திலிருக்கும் மோரியா மலையின்மேல் ஏறிச் சென்றுக் கொண்டிருந்தனர். "இதோ, நெருப்பும், கட்டையும் இருக்கிறது. தகனபலிக்கான ஆட்டுக்குட்டி எங்கே?" என்று மகன் கேட்டான். "என் மகனே, தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைத் தேவன் பார்த்துக்கொள்வார்" என்றான். ஆனால் பலிபீடத்தைக்கட்டி ஈசாக்கை அதன்மேல் கிடத்தினான். பிறகு கத்தியை ஓங்கி, தன் புதல்வனைக் கொல்லப்போகையில், "ஆபிரகாமே, ஆபிரகாமே, பிள்ளையாண்டான்மேல் உன் கையைப்

போடாதே" என்று சத்தம் பிறந்தது. "ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ, பின்னாகப் புதரிலே தன் கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக் கடாவைக் கண்டான். கண்டு ஆபிரகாம் போய்க் கடாவைப் பிடித்து அதைத் தன் குமாரனுக்குப் பதிலாகத் தகனபலி யிட்டான்."

"தன் குமாரனுக்குப் பதிலாக" என்ற சொற்களைக் கவனிக்கவும். அந்தப்படியே நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக் குப் பின்னர், இறைவனே தமது நேச குமாரனைக் கெட்டுப் போன பாவிகளுக்கு "பதிலாக" மரிக்கும்படி ஒப்புக் கொடுத்தார். அந்தோ, இயேசு சிலுவையில் தொங்கும் போது அவரைத் தப்புவிக்கும்படி பரத்தினின்று சத்தம் கேட் கவில்லை. ஏனென்றால் இயேசுவுக்குப் பதிலாக மரிக்கக்கூடிய வர் எவருமில்லை. அவர் தாமே நமக்குப் பதிலாக மரித்தார். இரட்சணியத்திற்கு இதுவே நிகரற்ற ஆதாரமாக விளங்கு கின்றது. ஏனைய வழிகள் யாவும் உறுதியற்றவை. ஆகவே இரட்சிப்பைக் கிரியைகளினால் சம்பாதிக்க முடியாது. பத் தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பே கல்வாரிச் சிலுவை யில் கிறிஸ்து அதை நமக்காக நிறைவேற்றி விட்டார்.

1. அதை எவ்வகையில் நிறைவேற்றினார்

பதிலீடு செய்யப்பெற்றதைக் கல்வாரி அறிவுறுத்துகின் றது. ஆபிரகாம் ஆட்டுக்கடாவைத் தன் மகனுக்குப் பதி லாகப் பலியிட்டான் அல்லவா? அப்படியே பரிசுத்த ஆவி யானவர் ஏசாயாவின் மூலமாக, "கர்த்தரோ நம்மெல்லாரு டைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்" (ஏசாயா. 53 : 6) என்று அறிவிக்கிறார். உன் பாவத்தையும், என் பாவத்தையும் தமது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் பேரில் பிதாவானவர் சுமத்தினார். அதை அவர் ஏற்றுக் கொண்டு நமக்குப் பதிலாக மரித்தார்.

பிராயச்சித்தம் பண்ணும் நாளில் நிகழ்ந்ததென்ன? குழுமியிருந்த மக்கள் மத்தியில் பிரதான ஆசாரியன் ஓர் ஆட் டுக்கடாவைக் கொண்டுவந்து நிறுத்துகிறான். தன் கரங்களை

அதன் தலையின்மேல் வைத்து, மக்களின் பாவங்களை அறிக்கை செய்கிறான். பிறகு ஒருவன் அதை வனாந்திரத்தில் துரத்தி விடுகிறான். இஸ்ரவேலரின் பாவங்களை அந்தப் போக்காடு சுமந்துக்கொண்டுப் போனது. அதைப்போன்று தேவாட்டுக் குட்டியானவர் நமது பாவங்களைச் சுமந்து, குற்றங்களை ஏற்றுக்கொண்டார். அதனாலேயே, "இதோ, உலகத்தின் பாவங்களைச் சுமந்துதீர்க்கிற தேவாட்டுக்குட்டி" என்று அவரை அழைத்திருக்கிறது. (யோவான் 1 : 29).

கொல்கொதாவை இருள் சூழ்ந்துக்கொண்ட வேளையில், இயேசு, "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று உரத்த சத்தமாய்க் கதறினார். அப்போது உன்னுடையதும், என்னுடையதுமான அருவருப்பான பாவம் அவர்பேரில் விழுந்தது. இந்தப் ப்பயங்கரத்தைப் பார்க்கக்கூடாமல், பிதா தமது முகத்தை மறைத்துக்கொண்டார். ஆம், தனித்தவராக இயேசு அதை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

2. அது போதுமானதாயிருந்தது

அவர் கல்வாரியில் நிறைவேற்றின மகத்துவமான கிரியையின் இறுதியில் மற்றொரு வெற்றி தொனி கேட்டது. அவர் "முடிந்தது" என்று முழக்கமிட்டார். இப்படியாக இரட்சணியத்தின் வேலை பூரணமாக முடிவுற்றது. அதற்கும் கூடுதலாக எதையுஞ் செய்யத் தேவையில்லை. எனவே இரட்சிப்பு இலவசமாக அளிக்கப்படுகிறது. நியாயப் பிரமாணத்தை முற்றிலும் நிறைவேற்றி, பிதாவானவரின் நீதியை இயேசு திருப்தி செய்தார். "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2 கொரிந்தியர் 5:21). ஆகவே மேற்கொண்டு ஒருவன் எதையும் செய்ய முற்படாமல், அவர் செய்து முடித்த இரட்சணியத்தை ஏற்றுக்கொண்டு அமர்ந்திருக்க வேண்டும்.

3. ஏன் இதைச் செய்தார் ?

தூய அன்பினாலேயே தம்மைப் பலியாகக் கொடுத்தார். "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்" (ரோமர் 5 : 8). கெட்டுப்போன பாவிகள் மேல் இறைவன் **உள்ளம்** அவ்வளவாக உருகினபடியினால், தமது சொந்த குமாரனாகிய இயேசுவை மரிக்கும்படி பரிவுடன் ஒப்புக்கொடுத்தார். சர்வவல்லமையுள்ள இறைவன் இவ்வளவாக அன்புகூர்ந்து இந்தப் பெரிய ஈவைத் தந்தார்.

அவர் பாவியை நேசிக்கிறார். ஆனால் பாவத்தையோ வெறுக்கிறார். சில பெற்றோர் பிள்ளைகளிடம் நாம் நல்லவராயிருந்தால் ஆண்டவர் நேசிப்பார், நாம் கெட்டவராயிருந்தால் அவர் நேசிக்கமாட்டார் என்று சொல்வது உண்மையல்ல. ஏனெனில் அவர் எப்பொழுதும் நம்பேரில் அன்பாகவே இருக்கிறார். ஆயினும் நமது பாவங்களே அவரைவிட்டு நம்மைப் பிரித்துவிடுவதினால் அவற்றை அவர் அருவருக்கிறார். வைசூரியால் பீடிக்கப்பட்டிருக்கும் தன் பிள்ளையைத் தகப்பன் நேசிக்கிறான். ஆனால் தன்னிடமிருந்து அதைத் தூரமாகப் பிரித்துவைக்கும் அக்கொடிய நோயை அவன் வெறுப்பானல்லவா? மேலும் உன்னை நேசிக்கும்படியாக அவரிடம் நீ கேட்காமலிருந்தும், அவரே மனப்பூர்வமாக உன்னில் அன்புகூர்ந்தார். என் சகோதரனே, சகோதரியே, தேவன் உன்னை நேசிக்கிறார். நீ யாரானாலும் சரி, அவருக்கு விரோதமாக நீ எதைச் செய்திருந்தாலும் பரவாயில்லை, அவர் உன்னில் அன்பாயிருக்கிறார். ஒருவேளை உன்னைப்போன்ற மகா இழிவான நடத்தையுள்ள ஒருவன் உலகில் இருக்கமாட்டான். ஆயினும் உன்னை நேசிக்கிறார். இப்படிக்கொத்த இணையற்ற அவருடைய பேரன்பைப் புறக்கணித்துத் தள்ளத்துணிவாயா ?

4. இந்தக் கிரியையின் எல்லை

"என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" (யோவான் 6 : 37) என்று அவர் வாக்கருளி இருப்பதால் உலக மக்கள் எவருக்கும் இது உரியதாகும். விசுவா

கிறவன் "எவனே" என்ற சொல் இரட்சணியத்தின் மட்டற்ற தன்மையைத் தெரிவிக்கிறது. அடிக்கடி புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டிருக்கும் அந்த வார்த்தையானது உன்னையே குறிக்கும். "எவனே" என்ற பதம் வரும் இடங்களில் உன் சொந்தப் பெயரைச் சொல்லி வாசித்து அதை உனக்குச் சொந்தமாக்கிக்கொள்.

"எனக்காக அவர் பாடுபட்டார்;
பாத்திரத்தை எனக்காகக் குடித்தார்;
அவரை ஆணிகளால் அறைந்தவன் நானே;
இயேசுவே, நீர் மரித்தது எனக்காகவே"

மகா நீசனும், சீர்கெட்டவனுமான பாவியும், அல்லது தன்னை மிகவும் உத்தமனென்று பாவிக்கிறவனும், அவருடைய அன்புக்குத் தூரமானவரல்லர். அவர் இரட்சிப்பின் கரத்துக்கு விலகி ஒருவனும் அத்தனையாகத் தொலைக்கு ஆனவனுமாட்டான். பாவிகளையே அவர் ஏற்றுக்கொள்வார். ஏனென்றால் "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்," (1 தீமோத்தேயு 1 : 15). மேலும் "நீதிமான்களையல்ல பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்" என்று அவர் விளம்பினார். தன்னை நல்லவனென்று தன்னை நினைப்பவனுக்கு அவரிடம் இடமில்லை. அந்தோ, என்னிடத்தில் ஒரு நன்மையுமில்லை, நான் மகா பாதகன் என்று புலம்புவாயானால், உன்னை மீட்கும்படிக்கு அவர் வந்தார்.

அன்பனே, உன்னைக் கெட்டுப்போன பாவியாக ஒத்துக்கொண்டு, இப்பொழுதே உன் நேசரைப் பற்றிக்கொள். அவருக்கென்று நீ செய்தவைகளைப் பலவற்றைச் சார்ந்துக்கொள்ளாமல், அவர் உனக்காக செய்து முடித்ததை நம்பி ஏற்றுக்கொள். "உனக்கு அளிக்கக்கூடிய புண்ணியக்கிரியைகள் என்னிடத்தில் ஒன்றுமில்லை. நீர் சிலுவையில் நிறைவேற்றினதே எனக்குப் போதுமானதென்று அமர்ந்திருப்பேன்"

என்று அவரிடம் சொல். கிறிஸ்துவாகிய கற்பாறையின் மேல் கால் ஊன்றி நில். உன் இரட்சணியத்திற்கு அவர் நீதியும், கிருபையுமே ஆதாரமாக இருக்கின்றன.

பொய்யான வழிகள் எவையென்றும், உண்மையான பாதை எதுவென்றும் தெளிவுபடுத்தி விட்டேன். "ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்கு முன்வைத்தேன் என்று வானத்தையும், பூமியையும் இந்நாளில் சாட்சியாக வைக்கிறேன். ஆகையால் நீ பிழைத்திருப்பதற்கு ஜீவனைத் தெரிந்துகொள்" (உபாகமம் 30:19). ஆண்டவர் ஏதாவதொன்றைத் தெரிந்துகொள்ளச் சொல்லுகிறார். ஒரு தீர்மானத்தைச் செய்ய நீ முன் வரவேண்டும். ஆம், கிறிஸ்துவையே நீ தெரிந்துகொள். "ஆண்டவராகிய இயேசுவில் உன் நம்பிக்கையை வைத்துவிடு. அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய்" அப்படிச் செய்வாயா? ஆம், அன்பனே, இப்பொழுதே அவரில் உன் முழு நம்பிக்கையையும் வைத்துவிடு.

7

ஆண்டவர் அருளின பெரிய ஈவு

இதோ நாயீன் ஊர் வாசலண்டை நிற்கின்றோம். மரித்த ஒரு வாலிபனின் உடலைப் பாடையில் வைத்துக்கொண்டு வருகின்றனர். விதவையான தாயின் ஒரே மகன் அவன்.

அவ்வேளையில் ஒருவன் குறுக்கிட்டு வந்து, "நான் இவனை உயிர் பிழைக்கச் செய்வேன்" என்கின்றான். உடனே பாடையைச் சுமந்துகொண்டு வந்தவர்கள் நின்று ஆச்சரியத்துடன் அவனைப் பார்க்கின்றனர். அவன் உரைத்ததாவது: "இவனுக்குத் தேவையானது கல்வி அறிவே" என்று சொல்லி, தன் விஞ்ஞான நூல்களையும், மெய் விளக்கத்துறைக்கடுத்த ஆராய்ச்சியையும் மரித்தவனுக்குப் போதிக்கின்றான். அதனால் செத்தவனுக்குள் உயிர் வரவில்லை. மேலும் ஒருவன் கல்வி கற்பதற்கு முன்பு அவன் உயிருடனிருக்க வேண்டுமல்லவா ?

அடுத்தபடியாக பொதுநலத் தொண்டர் ஒருவர் வந்து, இவனுக்குத் தேவையானது சுமுகமான சூழ்நிலையாகும். சுற்றியுள்ள அசுத்தங்களையெல்லாம் அகற்றி, அவனைச் சுற்றிலும் அழகான பூக்களை வரிசைக் கிரமமாக வைத்தால் உயிர் பிழைப்பான் என்றான். ஆனால் அவன் இன்னும் பிணமாகவே இருந்தான். இதன் மத்தியில் மூன்றாவது மனிதன் வந்து, 'வாலிபனே, உயிரடைவேனென்று நீ உறுதியாக தீர்மானம்செய், அப்பொழுது எழுந்து உட்காருவாய்" என்றான். மேலும் அவன், "விதவையான உன் தாயின் துயரத்தைப் பார். நீ சீர்திருத்தம் அடையவேண்டும். தேவனுடைய ஒத்தாசையால் இனி நான் சாகவேமாட்டேன் என்று இச்சீட்டில் கையொப்பமிடு" என்றான். அந்தோ, சீர்திருத்தமடைவதைப் பற்றிச் சொன்னாலும் அவனுக்குள் உயிர் வரவில்லை.

"அந்நேரத்தில் பெரிய நபி ஒருவன் வந்து "இவனுக்கு அதிகமான சமயப்பற்று வேண்டும்; வேத ஆராய்ச்சியி லுைம், இறைவனின் 613 பிரமாணங்களை உண்மையாகக் கடைபிடிப்பதினுலும் இவன் பிழைத்துக்கொள்வான்" என் ருன். ஆனுல் அருகிலிருந்து ஒருவன், "நீர் சொல்வது இன்ன தென்றுக்கூட கேட்கக்கூடாமல் செத்துக் கிடக்கிற இவனுல் எதைச் செய்யமுடியும்?" என்ருன். அதற்கு நபி, "அப்படியா மகனே, அதை நான் மறந்துவிட்டேன்" என்று சொல்லி விசனத்துடன் நகர்ந்துவிட்டான். இப்படியாக இவர்கள் ஆலோசனை யாவும் தோல்வியுற்றன. அதன் பிறகு ஒருவர் திடநம்பிக்கையுடன் சமீபித்து வந்தார். மரணம், ஜீவன் இவற்றின் மருமம் இன்னதென்று அறிந்தவர் அவரே. இனிமையான குரலில் அவர் அதிகாரத்துடன், "வாலிபனே எழுந்திரு" என்று துணிவுடன் கூற வல்லமையுற்ற இவர் யார் என்று அதிசயித்து மக்கள் அங்குச் சூழ்ந்து வந்தனர். இதோ மாண்டவனின் கண் இமைகள் திறக்கலாயின. அவன் முகம் மிளிருகின்றது. இருதயம் துடிக்கின்றது. வாலிபன் காலூன்றி நிற்கின்ருன். ஆம், இயேசு ஜீவனை அவனுக்கு அருளிவிட்டார். செத்தவனுக்கு உயிரைவிட வேறெது வேண்டும்? அதைப் பரமசுதன் பரிவுடன் அளித்து விட்டார்.

அந்தப்படியே அன்பனே, "அக்கிரமங்களிலும் பாவங்களி லும் செத்தவனுயிருக்கின்ருய்." உனக்கும் ஜீவன் வேண்டும். அது சரீர உயிரல்ல, ஆன்மீக ஜீவனுகும். கிறிஸ்து அந்தப் பரம உயிரையும் அளிக்கின்ருர். மற்றெவரும் தரமுடியாத மகா உன்னத ஈவு அதுவன்ருே?

உயிருடன் செத்தவர்

நித்திய ஜீவனைப் பெருமல் ஒருவன் வானுலகில் பிரவே சிக்கமுடியாது. தெய்வீகமானவையே அங்கு இருக்கமுடியும். பரமனின் உயிரை ஆன்மாவில் பெற்றவன் மாத்திரம் அங்கு இடம் பெறுவர். மற்றவர் புறக்கணிக்கப்படுவர். யோவான் 10:10 இல், "அவைகளுக்கு ஜீவன் உண்டாகும்படி வந்தேன்" என்ருர் இயேசு.

ரோடிருக்கிறுன் என்று ஆண்டவர் விளம்புகிறுர். ஏனென்ருல் அந்தக் கிறிஸ்தவன் ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டவனுயிருக்கின்றுன். நித்திய ஜீவனைப் பெற்றதினுல் அவன் மறுபடியும் பிறந்திருக்கிறுன். எனவே அவனுடைய ஆன்மாவும், உடலும் செத்த பின்பும் அவன் ஆவியில் உயிரோடிருக்கின்ருன்.

ஒருவனின் நித்திய முடிவை அது தீர்மானிக்கிறது

''குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கின்றவன் நித்திய ஜீவனை உடையவனுயிருக்கின்றுன்; குமாரனை விசுவாசியாதவனே ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன் மேல் நிலைநிற்கும்,'' (யோவான் 3 : 36). இதோ, ஒரு பக்கத்தில் ஜீவனும் மறுபக்கத்தில் தேவனுடைய கோபமும் இருக்கின்றன.

''என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறுன் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றுர் (யோவான் 5 : 24). மீண்டும் ஜீவனையும், ஆக்கினையையும் இவ்வசனத்தில் காண்கிறேம்.

''நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை'' (யோவான் 10 : 28). நித்திய ஜீவனுகும் அந்த ஈவை அசட்டை செய்கிறவர் கெட்டழிவர். அதைத் தெரிந்துகொள்வது உனதுக் கடமை. ஆம், நித்தியத்திற்கடுத்த உன் நிலைமையை நீயே முடிவு செய்யவேண்டும்.

அன்பனே, நித்தியஜீவனைப் பெற்றிருக்கிருயா? இல்லையா? என்றென்றுமான பாக்கியமோ, வேதனையோ அதைப் பொறுத்ததாயிருக்கும்.

பிறப்பும் ஜீவனும்

பிறப்பின்றி உயிரில்லை. பிறப்பின் வாயிலாகவே உயிருடன் உலகில் ஒருவன் தோன்றுகின்றான். அப்படியே ஆவிக்குரிய உயிரையடைய, ''நீ மறுபடியும் பிறக்கவேண்டும்'' என்றார் இயேசு. ஆம், கிறிஸ்து உன் உள்ளத்தில் உருவாக வேண்டும். அப்பொழுது பரலோகத்தின் அழியாத ஜீவன் உன்னில் உருவாகும். கிறிஸ்தவம் என்பது செத்துப்போனதும், குளிர்ந்துபோனதுமான ஏதோ ஒரு சித்தாந்தத்தைப் பற்றின நம்பிக்கையன்று. அது உன்னதமான ஜீவனாகும். மனிதனின் உள்ளத்தில் பரமனின் உயிர் உருவாகின்றது. அதனாலே கிறிஸ்தவம் இவ்வுலகில் இணையற்றதொன்றாகும். பெற்றோர் இயற்கை உயிரை நமக்களிக்கின்றனர். ஆனால் அது இரட்சணியத்தை நமக்களிக்காதபடியினால், ஆண்டவர் ஆவிக்குரிய உயிரை நமக்கு அருளுகின்றார். ஒரே தடவை பிறந்தவன் இருவிசை மரிப்பான். ஆனால் இருவிசை பிறந்தவன் ஒரே தடவை மரிப்பான். ஆவிக்குரிய பிறப்பினால் தேவன் நமது பிதாவாக விளங்குகின்றார். ஏனென்றால் ''நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்'' என்று யூதரிடம் இயேசு கூறினார். எனவே உம்மை அவர் படைத்திருந்தும், இதுவரை அவரை உமது பரம தகப்பனாக அறியாதிருப்பீர். சகலருக்கும் இறைவன் பிதாவாயிருக்கிறார்; ஆகவே, மானிடர் யாவரும் சகோதரராவர் என்ற கூற்று உண்மையன்று. என்னைப் போன்று நீயும் தேவனுடைய குடும்பத்தில் பிறந்திருந்தாலொழிய நீ என் சகோதரனாயிருக்க முடியாது. ஏனென்றால் அவரை உன் பரம தகப்பனாக நீ இன்னும் அறியாதிருக்கின்றாயே!

பெரிய மாறுதல்

ஆவியானவரால் மறுபடியும் பிறக்கையில், ஒருவனுக்குள் சிறப்பான மாறுதல் உண்டாகும். ''ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் அவன் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின'' (2 கொரிந்தியர் 5 : 17). இந்த மாறுதலில்லாதவனுக்குள் ஆவிக்குரிய

ஜீவனில்லை. ஒருவன் நெஞ்சத்தைக் கிறிஸ்துத் தமக்கு உறைவிட மாக்கிக்கொள்கையில், அவன் வாழ்க்கைப் புதிதா கின்றது. மற்றபடி அது போலியான மனந்திரும்புதலாகும் இதுவரை நீ நேசித்தவற்றை வெறுப்பாய். அப்படியே உனக்கு வெறுப்பாயிருந்தவற்றை இப்போது விரும்புவாய். இதுவே உண்மையான மனந்திரும்புதலும், மறுபிறப்பு மாகும்.

மரணத்தினின்று ஜீவனுக்குட்படுதல்

மறுபடியும் பிறப்பதென்பது மரணத்தினின்று ஜீவனுக்குக் கடந்துசெல்வதாகும். மரித்தப் பிற்பாடே ஆவிக்குரிய மன மாறுதலை அடைகிறோம் என்று நினைப்பது தவறு. ஒருவன் மனந்திரும்புகையில் தானே அவனுக்குள் பெரிய மாறுதல் உண்டாகின்றது. இயற்கை உலகில் மக்கள் யாவரும் பிறக் கின்றனர். ஆனால் ஆவிக்குரிய நிலைமை முற்றிலும் வேறு பட்டது.

நமது சுய முயற்சிகள் யாவும் இம்மைக்கடுத்தவை யாகும். ஆனால் இயற்கை உலகிற்கும் மேலான ஆவிக்குரிய உலகின் உயிரை ஒருவன் பெற்றுக்கொள்ளுகையில், அவன் இருளின் ஆட்சியினின்று நீங்கி ஒளியின் ஆட்சிக்குட்படுகின் றான். எனவே இவ்வுலகத்திலிருக்கையிலேயே ஒருவன் இறை வனின் ஆட்சிக்குள்ளாவது அவசியம். மற்றபடி அவன் சாத்தானின் அடிமையாயிருப்பான். அவன் சாகையில் அவ னுக்குச் சொந்தமாயிருக்கும் யாதாமொரு ஆட்சியின் நித்தியமான பகுதிக்குள் அவன் ஆன்மா செல்லும். நண்பனே இப்பொழுது நீ எந்த ஆட்சியின் கீழிருக்கின்றாய்?

சீமை கருவாலி மரக்கொட்டை பார்ப்பதற்கு அழகற்ற தும், கருப்பாகவும் இருக்கும். ஆனால் ஒரு வைரக்கல்லானது மிளிர்ந்து, சுடர் வீசுகின்றது. அது போன்றே சில கிறிஸ்த வர் வைரக்கல்லுக்கொப்பாக தமது ஒழுக்கநெறியைக்குறித் துப் பெருமிதங்கொண்டு, மேன்மை பாராட்டுவர். தங்களை மற்றவரிலும் சிறந்தவரென்று எண்ணிக்கொள்வர். அந்த மரத்தின் கொட்டையையும், வைரத்தையும் ஒரு தரையில் புதைத்துவைப்போமானால், அநேக ஆண்டுகளுக்குப் பின்பு

நாம் காண்பதென்ன? அந்த விதை மிகவும் உயரமான ஒரு மரமாக ஓங்கி வளர்ந்து, எந்தப் புயலுக்கும் அசையாமல் அங்கு இருப்பதைக் காண்போம். ஆனால் வைரக்கல்லோ மண்ணுக்குள் புதைத்தப்படியே இருக்கும். இதற்குக் காரண மென்ன? ஒன்று உயிருள்ள வித்தாயிருக்கையில், மற்றது உயர்ந்த வைரமாயினும், வெறுங்கல்லாகும்.

அப்படியே இயல்பான மனிதனில் இறைவனின் உயிரில்லை. பரம ஆவியைப் பெற்றவனே தேவனின் ஜீவனை உடையவனா யிருக்கின்றான். ஆவிக்குரியவன் தேவனுடைய ஜீவனை உடையவனாயிருப்பதினால் நித்திய காலம் அவரோடு ஜீவிப்பான். சன் மார்க்கனோ தேவனுடைய முடிவில்லா வாழ்வைப் பெற்றவன் போன்று தோன்றினாலும் செத்தவனாகவே இருக்கின்றான். நிக்கோதேமு நன்னடக்கையுள்ளவனும் சிறந்த சமயப்பற்றுடையவனுமாயிருந்தான். ஆயினும் ஆண்டவர், ''நீ மேலிருந்து ஆவியால் பிறக்கவேண்டும்'' என்றார். இரண்டு பூச்செண்டுகள் இருக்கின்றன. தூரத்திலிருந்துப் பார்ப்பதற்கு இரண்டும் அழகாக தோற்றமளிக்கின்றன. ஆனால் நெருங்கி வந்து முகர்ந்தால், உண்மையான பூக்களிலிருந்து மணம்கமழ்கின்றது. அடுத்ததைக் காகிதப்பூவாயிருக்கக் காண்கின்றோம். ஒன்று உயிரோடிருக்கையில், மற்றது மனிதனின் வேலையாகும். அன்பனே, உன் நிலைமையும் அப்படியே இருக்கும். வெளித்தோற்றமாக ஓர் உத்தம கிறிஸ்தவனைப் போன்று நீ பாவனை செய்துகொண்டிருப்பாய். ஆனால் உள்ளத்திலோ ஆவிக்குரிய உயிரற்றவனாக இருப்பாய். தெய்வீகத் தன்மை நம்மில் விளங்கும்படி அவருடைய ஜீவன் நமக்கருளப்பட வேண்டும்.

திருமறை சித்தாந்தங்களையும், பற்பல நல்லொழுக்க விதிகளையும் கடைபிடிப்பது கிறிஸ்தவ வாழ்க்கையன்று. தூய ஆவியானவரின் மூலமாக இறைவனின் உயிர் ஒருவனுக்குள் வந்து அவனைப் புது மனிதனாக மாற்றுகிறது. மலைப்பிரசங்கத்தையும், ஏனைய வேதக் கற்பனைகளையும் அனுசரிக்க முற்படுவதினால் மாத்திரம், அந்த ஜீவனை ஒருவன் அடைய முடியாது. ''குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், குமாரன் இல்லாதவன் ஜீவனில்லாதவன்'' (1 யோவான் 5 : 12).

புதிய இனம்

மறுபிறப்பின் வாயிலாக ஒரு புதிய இனம் தோன்றுகின்றது. "மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும்." ஓர் இனத்தை மற்றோர் இனமாக மாற்ற எவராலும் முடியாது. உலகில் இந்த இயற்கை விதியை தேவன் நியமித்துள்ளார். மிருகத்தை மனிதனாயும், மீனை ஒரு பறவையாயும் எப்படி மாற்றக்கூடும்? முடியாது. அப்படியே. "ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்." இது ஒரு புது இனமாக விளங்குகின்றது. தேவனின் ஆவியானவரால் ஒருவன் மறுபிறப்படையும் போது இந்தப் புதிய தன்மையைப் பெற்றுக்கொள்ளுகின்றான். நீ ஏன் பாவஞ்செய்கின்றாய்? உன் சுபாவ தன்மை அப்படிப்பட்டதன்றோ? ஆதாமின் சந்ததியாயிருப்பதினால் அவனைப்போல் நாம் தீமைக்கு ஆளாகின்றோம். அப்படியே நீ கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் அவரைப்போல் நடப்பாய். ஸ்மித் என்பவரின் மகனாயிருப்பதினால் நான் அவருடைய சாயலை உடையவனாயிருக்கின்றேன். என் சுயமுயற்சியினால் அப்படியிருக்க முடியாது. அவர் குடும்பத்தைச் சேர்ந்தவனாகப் பிறந்திருப்பதினால், என் நடை உடை பாவனை யாவும் அதற்கேற்றதாக இருக்கிறது.

நாய் குலைக்குமேயன்றி சேவலைப்போல் கூவாது. ஏனென்றால் ஒவ்வொன்றும் அதன் தன் இனத்திற்கேற்ப அப்படிச் செய்கின்றது. தரையில் படுத்திருக்கும் பசுவும், குதிரையும் எழுந்திருப்பதைக் கவனித்தீர்களா? பசு தன் பின்னங்கால்களை உயர்த்தி எழுந்திருக்கையில், குதிரை தன் முன்னங்கால்களை உயர்த்தி எழுந்து நிற்கும். அப்படியே பாவத் தன்மையுற்றவராகிய நாமும் இயல்பாகத் தீமைகளைச் செய்கின்றோம். மறுபிறப்பின் மூலமாகப் புதிய தன்மை நம்மில் உருவாகுகையில் மாத்திரம், நம் சுபாவ குணம் மாறும். ஆகவே புது பிறப்பு நமக்கு இன்றியமையாத தொன்றாகும். வானுலகில் இறைவனின் உயிர் மாத்திரம் வாழமுடியும். இவ்வுலகத் தன்மைக்கு அங்கு இடமில்லை. மீன்களே நீரில் உயிர் வாழக்கூடும். பறவைகள் வானத்தில் பறக்கும். அப்படியே இறைவனின் உயிரைப் பெற்றவன்

மாத்திரம் வானுலகில் பிழைத்திருப்பான். எனவே, "ஒருவன் மறுபடியும் பிறக்கவேண்டும்" என்று ஆண்டவர் வலியுறுத்தினபோது, உன்னதத்தில் வாழும்படி அவ்வுலகத்தின் தன்மையை ஒருவன் இவ்வுலகிலேயே பெற்றிருக்க வேண்டுமென்றார்.

நிகழ்கால அனுபவம்

குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கின்றவன் நித்திய ஜீவனை உடையவனாய் இருக்கிறான் (யோவான் 3 : 36). "என் வசனத்தைக் கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (யோவான் 5 : 24). "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்" (1 யோவான் 5 : 12). கர்த்தருக்குத் துதி உண்டாவதாக! அன்பனே, இப்பொழுதே நீ இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றவனாயிருக்கலாம்.

மரிக்கும்போதோ, அல்லது மரித்தபிற்பாடோ ஒருவன் இரட்சிக்கப்படுவான் என்று நினைப்பது தவறு. இரட்சிப்பை ஒருவன் தற்போதே பெற்றனுபவிக்கின்றான். மரிக்கும் முன்பே இந்த நித்தியஜீவனை பெறாமலிருந்தால், அதன் பிறகு அதை நீ கண்டடையமாட்டாய். "இதோ, இப்பொழுதே அனுக்கிரக காலம்; இதோ, இப்பொழுதே இரட்சணிய நாள்."

அது உடனடியான அனுபவம்

ஆம், உலகில் ஒரு குழந்தைப் பிறப்பதைப் போன்றே ஆவிக்குரிய பிறப்பும் நிகழ்கின்றது. அநேக நாட்களாக நாம் பிறந்துகொண்டே இருப்பதில்லை. ஒவ்வொருவருக்கும் திட்டவட்டமாகத் தனது பிறந்த நாள் தெரியும். அப்படியே இரட்சணியத்தை ஒருவன் வெகு நாட்களாக நாடித் தேடியும், அதை அவன் உடனடியாகக் கண்டடைவான். மக்கள்

எப்போதும் அவ்விதமே மனந்திரும்பியிருக்கின்றனர். பெந்தேகோஸ்தே நாளில் மூவாயிரம் பேரும், தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் பவுலும், சிறைச்சாலைக்காரனும் புது ஜீவனை உடனடியாகக் கண்டடைந்தனர். ஏதோ ஒரு நன் கொடையை நான் உனக்களித்தால், சற்று முன்பு வெறுமை யாயிருந்த உன் கையில் இப்பொழுது அந்தப் பொருள் இருக்குமன்றோ? ஆம், ஒரு நொடியில் என்னிடமிருந்து அது உன் கைக்கு வந்துவிட்டது. அப்படியே அழியாத ஜீவனுள்ள தேவனின் சிறந்த நன்கொடையாகும். அதை இதுவரை ஒருகால் நீ பெற்றுனந்திக்காமலிருப்பாய். ஆனால் அதை ஏற்றுக்கொண்ட உடனே அது உன்னுடையதாகும். படிப் படியாக எவரும் மனந்திரும்புவதில்லை. ஜீவனை எப்போதும் உடனடியாகவே கண்டடைகின்றோம்.

திட்டமாக அதை அறிந்து கொள்ளலாம்

இப்புதிய ஜீவன் இன்னதென்று நீ புரிந்துக்கொள்வாய். "உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும் இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்" (1 யோவான் 5 : 13). ஆம், ஐயந்திரிபற அதை அறிந்திருப்பாய். தூர இடத்தில் திருத்தொண்டாற்றுகையில் ஒருசமயம், "நான் இரட்சிக்கப் பட்டிருக்கிறதை அறிவேன்" என்று சொன்னதை கேட்ட மற்றோர் ஊழியக்காரி, அது வெகு துணிகரமான நினைவு என்றாள். "அதைப்பற்றிய நிச்சயம் உனக்கில்லையா?" என்று அவளிடம் வினவினபோது, "நியாயத் தீர்ப்பு நாளில்தான் ஒருவர் அதைக்குறித்து உறுதியாக அறிவர்" என்றாள். நானோ, "தேவனை அறியாத இம்மக்கள் மத்தியில் தற்செய நிலை அறிவிக்க வந்திருக்கும் உனக்கே அதைக்குறித்து நிச்சயமில்லாதிருக்கையில், எப்படி அவர்களைக் கிறிஸ்துவி விடம் நீ வழி நடத்துவாய்?" என்றேன். மற்றெல்லாவற் றையுமடுத்து நாம் உறுதியுற்றவராயிருக்கையில், இரட்ச ணியத்தைக்குறித்து மாத்திரம் நாம் ஏன் சந்தேகங்கொண் டவராயிருக்கிறோம். "திருமணமானவளா; உனக்குப் பிள்ளை கள் உண்டா; பகல் உணவு அருந்திவிட்டாயா? என்று

உன்னைக் கேட்டால், எத்துணை நிச்சயமாக நீ பதில் அளிப்பாய்? "அப்படி நினைக்கின்றேன், அல்லது நம்புகின்றேன்" என்று சொல்லாமல், "ஆம்" அல்லது "இல்லை" என்று உறுதியுடன் பதிலுரைப்பாய். அப்படியிருக்க இரட்சிப்பைக் குறித்து மாத்திரம் ஏன் நிச்சயமற்றவனாயிருக்க வேண்டும்?

அந்த ஜீவனை அழிக்கமுடியாது

என்றைக்காவது நான் மரித்துவிட்டேன் என்று கேள்வியுற்றால், அதை நீங்கள் நம்பவேண்டாம். இப்போதே அழியாத நித்தியஜீவனை நான் பெற்றிருப்பதால், என் ஜீவன் பிரிகையில் மேலும் அபரிமிதமாக அதைக் கண்டானந்தித்துக் கொண்டிருப்பேன்.

நித்தியஜீவனைப் பெற்றுள்ளவன் மரிக்காமலிருப்பான், என்றும் பிழைத்திருப்பான் என்று இயேசு திருவாய் மலர்ந்தார். (யோவான் 6 : 50-51). மேலும், "உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலுமிருப்பான்" என்றார் (யோவான் 11 : 26). நித்திய ஜீவன் என்பதை பரிசுத்த வேதத்தில் பன்முறை வாசிக்கின்றோம். நமது இரட்சகர் மரணத்தைப் பரிகரித்து ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார் (2 தீமோத்தேயு 1 : 10).

என் உடலை மனிதர் கொன்றாலும், என் உயிரை அவரால் அழிக்கமுடியாது. தற்காலிகமாக நான் குடியிருக்கும் என் சடலமாகிய வீட்டை இடித்தாலும், அதிலிருக்கும் என்னையோ அழிக்க இயலாது. ஏனென்றால் நித்தியஜீவனை நான் பெற்றிருக்கிறேன். ஒருவேளை என் தலையை வெட்டுவதினால், ஒரு சிறைபோல் இப்பூத உடலிலிருக்கும் நான் விடுதலையடைவேன். ஆம், என்றுமறியாத ஆனந்த களிப்பையும், எந்தக் கட்டுக்கும் உட்படாத ஓர் உன்னத வாழ்வையும் மறு உலகில் நான் பெற்றுக்கொள்வேன். நோயுற்றதும், சோர்வுற்றதும், ஆம், மெலிந்துபோனதுமான இவ்வுடலுடன் இனி நான் அவதியுறாமல், எத்தனை மகிமையான பேறு பெற்றவனாயிருப்பேன்!

எனக்கு ஆதாரமான வசனம்

"தேவன் நமக்கு நித்தியஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்" *(1 யோவான் 5 : 11-12).*

"தேவன் தந்திருக்கிறார்". இரட்சிப்பு என்பது தேவனுடைய இலவசமான ஈவு. அதைச் சம்பாதிக்க ஒருவராலும் ஏலாது. அதைப் பெறும் உரிமை எவருக்குமில்லை. நன் கொடையாக ஏற்க விரும்புகின்றவருக்கே அது அருளப்படும். "தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன் (ரோமர் 6: 23). ஆகவே ஒன்றுமற்ற நீ அவரிடம் வந்து, இலவசமாக அதை ஏற்றுக்கொள். கெட்ட குமாரன் திரும்பி வீட்டுக்கு வந்தபோது, தகப்பனின் அன்பை விலை கொடுத்தா வாங்கினான்? அவனுக்குக் கிடைத்த ஆடை, மோதிரம், மிதியடி, விருந்து இவற்றிற்காக பணம் கொடுத்தானா, இல்லையே! அதைப்போன்றே முடிவில்லா இப்பேறும் நமக்களிக்கப்படுகின்றது.

"தேவன் நமக்கு நித்தியஜீவனைத் தந்திருக்கிறார்" *(1 யோவான் 5:11).* என் கையிலிருக்கும் இத்தாளை நித்திய ஜீவன் என்று வைத்துக்கொள்வோம். "தேவன் நமக்கு நித்தியஜீவனைத் தந்திருக்கிறார். அந்த ஜீவன் குமாரனில் இருக்கிறது," என்று வாசிக்கிறோமல்லவா? அப்படியானால் அந்த தாளை இந்த புத்தகத்தில் வைக்கின்றேன். இப்போது அந்தத் தாள் புத்தகத்திலிருப்பதற்கு ஒப்பாக, நித்தியஜீவன் கிறிஸ்துவுக்குள் இருக்கின்றது. எந்தச் சபையிலும், நன்னெறியான நடக்கையிலும், யாதாமொரு மார்க்கத்திலும் அல்ல, அது கிறிஸ்துவிலேயே இருக்கின்றது. கிறிஸ்துவினிடம் வராதவன் அதைக் கண்டடையான்.

மேலும், "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்" என்று வாசிக்கிறோம். இப்புத்தகத்தை என் கையில் வைத்

திருக்கையில் அந்தத் தாளையும் உடையவனுயிருக்கிறேன் அன்றோ? எனக்கு அந்தத் தாள் தேவையானால் அது இருக்கும் புத்தகத்தண்டை நான் செல்லவேண்டும். அப்படியே தமது குமாரனில் நித்தியஜீவனை தேவன் வைத்திருக்கின்றார். எனவே குமாரனை உடையவன் ஜீவனை உடையவன் என்கின்றார். அன்பனே, நித்தியஜீவனைக்குறித்து நீ கவலைப்படத் தேவையில்லை. முக்கியமான கேள்வி யாதென்றால் தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து உன் இரட்சகராயிருக்கிறாரா என்பதே. குமாரனை உடையவனாயிருந்தால், எனக்கு அழியாத நித்தியஜீவன் உண்டு.

இறுதியான வார்த்தைகளைக் கவனிக்கவும்: "தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்." கிறிஸ்து இல்லாமல் உன்னத ஜீவனில்லை. எனவே கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவனுக்கு தேவன் அளிக்கும் ஜீவனில்லை. அப்படியானால் அவன் கெட்டழிவான்.

நீ ஏன் நாசமாகவேண்டும்? "உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடம் வர உங்களுக்கு மனமில்லை" (யோவான் 5 : 40) என்றார் இரட்சகர். தன்னிடம் வரமுடியாத நிலையிலிருப்பதாக அவர்களிடம் சொல்லாமல், "என்னிடம் வர உங்களுக்கு விருப்பமில்லை" என்கிறார். மதிப்பிடமுடியாத இப்பெரும் பேற்றை, இலவசமாக வாங்கிக்கொள். அப்படிச் செய்வாயா? அன்பனே, இப்பொழுதே அவரைப் பற்றிக்கொள்ளும்படிக்கு உன்னை வருந்தி வேண்டுகின்றேன்.

———

8

அறுப்புக்காலம் சென்றது

நான் பதினெட்டு வயதுள்ளவனாயிருந்தபோது, ஜே. டி. மாரோ என்ற போதகர் மிகவும் சிறப்பாக அருள் உரை யாற்றுகின்றார் என்று கேள்வியுற்று, அவர் ஆலயத்திற்குச் சென்றேன். ஏற்கனவே ஓட்டப் பந்தயத்தில் புகழ்ப் பெற்றிருந்த அவர், அன்று மாலை அங்கு திரண்டு வந்திருந்த மக்களுக்கு ஆவியானவரால் நிறைந்து உரைத்த திருவசனம், இன்றும் என் செவிகளில் தொனித்துக்கொண்டிருக்கின்றது. அதாவது: '' அறுப்புக்காலம் சென்றது, கோடைக்காலமும் முடிந்தது, நாமோ இரட்சிக்கப்படவில்லை '' என்பதே (எரேமியா 8:20). இவ்வசனத்தை அவர் மீண்டும், மீண்டும் பகர்ந்தபோது கேட்டவர் உள்ளம் உருகிற்று. என் மனதோ அவர் வார்த்தைகளினால் மிகவும் பரவசமுற்று அவரைப் போன்றே ஆண்டவரை நானும் சேவிக்க முற்படுவேன் என்பதாக அன்றுத் தீர்மானிக்கலானேன். இன்று அதே இடத்தில் நின்று நானும் நற்செய்தியைப் பறைசாற்றுவேன் என்று யாரும் நினைக்கவில்லை! டி. எல். மூடி பிரசங்கியாரின் நாட்களில் பாடின ஒரு பல்லவியின் பொருளாவது:

'' அறுவடை முடிந்த பிறகும்,
கோடை காலம் சென்ற பிறகும்,
அந்தோ, இயேசு உன்னை அழைக்கவே மாட்டார்''
என்பதாகும்.

அந்தப் பாடலினால் எண்ணிறந்தவர் எச்சரிப்படைந் தனர். நித்தியம் அடுத்திருக்கிறதென்றும், கால தாமதஞ் செய்வது மிகவும் ஆபத்து என்றும் அது உணர்த்துகின்ற தன்றோ? இதையடுத்து நான்கு உண்மைகளை அறிவுறுத்த ஆசிக்கின்றேன்.

1. அறுவடை நடப்பது உறுதி

நான் சிறுவனாயிருந்த காலத்தில் ஆண்டுதோறும் எங்கள் ஊரிலிருந்து அடுத்த மாநிலங்களில் அறுப்புக்காக மிகவும்

துரிதமாக ஏராளமான ஆட்களைப் புகைவண்டித் தொடரில் ஏற்றிச்செல்வர். ஏன் இந்தப் பரபரப்பு? சிறிது கால தாமதமாகச் சென்றால் என்ன? அந்தோ, உடனே பலனைத் திரட்டாவிடில் பெரிய நஷ்டம் உண்டாக்கும்.

அன்பரே, ஆவிக்குரிய அறுவடையை அடுத்தும் இது உண்மையன்றோ?' இறைவனின் நற்செய்தியை யாதாமொரு குழுவினருக்குப் பறைசாற்றுகையில், தேவ ஆவியானவர் அம்மக்களின் பாவங்களை உணர்த்தி, கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும்படி அவர்களுடன் போராடுவார். அவர் சத்தத்தை அல்லத் தட்டுபவர் நித்திய அழிவைக் கண்டவர். நோவாவின் நாட்களில், நூற்றிருபது ஆண்டுகள், வரப் போகும் ஜலப்பிரளயத்தைக்குறித்து மக்கள் எச்சரிக்கப் பெற்றனர். அதற்கு அவர்கள் செவிசாய்க்கவில்லை. ஏனென்றால் அதுவரை அவர்கள் மழை பெய்ததைப் பார்த்ததே யில்லை. அதனால் அவன் வார்த்தையை நம்பாமல், நகைத்து அவனை ஏளனஞ் செய்தனர். அத்திருத்தொண்டனோ, தொடர்ந்து அம்மக்களுக்கு வரப்போகும் அழிவைப்பற்றி எச்சரித்துப் பேழையை உருவாக்கிக்கொண்டிருந்தான். அவ்வேலைக்கு உதவின தச்சரும் அவனை அசட்டை செய்து, பரிகாசம் பண்ணினர். அக்காலத்தார் இறைவனை விட்டு விலகி பாவங்களில் முழ்கிக் கிடந்தனர். ஒழுக்கமற்றதும், சீர்கேடானதுமான வாழ்க்கை, வன்முறை, கொடுமை முதலானவை அந்நாட்களில் முதல் இடம் பெற்றன. இவற்றை வெறுக்கும் ஆண்டவர், அவர்கள் மனந்திரும்ப பொறுமையுடன் காத்திருந்து, அவர்களுக்குப் போதுமான வாய்ப்பையும் அளித்தார்.

சடுதியாக நோவா முன்னறிவித்த அழிவு வந்தது. அவர்கள் என்றும் கண்டிராத பேய் மழை பெய்து, வெள்ளம் அவர்களை வாரிக்கொண்டு போயிற்று. நோவாவும் அவன் குடும்பத்தாரும் பேழையில் பத்திரமாக இருந்தனர். கதவு தாழிடப்பட்டதினால், வெளிப்புறத்திலிருந்த அனைவரும் மாண்டு மடிந்தனர். சிறிது காலம் கழித்து இஸ்ரவேல்

யூதா நாட்டாருக்கும் ஓர் எச்சரிப்பு விடுக்கப்பட்டது. தீர்க்கதரிசிகள் பலர் அவர்களுக்கு வரும் அழிவை முன்னிட்டு எச்சரித்துக்கொண்டே இருந்தனர். அம்மக்களோ யெகோவாவுக்கு விரோதமான செயல்களை விட்டு விலகாமலிருந்தனர். இறுதியாக சமாரியாவும், எருசலேமும் எதிரிகளிடம் தோல்வியுற்று, பாபிலோனுக்குச் சிறை சென்றனர். அதற்கு முன்பு முற்றுகை போடப்பட்டிருந்த நாட்களில், மக்கள் இரத்தம் வெள்ளமாக ஓடிற்று. கடும்பஞ்சத்தினால் வாடின தாய்மார் தங்கள் பிள்ளைகளைத் தின்றனர். அந்தோ, அவர்களுக்கு அறுப்புக்காலம் சென்றுவிட்டதே!

ஆண்டவராகிய இயேசுவின் நாட்களில் அவர், "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும்வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" என்றார். (மத்தேயு 23: 37, 38.) அப்படியே கி.பி. 70ம் ஆண்டில் எருசலேமுக்குப் பயங்கரமான ஆக்கினை வந்தது. அதன் வீதிகளில் இரத்தம் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடிற்று. நெடுஞ்சாலைகள் ஒரு காடு போன்றுக் காட்சி அளிக்கும் வண்ணம், சிலுவைகளில் எண்ணிறந்த யூதரை ஆணிகளில் அறைந்தனர். மனிதர் ஒருவரையொருவர் கொன்றுத் தின்றனர். இப்படியாக இரட்சகரின் எச்சரிப்பை ஏற்க மறுத்தவரான யூதர் இந்நாள்வரை உலகமெங்கும் சிதறுண்டிருக்கின்றனரே! என்ன பரிதாபம், அவர்களையடுத்தும், "அறுப்புக்காலம் சென்றது, கோடைக் காலமும் முடிந்தது; அவர்களோ இரட்சிக்கப்படவில்லை" என்ற வார்த்தைகள் உண்மையாயிற்றன்றோ?

தேவன் இன்னும் தம்மைச் சேர்த்துக்கொள்ள ஆசிக்கின்றார். முன் ஒருக்காலும் இன்றுபோல் இயேசுவின் நற்செய்தியை அறிய மக்களுக்கு ஏதுவிருந்திராது. கடந்த சில நூற்றாண்டு

களில் மாத்திரம் எத்தனை ஆர்வத்துடன் இச்சேவை நடந்தேறியுள்ளதென்று நாமறிவோம். இருநூறுண்டுகளுக்கு முன் ஆங்கிலேய நாடு பிரஞ்சுகாரரின் புரட்சிக்கு இறையாக இருந்தது. இக்கட்டான அந்நாட்களில் ஜான் வெஸ்லி, ஜியார்ஜ் ஒயிட்பில்ட் முதலான பக்தர்களை அவர் எழுப்பினர். ஆவியானவரால் நிறைந்திருந்தவரான வெஸ்லியின் தொண்டர் உலகமெங்குஞ்சென்று உயிர்ப்பிக்கும் செய்தியைப் பறை சாட்டினர். அதன் விளைவாக எண்ணிறைந்த ஆண்களும், பெண்களும் தங்கள் பாவங்களை விட்டு மனந்திரும்பினர். மேலும் பின்னி, மூடி என்ற மகான்களின் மூலமாக அமெரிக்காவை ஆண்டவர் வல்லமையாக அசைத்தார். அதனால் அந்நாட்டிற்கு மகிமையான உயிர்மீட்சி வந்தது. ஆயிரக்கணக்கானவர் இரட்சகரை ஏற்றுக்கொண்டனர். ஆயினும் இறைவனின் இரக்கத்தைப் பலர் அசட்டை பண்ணினர்.

அதன் பிறகு ஸ்பர்ஜன், பில்லிசன்டே, டோரி, ஜிப்சி ஸ்மித் போன்ற திருத்தொண்டர் மேலை நாடுகளில் சிறந்த விதமாக நற்செய்தியை அறிவித்தனர். அவர்களின் உருக்கமும், எச்சரிப்புமான செய்திகளுக்கும் அநேகர் செவி சாய்க்கவில்லை. இக்கடைசி நாட்களில் பில்லிகிரஹாம் போன்றவர் மக்களை இறைவனுடன் ஒப்புரவாகும்படி அறைகூவி அழைக்கின்றனர். இப்படியாக இரக்கத்தைப் பெறும்படி இறைவன் ஒவ்வொருவருக்கும் பல வாய்ப்புகளை அளிக்கின்றார். ஆனால் கிருபையின் சத்தத்திற்குக் கீழ்ப்படியாதவர் தண்டனைக்கு ஆளாவது நிச்சயமன்றோ ?

2. அறுவடையை அருளுகிறவர் ஆண்டவர்

மனிதன் விதைத்து நீர்ப்பாய்ச்சினாலும், ஆண்டவரே அதை விளையச் செய்கின்றார். ஆர்வத்துடன் அருளுரையாற்றி, திருமறையைப் போதித்து இவ்வாறாக மக்களை எச்சரித்து, அவர்களை ஆண்டவரிடம் அழைக்கும் ஊழியர் உளர். இறைவனுடன் ஒப்புரவாகும்படி நாம் எத்தனை உருக்கத்துடன் வேண்டினாலும், மக்களை இரட்சிக்கக் கூடியவர் அவரே. யோவான் 6 : 44 இல், “என்னை அனுப்பின

பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்'' என்று இயேசுகிறிஸ்து சொன்னதைக் கவனிக்கவும். எனக்குப் பிரியமான வேளையில் இரட்சிக்கப்படுவேன், அல்லது நான் ஆயத்தமாயிருக்கும் போது இயேசுவை ஏற்றுக்கொள்வேன் என்று ஒரு வேளை நினைப்பாய். அப்படிச் செய்யமுடியாதென்று அறிவுறுத்த விரும்புகின்றேன். பரிசுத்த ஆவியானவர் உன் உள்ளத்தில் கிரியை செய்து உணர்த்துகையில்தானே உடனடியாக நீ இயேசு இரட்சகரைப் பற்றிக்கொள்ள வேண்டும்.

ஆண்டவர் உன்னுடன் வழக்காடி அழைக்கிறதை உணர்ந் திருக்கின்றாயா? பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் அன்பை உனக்கு வெளிப்படுத்தி, அவரிடம் உன் மனத்தைக் கவர்ந்திருக்கின்றாரா? இயேசுவை உன் சொந்த இரட்சக ராக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆவலும் ஆசையும் என்றாவது உனக்கு ஏற்படாதா? ஆம், இரட்சிப்பைக் குறித் தும், மறுபிறப்பையடுத்தும் மனத்தில் பாரம் கொண்டிருந் தாயா? பரிசுத்த ஆவியானவர் உன் பாவங்களைக் கண்டித்து உணர்த்தினதுண்டா? அப்படியானால் தேவனின் மெல்லிய குரலை நீ கேட்டிருக்கின்றாய். ஆண்டவர் நிச்சயமாக உன்னில் கிரியை நடப்பிக்கிறார். மனந்திரும்பும்படி ஆவி யானவர் உன்னைக் கனிவுடன் அழைக்கின்றார். ஆனால் உட னடியாக அவர் சத்தத்திற்குக் கீழ்ப்படியாதிருந்தால், இப் பொழுது உன் மனம் கடினப்பட்டிருக்கும். ஒருக்கால் பாவ உணர்ச்சியை இழந்து இரட்சிக்கப்படவும் மனமில்லாதிருப் பாய். ஆம், உன்னுடன் அவர் தொடர்ந்து பேசாதிருந்தால் நீ அவரைத் துக்கப்படுத்தியிருக்கிறாய். ஏனென்றால், ஆவி யானவரின் குரலுக்குப் பன்முறை செவிசாய்க்காதவன், மீண்டும் அவர் சத்தத்தைக் கேட்கமாட்டான். இறைவனின் அழைப்பை ஏற்க மறுக்கும் தருணத்திலெல்லாம், ஒருவன் மனம் அதிகமதிகமாகக் கடினப்படுவதில், இறுதியாக அவன் இரட்சணியத்துக்குத் தூரமாகின்றான்.

ஆண்டவர் உன்னைச்சந்திக்கும் காலமும், சிறந்த வேளை யும் உண்டு. அப்பொழுது ஆவியானவர் உன்னுடன் போரா

டுகிறதைத் திட்டமாக அறிவாய். அவரேயன்றி உன்னை இரட்சிக்கக்கூடியவர் வேறொருவருமில்லை. ஏனென்றால் அறுவடை அளிக்கிறவர் ஆண்டவர் ஆகையால் அன்பரே, இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள். (எபிரெயர் 4 : 7).

அவர் உன்னைச் சந்திக்கும் காலத்தை அலட்சியம் பண்ணுவாயானால், மீண்டும் அவரண்டை வரமுடியாத ஒரு நிலை ஏற்படக்கூடும். எனவே உன் உள்ளத்தை ஆராயும்படிக்கு மிகவும் கனிவுடன் வேண்டுகிறேன். ஆவியானவர் உன்னில் கிரியை செய்கின்றாரா? ஆன்மா விசாரம் உனக்குண்டா? ஆண்டவர் தம்மிடமாக ஈர்த்துக்கொள்ளுகிறதை உன் உள்ளம் உணருகின்றதா? "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்" என்றார் இயேசு.

3. சிறந்தவற்றையே அறுவடை செய்வர்

முப்பது வயதுக்குமேல் இரட்சிக்கப்படுகிறவர் சிலர். பொதுவாக இருப்பதைந்து வயதைத்தாண்டுவதற்கு முன்பே அநேகர் இரட்சிப்பைக் கண்டடைவர். எண்ணிறந்தோர் இருபது வயதுக்குள்ளாக மனந்திரும்புகின்றனர். இப்பொழுது உன் வயதென்ன? வயது அதிகரிக்கையில் குணப்படுவதற்கான வாய்ப்புகள் வெகு அரிதாகும். நன்றாக முற்றின கதிரையே அறுவடை செய்வர். அறுவடைக்கு அது சரியான பக்குவமடைந்திருக்க வேண்டுமல்லவா? அதைப்போன்றே இளைஞரான ஆண்கள் பெண்களையே ஆண்டவருடைய ஆவியானவர் அதிகமாக உணர்த்தித் தம்மண்டை இழுத்துக்கொள்வார். ஆனால் அவருக்கு எதிர்த்து நிற்பதினால் படிப்படியாக அவர்கள் உள்ளம் கடினப்படும். அதனாலேயே நடுவயதும், முதிர்வயதுமானவர் மனந்திரும்பவது வெகு அபூர்வமாகுகிறது. அவர்களால் பாவ பழக்க வழக்கங்களை விட்டு விலக முடிவதில்லை. ஒருவன் வாழ்க்கையின் ஆரம்பத்தில் வெற்றி பெறுவது வெகு எளிது. ஒரு நூலை பல தடவை

ஒருவன் கையில் சுற்றின பின்பு அதை அவனால் அறுக்கமுடியுமா? அவ்வாறே முதல்தடவை நீ தவறினபோது அதற்காக மிகவும் வேதனையுற்றாய். ஆனால் மீண்டும் மீண்டும் தீமைக்கு இடங்கொடுத்ததினால் இப்பொழுது அதற்கு அடிமையாகி விட்டாய். தொடக்கத்தில் உணர்த்தும் மனச்சாட்சியை அசட்டை செய்வதால், இறுதியாக அதன் குரலை ஒருவன் கேட்கக்கூடாமற்போகும். பாவம் உன்னில் ஆளுகைசெய்யும். இப்படியாகத்தொடர்ந்து தீவினைகளில் ஈடுபடுவதினால், நீ ஆவியானவரைப் புறக்கணித்து, இறைவனுக்கு எதிராகக் கலகஞ்செய்கின்றாய். எனவே முதிர்வயதாகையில் மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக்கொள்வது உனக்குக் கடினமாயிருக்கும். சிம்பில் வளையாதது கொம்பில் வளையுமா ?

நண்பனே, இப்பொழுது நீ இளைஞனா? அப்படியானால் காலம் கடந்து போகும் முன்பே ஆண்டவராகிய இயேசுவை அண்டிக்கொள். ஒரு வேளை நீ முப்பது வயதுள்ளவனா? அப்படியானால் நாற்பது வயதில் நீ குணப்படுவது மேலும் கடினமாயிருக்கும் முன்பே, நீ இரட்சகரண்டைக்கு வா. ஒவ்வொரு ஆண்டும் கடந்துபோகையில், உன் மனம் அதிகமதிகமாக இரட்சிப்புக்குத் தூரமாக விலகிவிடுகின்றது. ஆகையால், “இதோ, இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்” என்று இறைவன் எச்சரிக்கின்றார்.

4. அறுப்புக்கு முடிவுண்டு

இறுதியாக, “அறுப்புக்காலம் முடிந்தது, கோடைக்காலமும் சென்றது” என்று சொல்ல வேண்டியதாகும். “ நாங்களோ இரட்சிக்கப்படவில்லை” என்று அப்பொழுது புலம்பும் மக்களில் நீயும் ஒருவனாயிருந்தால் அது வேதனைக்குரியதன்றோ ? சேமித்து வைக்கப்படாத தானியம் வயல் வெளியில் மிதியுண்டு அழிந்து போகுமல்லவா ? உன் முடிவும் அப்படியாக வேண்டுமா ? ஆவியானவர் உன்னுடன் போராடவில்லையென்றால், உன்னையடுத்தும் அறுவடை சென்றுவிட்டதென்று முடிவு செய்ய வேண்டியதாயிருக்குமே?

அந்தோ, பாவத்தைக்குறித்து உன் மனம் வேதனையடையா திருந்தால், அது கடினமாகிவிட்டது. உன்னையடுத்தும் அறுப்புக்காலம் கடந்துபோனது என்று நான் சொல்லத் துணிவேன்.

''என் ஆவி என்றென்றைக்கும் மனுஷரோடே போராடு வதில்லை'' என்று கர்த்தர் உரைத்திருக்கிறார். தொடர்ந்து அவருக்கு எதிர்த்து நிற்பதினால், அவர் உன்னைக் கைவிடும்படி யான வேளை வரும். ஏனெனில் தம்மண்டை வரும்படி அவர் விடுத்த அழைப்புகளனைத்தையும் நீ மறுத்து அவரை வேதனை படுத்திவிட்டாய். அதனால் உன்னையடுத்தும் அறுப்புக் காலம் சென்றது, கோடைக்காலமும் முடிந்தது என்று நான் தீர்ப்புக்கூற வேண்டியதாயிற்று. ஆயினும் ஒருக்கால் இன் னும் உனக்குத் தவணை கொடுக்கப்படலாம். இப்பொழுதே கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள முன்வருவாயானால், ஒரு வேளை அறுப்புக்காலஞ் சென்றது என்று புலம்பி அழத் தேவை யிராது. ஏனென்றால், ''பலமுறை கடிந்துக் கொள்ளப்பட்டும் வணங்காக் கழுத்துடையவன் திடீரென நாசமடைவான், குணமாகான்'' என்று எச்சரிக்கப்படுகின்றோம். ஆகையால் அன்பனே, அவர் சத்தத்தைக்கேட்டு, ''ஆண்டவராகிய இயேசுவில் நன்னம்பிக்கை வை, அப்பொழுது நீ இரட்சிக்கப் படுவாய்'' (ஆங்கிலப் புதுத் திருப்புதல்) அப்படி மனமுவந்து உடனே செய்யமாட்டாயா ?

———

9

ஆழ்ந்த சிந்தனைக்குரிய ஐந்து உண்மைகள்

இந்தச் சிறந்த உண்மைகளைப் புறக்கணிப்பதால் திரு வசனத்தின் முக்கியமான எச்சரிப்புகளை ஒருவன் துணிகர மாக அவமதித்துத் தள்ளுகின்றான். ஆகையால் கவனமாயிரு. ஆகையால் நித்தியத்துக்கடுத்தவைகள் ஸ்தம்பித்து கிடக் கின்றது.

1. எல்லாரும் இரட்சிக்கப்படுவதில்லை

சிலர் இரட்சிக்கப்படுகையில் மற்றவர் அழிவுக்குள்ளாவர். வஞ்சிக்கப்படாமல் எச்சரிக்கையாயிரு! களையினின்று கோது மையும், தீயோரினின்று நல்லோரும், வெள்ளாடுகளின்று செம்மறியாடும் பிரிக்கப்படும் நாள் வருகிறது. அப்பொழுது ஒவ்வொரு ஆணும், பெண்ணும், ஏதாவதொரு பக்கத்தில் நிற்கவேண்டியதாகும். அன்பனே, நீ எங்கே இருப்பாய்?

களையையும், மீன் வலையையும் குறித்த உவமைகளின் வாயிலாக இந்த உண்மை நன்கு புலப்படும். ஆம், நமது ஆண்டவரே அவற்றின் கருத்தைத் தெரிவித்துள்ளார். கோதுமை தேவனுடைய மக்களையும், களைகள் தீயோனின் புத் திரரையும் குறிக்கின்றன. களைகளைப் பிடுங்கிவிட வேண்டா மென்று வேலைக்காரரிடம் எஜமான் சொன்னான். "இரண்டை யும் அறுப்புமட்டும் வளரவிடுங்கள். அறுப்புக்காலத்தில் நான் அறுக்கின்றவர்களிடம் முதலாவது, களைகளைப் பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்துவையுங்கள் என்பேன்" என்றார் (மத்தேயு 13 : 30). அறுப்புக்காலம் வரையில் அவை இரண்டும் ஒன்றாக வளரவேண்டும். அதாவது உலக முடிவு வரையில் தேவனுடைய பிள்ளைகளும், பிசாசின் பிள்ளைகளும் ஒன்றாக இருப்பர். எல்லாரும் இரட்சிக்கப்படு வதற்குக் களைகள் யாவும் கோதுமை மணிகளாக மாற

வேண்டுமல்லவா? அப்படி நிகழாமல் களைகளாகவே முடிவு மட்டும் இருக்கின்றன. அதனால் அவை நெருப்பில் சுட்டெரிக்கப்படுகின்றன. மீன் வலையிலும் சகலவிதமான மீன்களும் ஒன்றாக இருக்கின்றன. அப்படியே பரலோக ராஜ்யமென்று அழைக்கப்படும், இன்றைய புறம்பான சபைகளில் கெட்ட மீன்கள் போன்றவரும், நல்ல மக்களுடன் இடம் பெற்றிருக்கின்றனர். ஆனால் இந்த யுகத்தின் இறுதியில் நல்லவர் அவற்றிலின்று பிரிக்கப்படுவர். எனவே உலகத்தார் யாவரும் இரட்சணியத்தை ஏற்றுக்கொள்ளார். "மனுஷகுமாரன் தம் தூதரை அனுப்புவார்; இடறலுக்குக் காரணமாயிருக்கிற யாவற்றையும், அக்கிரமம் செய்கிறவர்களையும் அவருடைய ராஜ்யத்திலின்று அவர்கள் சேர்த்தெடுத்து, அக்கினிச் சூளையிலே போடுவார்கள்.........அப்போது. நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள்" (மத்தேயு. 13 : 41 - 43).

"தேவதூதர் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்தெடுப்பர்" (மத்தேயு. 13 : 49). "மேய்ப்பன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்து, செம்மறியாடுகளைத் தமது வலதுபக்கத்திலும் வெள்ளாடுகளைத் தமது இடதுபக்கத்திலும் நிறுத்துவார். அப்பொழுது ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து : வாருங்கள் என் பிதாவினுடையவர்களாய் ஆசிர்வதிக்கப்பட்டவர்களே, உலகத்தோற்ற முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சாபத்துக்குட்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்கும் அவன் தூதருக்கும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினிக்குள் போங்கள். அப்படியே, இவர்கள் நித்திய ஆக்கினைக்குப் போவார்கள், நீதிமான்களோ நித்திய ஜீவனுக்குள் போவார்கள் என்றார்" (மத்தேயு. 25 : 32 - 34, 41, 46).

நீதிமான்களிலின்று பொல்லாதவரைத் தேவதூதர் பிரிப்பர். செம்மறியாடுகளைத் தமது வலதுபக்கத்தில்

நிறுத்தி, "ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, வாருங்கள்" என்பார். இடது புறத்திலிருக்கும் வெள்ளாடுகளை நோக்கி, "சாபத்துக்குட்பட்டவர்களே என்னை விட்டுப்போங்கள்" என்பார். எனவே அன்பனே, நீ எந்தப் பக்கத்தில் நிற்பாய் ?

2. பெரும்பான்மையோர் அழிவுக்குள்ளாவர்

"அழிவுக்குப்போகும் வழி அகலம், வாசல் விரிவு; அதன் வழியால் உட்செல்கிறவர்கள் பலர்." பலர் என்றால் அநேகரைக் குறிக்குமல்லவா ? "ஜீவனுக்குப்போகும் வாசலோ இடுக்கம், வழியும் நெருக்கம், அதைக் கண்டுகொள்ளுகிறவர்கள் சிலர்." எனவே அழிவுக்குச் செல்பவர் அநேகராயும், ஜீவனை அடைபவர் ஒரு சிலராயும் இருப்பது உண்மை. (மத்தேயு 7 : 13 - 14). அன்புள்ள இறைவன் எங்ஙனம் பெரும்பாலோரை அழித்து விடுவார் என்று ஒருவேளை கேட்பாய். அப்படியானால் ஏற்கனவே அன்புள்ள தேவனுனவர் பெரும்பான்மையோரை அழித்தாரா ? ஆம், ஜலப்பிரளயத்தின் போது எட்டுப்பேரைக் காப்பாற்றினார். நல்லவர், தீயவர், முதியோர், இளைஞர், பிள்ளைகள் அனைவரும் அப்போது மடிந்தனர். அவ்வாறே சோதோம் கொமோரா அழிவுற்ற காலையில் மூவர் மாத்திரம் தப்பிப்பிழைத்தனர். இப்படியாக இருமுறை நிகழ்ந்ததினால், இறுதி நாட்களிலும் பெரும்பான்மையோர் இயேசுவைப் புறக்கணித்துவிடுவதினால், ஆக்கினைக்கு ஆளாவது நிச்சயம். அந்தோ, இன்றைக்கும் அகன்ற பெரும் வழியில் திரளான மக்கள் சென்றுக்கொண்டிருக்கையில், நெருக்கமான வழியில் ஒரு சிலரை மாத்திரம் காண்கின்றோம். ஏழுகோடி சீனருக்கும், ஐம்பதுகோடி இந்தியருக்கும், ஆம், பிரான்சு, தென் ஐரோப்பா முதலிய நாடுகளில் இருக்கும் மெய்த்தேவனை அறியாத எண்ணிறந்த மக்களுக்கும் நேரும் கதி என்ன? கிறிஸ்தவ நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகள் அழிவுக்குத் தப்புமா ? அந்தோ, அவர்களில் பாதிக்கு மேலானவர் ஆண்டவரைத் தொழுதுகொள்வதே இல்லை. ஞாயிறு மாலை ஆராதனையில் வெகு சொற்ப

மானவரையே காண்போம். நீர் எந்தக்கூட்டத்திலிருக்கிறீர்? நானே சிறுபான்மையோரில் ஒருவனுயிருக்க முற்றும் ஆயத்தமா யிருக்கிறேன்.

3. இரட்சிக்கப்படுவோம் என்று நினைப்பவர் அநேகர் கைவிடப்படுவர்

ஆம், அநேகருக்கு இது ஒரு திடுக்கிடத்தக்க உண்மையாயிருக்கும். பரலோக வீட்டிலிருப்போம் என்று நினைத்துக் கொண்டிருக்கும் அநேகர், மரித்த பின்பு தாங்கள் மறுபடியும் பிறக்கவில்லை என்றறிவர். இப்படி தங்களை வஞ்சித்துக் கொண்டவராக வாழ்நாளைக் கடத்திவிட்டனரே! சாத்தான் அவர்கள் கண்களைக் குருடாக்கிவிட்டதினுல், மோட்சம் செல்வதாக நினைத்துக்கொண்டு, நித்திய அழிவுக்குள்ளாவது பயங்கரமானதன்றோ? இரக்கத்தின் வாசல் சாத்தப்பட்ட பின்பு ஐயோ, காலம் தவறிவிட்டதே, என்று புலம்பும் நாள் வரும். ஆண்டவர் தெரிவித்தபடியே வாழ்க்கையாகிய இல்லத்தைச் சிலர் பாறையில் கட்டுகின்றனர். மற்றும் அநேகர் அதை மணலின் பேரில் கட்டுகின்றனர். கதிரவனின் ஒளியில் இரண்டும் அழகாயும், உறுதியாயும் தோற்றமளிக்கின்றன. ஆனுல் புயல் அடித்தபோதோ ஒன்று நிலைத்திருந்தது, மற்றதோ விழுந்து அழிந்தது. உலக முடிவின் நாளில் இப்படியே திகழும். அன்பனே! கற்பாறையாகிய கிறிஸ்துவைச் சார்ந்துகொண்டிருக்கிருயா, அல்லது உன் சொந்த கிரியைகளாகிய மணலை நம்பிக்கொண்டிருக்கிருயா?

''நான் நிற்கும் பாறை கிறிஸ்துதான்
வேறஸ்திபாரம் மணல்தான்'' என்று நான் அவரில் களி கூறுவேன்.

கர்த்தாவே, கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி ஆண்டவரே, ஆண்டவரே உமது நாமத்தினுலே தீர்க்கதரிசனம் உரைத்தோமல்லவா? உமது நாமத்தினுலே பேய்களைத் துரத்தினேமல்லவா? உமது நாமத்தினுலே அநேக வல்ல செயல்களைச் செய்தோம் அல்லவா என்பார்கள். அப்

பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று வெளிப்படையாய்க் கூறுவேன் என்றார். (மத்தேயு. 7:21-22).

அன்பார்ந்தவனே, உனக்கும் இந்த முடிவு நேரிடுமா? சாத்தான் உன்னைக் குருடாக்கி வஞ்சித்து விட்டானா? வாழ்நாளெல்லாம் நற்செய்தியைக் கேட்டுக்கொண்டிருக்கின்றாய். ஞாயிறு பள்ளியில் படித்து, சபைக்கடுத்த பல சேவைகளைச் செய்திருப்பாய். ஆனால் இப்போது எதைச் சார்ந்து கொண்டிருக்கின்றாய்? இறுதியில் ஐயோ, நான் இரட்சிக்கப்படாதிருக்கிறேனே என்று புலம்புவாயா? ஆம், மீட்கப்பட்டவரென்று தங்களையே வஞ்சித்துக்கொண்டு, நித்திய அழிவுக்குள்ளாகப் போகிறவர் எண்ணிறந்தவராவார். அந்தக் கும்பலில் நீயும் ஒருவனாயிருப்பாயா?

4. சாவுக்குப் பின் இரட்சிப்பில்லை

நித்தியத்தில் ஒரு பெரும் பிளப்பு இருப்பதாக வேதம் விளம்புகின்றது. அது நிரந்தரமாயிருப்பதினால் அதை ஒருக்காலும் அகற்றமுடியாது. எவரும் அதைக் கடந்துச் செல்லவும்முடியாது. அப்படியானால் "யகோவாவின் சாட்சியினர்" பிதற்றுவது போன்று எவருக்கும் மற்றொரு வாய்ப்புக் கிட்டாது. மனந் திரும்பாமல் மரிப்பவர் மீண்டும் இரட்சிக்கப்பட வழியில்லை. இம்மையில் கிறிஸ்துவைப் புறக்கணிப்பவர் தப்பவேறே ஏதுவிராது என்றே திருவேதம் வலியுறுத்துகிறது. கல்லறைக்குச் சென்ற பின்பு மீட்பு கிடையாது. இப்பொழுது துணிகரமாக இயேசு கிறிஸ்துவை வெறுத்துத் தள்ளுபவருக்கு மற்றொரு வாய்ப்பு அளிக்கப்படுவது நியாயமா? சாவுக்குள்ளாகும் நிலைமையானது உன் மனத்தை மாற்ற முடியுமா? எப்போதும் போல அப்போதும் ஆண்டவரை நீ வெறுத்துக்கொண்டிருப்பாய். உன் வேதனைகளை முன்னிட்டு வருந்தினாலும், உன் உள்ளம் ஒருபோதும் மாறாது. ஒரு கிறிஸ்மஸ் பண்டிகையின் போது எனக்களித்த உன் அன்பளிப்பை நான் ஏற்க மறுத்தால், அடுத்த பண்டி

கையின் போது மறுபடியும் எனக்கு ஒரு ஈவைத்தர ஒருவேளை முன் வருவாய். ஆனால் கனிவுடன் நீ அளிப்பதை மீண்டும் ஏற்க நான் மறுத்துவிட்டால், பின்பு அப்படிச் செய்ய விரும்புவாயா? அது போன்று ஆண்டவர் ஒருபோதும் உன்னைச் சந்திக்க முடியாத ஒரு காலம் வரும்: எனவே கிறிஸ்துவின்றி இவ்வுலகத்தைக் கடந்து சென்றால், பின்பு நித்தியத்தில் இரட்சிக்கப்படவே முடியாதென்று உன்னை இப்போது எச்சரிக்கிறேன்.

5. உனக்கு இறுதியான தவணை இப்போதே கிடைக்கிறது.

"உத்தம கிறிஸ்தவனாயிருக்க எனக்கு ஆசைதான், ஆயினும் உலக இன்பங்களை முதலில் அனுபவிக்க ஆசிக்கிறேன்," என்று ஒருவன் தன் கிறிஸ்தவ நண்பனிடம் சொன்னான். "உன் மனம்போல செய்" என்று அவன் பதிலுரைத்த போது, "அப்படியானால் நான் எப்போது இரட்சிக்கப்பட வேண்டுமென்று" மீண்டும் வினவினான். அதற்கு நண்பன் "நீ சாவதற்கு ஐந்து நிமிடங்களுக்கு முன் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டால் போதும்" என்றான். "ஐயோ, நான் சாகும் வேளையை அறியேனே" என்று அவன் அங்கலாய்த்த போது, "அப்படியானால் இப்பொழுதே நீ கிறிஸ்தவனாக வேண்டும்" என்று நண்பன் வற்புறுத்தலானான்.

"நாளையத் தினத்தைக்குறித்துப் பெருமை பாராட்டாதே; ஒருநாள் பிறப்பிப்பதை அறியாயே" (நீதி. 27:1). இறுதியாகக் கிடைக்கும் வாய்ப்பை ஒருக்கால் நீ இழந்துவிடுவாய். அப்படி நேரிடுமானால் உன் நிலைமை என்ன? இரட்சிக்கப்படாத நண்பனே, இதுவே உனக்குக் கிடைக்கும் கடைசி தருணமாயிருக்கக்கூடும்! நாளை பார்த்துக்கொள்ளலாம் என்று ஒருவன் அலட்சியமாயிராதபடிக்கு, ஆண்டவர் "இதோ, இப்பொழுதே அனுக்கிரகக்காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்" என்று எச்சரிக்கின்றார் (2 கொரிந்தியர் 6:2). உடனடியாக அதைச் செய்வதே அவர் உனக்குக் குறித்திருக்கும் ஏற்ற நேரமாகும்.

''இறுதி வாய்ப்பென்று ஏன சொல்லுகிறீர்களென்று'' கேட்டால், அதற்கான நியாயங்களைக் கூறுவேன்.

1. உயிர் நிலையற்றது

ஓரிரவு நான் நற்செய்தியைப் பிரசங்கித்து முடித்து, ஆசீர்வாதத்தைக் கூறினேன். எனக்கு எதிரில் விற்றிருந்த ஒரு மங்கை, இயேசுவை ஏற்றுக்கொள்ளும்படி நான் விடுத்த அழைப்புக்குச் செவிசாய்க்காமல் வீட்டுக்குத் திரும்பிச்சென்றாள். நானும் என் மோட்டாரில் ஏறி சற்றுதூரம் போகையில், ஒரு கும்பலையும், காவல் துறையினர் சிலர் சூழ்ந்திருப்பதையும் பார்த்து, அருகில் சென்றேன். ஆலயத்திலிருந்த அப்பெண்ணின் உடல், வழியில் சென்ற மோட்டார் சக்கரத்தினடியில் நொறுங்கிக் கிடந்தது. அந்தோ, அவள் என் செய்தியைக்கேட்டு இன்னும் பத்து நிமிடங்கள் ஆகவில்லையே! மற்றோர் செய்தியைக் கேட்க தனக்கு வாய்ப்பு இல்லாமற் போகும் என்று அவள் நினைத்திருப்பாளா? அடுத்த ஞாயிறு மீண்டும் ஆலயத்திற்கு வரும்படி நினைத்திருப்பாள். ஆனால் மற்றோர் சமயம் அவளுக்குக் கிடைக்கவில்லை.

தனக்கென்றே செல்வத்தைக் குவித்துவைத்திருந்த ஒருவன், வருங்காலத்தையடுத்துப் பற்பல சிறந்த திட்டங்களை, மனத்தில் உருவாக்கிக் கொண்டு இரவில் படுத்திருந்தான். நடுராத்திரி வேளையில் ஆண்டவர் அவனிடம், ''மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார்'' அவனை மதிகேடனென்றழைத்தார் இறைவன். இம்மைக்காக மாத்திரம் பொருளைச் சேர்த்துவைத்து மறு உலகையடுத்து சிந்தனையற்றிருப்பவர் மூடரே ஆவர். ஆம், ஒருக்கால் நீ பயணஞ்செய்யும் வண்டி கவிழ்ந்துவிடலாம். அல்லது பாதையின் குறுக்கே நீ கடந்துபோகையில், அடிபட்டுச் சாகலாம். எனவே, ''இந்த இராத்திரியிலே,'' அல்லது ''இந்த வருஷத்திலே நீ சாவாய்'' என்று ஆண்டவர் சொல்லுகிறார் (எரேமியா 28 : 16).

2. இயேசு நாதர் வரப்போகிறார்

அவர் திரும்ப வரும் வேளையை எவரும் அறியார். ஆனால் அவர் வருகையில் மனந்திரும்பாதவர் நியாயந்தீர்க்கப் படுவர். "நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்" என்றார் (மத்தேயு 24 : 44). இன்றிரவு அவர் வந்தால் மிகுந்த மகிழ்ச்சியுடன் நீ அவரை வரவேற்பாயா? அல்லது மலைகளையும் பாறைகளையும் பார்த்து: என்மேல் விழுந்து அவர் முகத்திற்கு மறைத்து விடுங்கள் என்று கூப்பிடுவாயா? "உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள் மேல் ஆகாயத்திலே எடுத்துக்கொள்ளப்படுவோம்." அப்பொழுது எடுத்துக்கொள்ளப்படுவாயா அல்லது நீ கைவிடப்படுவாயா? சடுதியாக திருடனைப்போல் அவர் வரப்போவதால் இதுவே உன் கடைசி தருணமாயிருக்கலாம்.

3. ஆவியானவர் எப்பொழுதும் போராடமாட்டார்

"கர்த்தர் என்னை விட்டு அகன்றார்," என்று சவுல் சொன்ன வார்த்தைகள் எத்தனை திடுக்கிடத்தக்கவை. மனைவியோ, பிள்ளையோ ஒருவனை விட்டுப் பிரிந்துப்போய் விடுவது வெகு துக்ககரமானது. அதைப்பார்க்கிலும் அவனைவிட்டு இறைவன் விலகுவது எத்தனை பயங்கரம்! அவரைவிட்டு நீ விலகுவதினாலேயே அவரும் உன்னைக் கைவிடுகிறார். "தேவன் அவர்களை ஒப்புக்கொடுத்து விட்டார்," என்று பவுல் சொல்லுகிறான். அவ்விதமாக நம்மை இறைவன் ஒப்புக்கொடுத்து விட்டால் நமக்கு நம்பிக்கையுண்டா? அவரை முற்றிலுமாக வெறுத்து விடுகையிலேயே இந்த ஆபத்தான நிலைமைக்கு நீ ஆளாகின்றாய். ஆண்டவர் மன்னிக்க முடியாத ஒரு பாவம் உண்டு. கிறிஸ்து இயேசுவை ஒருவன் முடிவாக புறக்கணித்து விடுதலே அதுவாகும். கடந்த வாரத்தில் அவர் உன்னை தம்மிடம் அழைக்கையில் செவிகொடுக்க மாட்டேன் என்றாயே. இப்படித் தொடர்ந்து செய்வாயானால் ஏதோ ஒரு நாள் உனக்கு இறுதியான தருணமாயிருக்கும். அதையும் நெகிழவிடுவதினால் மன்னிக்கப்படாத பாவத்தைச் செய்கின்றாய்

அதன் பிறகு திருவசனத்தைக் கேட்கையில் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள உனக்கு விருப்பமே இராது. ஏனெனில், "என் ஆவி என்றென்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை" என்றார் என்றெழுதியிருக்கிறது (ஆதியாகமம். 6:3).

அந்தோ பிந்திவிட்டது

வாலிபரான சிலருக்கு மூடி பிரசங்கியார் வேதபாட வகுப்பு நடத்தினார். அவர்களில் ஒருவனைத்தவிர மற்றவர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டனர். அவரிடம் அதைக்குறித்து ஒரு நாள் அதிக உருக்கத்துடன் பேசினார். அவனோ, "நான் வெளியூருக்குச் சென்று கொஞ்சம் பணம் சம்பாதித்துத் திரும்பி வந்தபின் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுவேன்" என்றான். மூடி துக்கப்பட்டார். சில வாரங்கள் சென்று அவன் நோய்வாய் பட்டவனாக மருத்தவமனையிலிருந்தான். மூடி அவனைச் சந்தித்து, "இனி தாமதியாதே, உன் இரட்சிப்பைக் குறித்து முடிவுசெய்" என்று வேண்டினார். அவன் மறுத்து "நான் சாகமாட்டேன். முன்பு சொன்னபடியே பணஞ் சேர்த்த பின்பு அப்படிச்செய்வேன்" என்றான். திருத் தொண்டர் உள்ளம் உடைந்தவராக வீடு திரும்பினார். பின்பு ஒருநாள் குதுகலத்துடன் அவர் வீட்டிற்கு அவன் வந்து," நான் பயணமாகச் செல்லும் முன்பு உங்களிடம் விடைபெற்றுக் கொள்ள விரும்புகிறேன்" என்றான். மீண்டும் மூடி அவன் தோளின்மேல் தமது கரங்களைவைத்து பரிவுடன் அவன் ஆன்ம இரட்சிப்பையடுத்துப் பேசினார். அவனோ கோபத்துடன், "நான் திரும்பி வந்ததும் நிச்சயமாக இந்தக் காரியத்தைச் செய்வேன், இப்போது அதைக்குறித்து ஒன்றும் பேசாதேயும்" என்று சொல்லி விரைவாகப் போய்விட்டான். நடு ராத்திரி அவர் வீட்டுக்கதவை ஒரு பெண்மணி பலமாகத் தட்டினாள். அவர் விசாரித்தபோது அவள், "என் கணவன் சாகுந்தறுவாயிலிருக்கிறார், உடனே வாருங்கள்" என்று அவசரமாக அழைத்தாள். அந்த வாலிபனுடைய மனைவி என்று அறிந்து அவர், "இனி நான் அவனுடன் பேசுவதால் பயனில்லை; அவன் தனக்கருளப்பட்ட இறுதியான அழைப்பைத்

தள்ளிவிட்டானே " என்ருர். எனினும் அவனுடைய கெஞ்சுதலுக்கு இரங்கி அவனைப் பார்க்கச்சென்ருர். அவனோ மதியிழந்தவனாக மேலே பார்த்துக்கொண்டு, "பிந்தி விட்டதே, பிந்திவிட்டதே," என்று புலம்பிக்கொண்டிருந்தான். அவனுடன் அவர் ஒன்றும் பேச முடியவில்லை. "பிந்திவிட்டதே" என்று அவன் கதறிக்கொண்டே உயிரை விட்டான். நண்பனே, ஒருக்கால் இதுவரை இந்த மன்னிக்கப்படாத பாவத்திற்கு நீ ஆளாகாமலிருப்பாய். ஆனால் தொடர்ந்து அவருடைய இரக்கத்தை அல்லத் தட்டாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. ஏனென்ருல் ஆவியானவர் மேலும் உன்னுடன் போராடாவிடில், உனக்கு மற்ருேர் வாய்ப்புக் கிட்டாது. எனவே அன்பனே காலதாமதஞ் செய்யாமல் இப்பொழுதே இயேசு கிறிஸ்துவை உன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்.

———

10

சிறப்பான செய்தி

சில ஆண்டுகளுக்கு முன் விக்டோரியா மகாராணியை ஓர் ஆப்பிரிக்க தலைவன் சந்தித்தான். "இங்கிலாந்தின் சிறப்புக்குக் காரணமென்ன?" என்று அவன் அந்தப் பெருமாட்டியிடம் விசாரித்தபோது, "சத்திய வேதமே" என்று அந்த அம்மையார் பதிலுரைத்தார். உலகில் மகா சிறந்த இடத்தை அந்த விவிலிய நூல் வகிக்கிறது. கடந்த ஐம்பது ஆண்டுகளாக தினந்தோறும் அதை வாசித்து வருகின்றேன். கருத்துடன் அதை வாசிக்கும்படி உன்னையும் வேண்டுகிறேன். உயிரளிக்கும் உணவு, தண்ணீர் போன்று இன்றியமையாத தொன்றாக எனக்கு இருக்கிறது. அதை வாசிக்க, வாசிக்க மென்மேலும் அதை நேசிக்கிறேன். அது இறைவன் அருளின நூலாகையால், அதற்கு நிகரானது வேறொன்றுமில்லை. அதில் தேவனின் சத்தத்தைக் கேட்கிறேன். அதன் வாயிலாக மக்கள் இரட்சிப்பின் வழியை அறிந்து, ஆன்ம ஈடேற்றத்தை அடைகின்றனர். இறுதியில் ஒருவனை அது நியாயந்தீர்க்கும். அதுவே எங்கள் அதிகாரப் பத்திரமாக விளங்குகின்றது. பாவஞ்செய்யாதபடிக்கு இது உன்னைப் பாதுகாக்கும், அல்லது பாவம் அதினின்று உன்னை விலக்கிவிடும். அதில் மிகவும் சிறப்பான பகுதியாக விளங்கும் யோவான் சுவிசேஷம் மூன்றாம் அதிகாரம், பதினாறும் வசனமாவது: "தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனில் விசுவாசமாயிருக்கிறவன் எவனும் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனைப் பெறும்படி, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என்பதே. இதுவே நற்செய்தியின் சுருக்கமாக இருக்கிறது. உலகிலுள்ள ஏறக்குறைய சகல மொழிகளிலும் இத்திருவசனம் திருப்பப்பட்டிருக்கிறது. இறைவனின் அன்பை இதை விடத் திட்டமும் தெளிவுமாக எவரும் தெரிவிக்க முடியாது. இவ்வசனத்தில் தெய்வீக அன்பையடுத்து நான்கு பெரிய உண்மைகளை அறிகின்றோம்.

இறைவன் இவ்வளவாக உலகில் அன்புகூர்ந்தார்

"தேவன்" இரட்சணியத்தை இறைவனே தோற்றுவிக்கின்றார். அதையடுத்து நீ செய்யக்கூடியது ஒன்றுமில்லை. நீ பிறக்கும் முன்னமே அதை ஆயத்தம் பண்ணிவிட்டார். ஆண்டவனை நாம் கண்டுபிடிக்க முடியாது. அவரே தம்மை வெளிப்படுத்துகின்றார். "இவ்வளவாய்" கிறிஸ்து உனக்காக அனுபவித்த பாடுகளையும், அவரை ஒப்புக்கொடுத்தினால் இறைவனுக்குண்டான சொல்லொண்ணு வேதனையையும் இச்சொல் விவரிக்கிறது. இவ்வளவாக உன்னை நேசித்தபடியினால் தீமையினின்று உன்னை விடுவித்து முற்றிலுமாகப் பாதுகாக்க முன் வந்தார். அன்பு கூர்ந்தார். புறஜாதியாரின் தேவர்கள் எத்துணை கொடூரமானவர்! அவர்கள் அவைகளுக்குப் பயந்து நடுங்குகின்றனர். ஒன்றான மெய்தேவனே அன்பு மயமானவர். அதனால் அவரை நேசிக்கிறோம். மகா வல்லமையுள்ள அவர் மக்களை நியாயந்தீர்க்கிறவராயினும், முதலில் நேசித்து நமக்கு நன்மைச்செய்ய வருகின்றார். பாவங்களை அவர் நேசியாமல் பாவிகள்பேரில் அன்புள்ளவராயிருக்கின்றார். பிள்ளையைத் துன்புறுத்தும் பிணியை நேசியாமல், பெற்றோர் குழந்தையை நேசிக்கின்றனர். ஆண்டவரின் பேரன்பை நாம் புரிந்து கொள்ள முடியாது. எனினும் அது முற்றிலும் உண்மையுள்ளதென்று கண்டறிகின்றோம். பெரிய துரோகியாகிய உன்னையும் அவர் தொடர்ந்து நேசிக்கின்றார்.

"உலகத்தில்" இத்தனை பயங்கர சத்துருக்கள் நிறைந்த உலகை அவர் நேசிப்பது நமக்குப் புலப்படாத ஒரு புதிராக இருக்கும். "நாம் பாவிகளாயிருந்தபோதே கிறிஸ்து நமக்காக மரித்ததினால் தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்க பண்ணுகிறார்" (ரோமர். 5:8). "கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்" (ரோமர் 5 : 6). நல்லோரை மட்டுமின்றி தீயோரையும் நேசிக்கிறார். சிலுவையில் அறைந்த போது, "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று வேண்டினார் (லூக்கா. 23:34). எனவே இது மனிதத்தன்மைக்குரிய

அன்பன்று. அது தெய்வீகமான உன்னத அன்பு. அவரை நீ பகைத்தாலும் உன்னை அவர் நேசிக்கிறார். என்ன அதிசய மானதும், இணையற்றதுமான அன்பு இது !

உலகப் போருக்குக் காரணமாய் இருந்தவர் தூக்கிலிடப் பட்டனர். சீனாவிலும், கொரியாவிலும் பொது உடைமை கட்சியினர் தங்கள் கைதிகளைச் சித்திரவதைச் செய்கின்றனர். மன்னிப்பின் சிந்தை மனிதனுக்கு இல்லை. ஆனால் ஆண்ட வரோ மன்னிக்கின்றார். ஏனென்றால், இரக்கமுள்ளவரான அவர் பாவிகளையும், தம்மை வெறுப்பவர்களையும் நேசிக்கின் றார். இயற்கைக்கு அப்பாற்பட்ட உன்னத அன்புடையவர் அவர். நம் நண்பரை நேசித்து நமக்குப் பிடிக்காதவரை வெறுப்போம். இறைவனோ தம் எதிரிகளையும், தமக்குக் கீழ்ப் படியாத மக்களையும் நேசிக்கக் கூடியவராய் இருக்கின்றார். ஒழுக்கக் கேடாக நடந்துத் தனக்கு அபகீர்த்தியைக்கொண்டு வந்தக் கெட்டக்குமாரனைத் தகப்பன் நேசித்தானன்றோ ? வெகு நாட்களாக, அவன் வருகைக்கு ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தான். அவன் திரும்பி வந்தபோது, "என் மக னாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிரோடு வந்தான், காணாமற் போயிருந்தான், திரும்பவும் காணப்பட்டான்." என்று சொல்லி (லூக்கா 15 : 24) எத்தனை மகிழ்ச்சியுடன் அவனை வரவேற்றான் !

2. "தம்முடைய ஒரேபேறான குமாரனைத் தந்தருளினார்"

இத்தன்மையாக நம்மை நேசித்தபடியினால், இறைவன் தமது குமாரனை ஈவாகக் கொடுத்தார். அன்பு தியாகஞ் செய்யும். தங்கள் செய்கையினால் மனிதர் அன்பை வெளிப் படுத்துவர். அங்ஙனமே தமது ஒரேபேறான குமாரனைத் தந்ததினால், இறைவனும் தமது அன்பை வெளிப்படுத்தினார். ஒரு தேவ தூதனையல்ல, தமது செல்வ குமாரனையே அனுப் பினார். மகனைத் தருவதற்குப் பதிலாக ஒரு தகப்பன் தனக் குள்ளதெல்லாவற்றையும் இழக்க ஆயத்தமாய் இருப்பா னன்றோ ? இறைவன் விரும்பியிருந்தால் சிலுவையினின்றும்

தம் குமாரனைத் தப்புவித்திருக்கக்கூடும். தகப்பனுகிய நீ உன் மகனைப் பாதுகாக்கக் கூடிய நிலையில் இருந்தும், அவனை இத்தகைய கொடிய வேதனைக்கு ஆளாகும்படி இடங்கொடுத் திருப்பாயா? எந்த தகப்பனும் இக்கொடுமையைத் தாங்க மாட்டான். ஆனுல் இயேசுவைத் தப்புவித்திருக்கக்கூடிய பிதாவானவர் அவரை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார். இது நமக்கு விளங்காத அதிசய அன்பாகும். இப்படியாக உன்னை நேசித்து, மீட்கும்படியாகத் தமது குமாரனைச் சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார். ஈசாக்கை வெட் டும்படி ஆபிரகாம் கத்தியை ஓங்கினபோது, "ஆபிரகாமே, ஆபிரகாமே, பிள்ளையாண்டான்மேல் உன் கையைப் போடாதே" என்று ஆண்டவர் தடுத்தார். (ஆதியாகமம் 22 : 12). ஆனுல் "என் தேவனே, என் தேவனே ஏன் என்னை கைவிட்டீர்?" என்று இயேசு கதறினபோது, மாறுத்திரமாக அவர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அன்பனே, உன்னை மீட்கும்படியாகவே தம் குமாரனைப் பலியாக்கினுர்.

3. "அவரை விசுவாசிக்கிறவன் எவனே"

மூன்று பெரிய உண்மைகளை இவ்வார்த்தைகள் தெரிவிக் கின்றன. "எவனே" இந்த இரட்சணியம் சகலருக்கும் உரியது. எனக்கும், உனக்கும், மற்றவருக்கும் இது சொந்த மாகும். நிறபேதம், மொழிபேதம் முதலியவற்றிற்கு இட மில்லை. சீர்கெட்ட பாவிகளும், சிறந்த வாழ்க்கையாற்றின வரும் ஒருங்கே இதைப் பெறுகின்றனர். யூதருக்கே உரியது என்று பேதுரு நினைத்தான். ஆனுல் ஆண்டவர் அவனுக்கு அளித்த காட்சியின் மூலமாகப் புறஜாதியாருக்கும் நற்செய் தியை அறிவித்தான். உலகத்தார் அனைவரையும் இறைவன் நேசிக்கின்றுர். எனவே யூதருக்கும், புறஜாதியாருக்கும் இரட்சணியத்தில் இடமுண்டு. நீ யாராயிருந்தாலும், எவ்வளவு தீமைகளைச் செய்திருந்தாலும் இயேசுவிடம் வரும் படி உன்னை அழைக்கிறேன். குடிகாரர், விபசாரக்காரர், கொலைபாதகர், வேசிகள், பொய்யர், திருடர் முதலான யாவ ரும் "எவனே" என்ற சொல்லில் இடம் பெறுகின்றனர்.

" விசுவாசிக்கிறவன் " விசுவாசம் ஒருவனை இறைவனுடன் இணைக்கிறது. ஆகவே இயேசுகிறிஸ்துவை நம்பும்படி அழைக்கிறது. அவர்மேல் முற்றிலுமாகச் சார்ந்துக் கொள்வதே விசுவாசம். அது ஒருவனின் அறிவையல்ல அவன் செயலைக் காட்டுகிறது. இயேசுவைப் பற்றின சித்தாந்தங்களை நம்பவேண்டும் என்றல்ல, அவரையே ஏற்றுக்கொள்ளும்படி அழைக்கிறது. "ஆண்டவராகிய இயேசுவில் உன் நம்பிக்கையை வைத்துவிடு; அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய்." ஒரு புகைவண்டியை அல்லது பேருந்துவை நம்பி ஒரு பிரயாணி அதில் ஏறி உட்காருகின்றான். அதுபோன்றே இரட்சணியத்திற்காக ஆண்டவரின் கரத்தில் உன்னை ஒப்படைத்துவிடு. உன் மனத்தில் அவரைப்பற்றிக் கொண்டுள்ள கோட்பாடுகளைப் பற்றிக் கவலையில்லை.

இப்பொழுது ஒரு செயலில் ஈடுபடு. "இது கிரியைகளினால் உண்டானதல்ல" எபேசியர் 2:9. அதற்கு எவ்வித தகுதியும் தேவையில்லை. ஜெபதபங்கள், ஆலய ஆராதனைகள் முதலிய மார்க்க ஆசாரங்கள் எதுவும் உன்னை இரட்சிக்காது. கிரியைகளினாலல்ல, விசுவாசத்தினாலேயே இரட்சிக்கப் படுகிறாய். "அவரை" என்பது இயேசுகிறிஸ்துவைக் குறிக்கும். நீ அற்ப விசுவாசியென்று கவலைப்படாதே. உனக்குக் கடுகு அளவு விசுவாசம் இருந்தால் போதும். எனவே உன் விசுவாசத்தை மறந்து நீ விசுவாசிக்கிறவர் இன்னார் என்பதை மட்டும் கவனி. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பேரில் உன் நம்பிக்கையை வை. உன் விசுவாசமல்ல, கிறிஸ்துவே இரட்சிக்கிறார். தப்பிதமான ஆளில் நம்பிக்கை வைத்தால் தானே ஏமாறுவாய்! மார்க்கத்திலோ, வேறு எந்த சபையிலோ நம்பிக்கை வைப்பதினால் இரட்சிக்கப்படமாட்டாய் " ஆண்டவர் இயேசுவில் நம்பிக்கை வை " (அப்போஸ்தலர் 6 : 31) ஒரு (ஆங்கில புது திருப்புதல்).

4. " கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு "

இரு காரியங்களை இங்குக் கவனிக்கிறோம். "கெட்டுப்போகாமல்" அழிவினின்றுத் தப்புகிறோம். அதாவது நித்

திய மரணத்தினின்று இரட்சிக்கப்படுகிறோம். மேலும் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுகிறோம். "நித்தியஜீவனை அடையும்படி" என்று சொல்லி இருப்பதினால், பரலோகத்தின் ஜீவன் நமக்கு அருளப்படுகிறது. "கெட்டுப்போகாமல்" என்பது இறைவனை விட்டு என்றென்றுமாகப் பிரிந்துபோவதைக் குறிக்கும், அதுவே ஆவிக்குரிய மரணம். "அக்கிரமங்களிலும், பாவங்களிலும் மரித்தவர்" என்று எபேசியர் 2 : 1 இல் வாசிக்கிறோம். ஆகவே அவர்கள் உயிர்ப்பிக்கப்பட வேண்டும். "உங்கள் பாவங்களில் சாவீர்கள்" என்று இயேசு சொன்னார் (யோவான். 8 : 24). நித்தியஜீவனைப் பெறாவிட்டால் அக்கிரமங்களிலும், பாவங்களிலும் செத்திருக்கும் அந்நிலையிலேயே அடுத்த உலகம் செல்லுவாய். ஒரு மரத்திலிருந்து பிடுங்கப்பட்டிருக்கும் காய்கனிகளைப் பார்! 'அவை மரத்திலின்று பறிக்கப்பட்டதினால் ஜீவனை இழந்து, அழிவுக்கு ஏதுவாயிருக்கின்றன. அதுபோன்று புறம்பே அழகாகத் தோன்றினாலும், உள்ளத்தில் செத்தவனாயிருந்து, நித்திய அழிவுக்குச் செல்லுகின்றாய். ஆவியானவரால் உயிர்ப்பிக்கப்பட்டு, ஜீவனுள்ள இறைவனுடன் இணைக்கப்பட்டாலொழிய உனக்கு நம்பிக்கை வேறு இல்லை. ஆனால் நித்தியமான ஜீவனை உனக்குத் தருவதாக ஆண்டவர் வாக்கருளுகின்றார். அவர் ஊழியக்காரனாகிய'நான் அந்த அழியாத ஜீவனைப்பற்றி உனக்குத் தெரிவிக்கிறேன். அதை ஏற்றுக்கொள்வது உன் கடமையாகும். என்ன அதிசயமான அன்பு! கிருபையான ஈவைப் பற்றின என்ன மகிமையான வெளிப்படுத்தல்! அதை அசட்டைப்பண்ணினால் அவர் முன் நிற்கும்போது என்ன செய்வாய்? இந்த ஒரு வசனம் எத்தனைத் திட்டமும், தெளிவுமாக நற்செய்தியைத் தெரிவிக்கிறது. இப்பொழுதே உன் உள்ளத்தைத்திறந்து ஆண்டவராகிய இயேசுவை ஏற்றுக்கொள். "தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்."

" பரலோகம் செல்லும் பாதையை அறிவாயா ?"

நான் வாசித்த ஒரு உண்மையான கதையைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன். முதல் உலக போர் நடந்தபோது, போர் முனையில் குண்டுகள் வெடித்துச் சிதறிக்கொண்டு இருந்தன. பதுங்கிக் குழியில் நின்றுகொண்டிருந்த பெர்ட் என்பவன் தாக்கப்பட்டு, மரம்போல சாய்ந்தான். அருகிலிருந்த டைவிடிம் அவனைப் பார்க்கச் சென்றபோது, அடிபட்டவன், " பரலோகம் செல்லும் பாதையை அறிவாயா ?" என்று கேட்டான். " ஐயோ, எனக்குத் தெரியாதே, நான் அடுத்தவரைக் கேட்கிறேன் " என்று சொல்லி குழியில் பதுங்கிக் கொண்டிருந்த ஏழுபேரையும் விசாரித்தான். ஒருவருக்கும் தெரியாததினால், அடுத்த குழியில் இருந்தவரிடம் சென்றான். " பெர்ட் சாகப்போகிறான், பரலோகம் செல்லும் வழியைக் கேட்கிறான் " என்று சுமார் பதினாறு ஆட்களை விசாரித்தான். இறுதியாக பீரங்கியிடமிருந்தவனிடம் கேட்டான். அவனோ புன்முறுவல் பூத்தவனாக, " ஆம், எனக்குத் தெரியும். ஆனால் அவனிடம் வர முடியாதே " என்று சொல்லி, தன் பையிலிருந்த புதிய ஏற்பாட்டை எடுத்தான். யோவான். 3:16 வசனத்தைக் காட்டி, அதை அவனுக்கு வாசிக்கும்படிச் சொல்லி அனுப்பினான். சாவை நெருங்கிகொண்டிருந்தவனிடம் அவன் வந்து, இவ்வசனத்தை வாசித்து, " இதுதான் பரலோகம் செல்லும் வழி " என்றான். இப்படியாக தன் கண்களில் நீர் வடிய, முழங்காலில் நின்று, திரும்பத்திரும்ப அந்த ஜீவ வசனத்தை வாசித்தபோது பெர்ட் தன் கண்களைத் திறந்து மிகவும் சுவாரசியமாக அவ்வார்த்தைகளுக்குச் செவிசாய்த்தான். " எவனோ " என்ற சொல்லைக் கேட்டபொழுது சாகிறவன் முகத்தில் சமாதானம் நிலவிற்று. சற்று நேரம் கழிந்து, தன் முழு பெலத்தையும் கொண்டு நிமிர்ந்து, " அன்பர்களே " என்று அழைத்தான். உயர இருந்த வானத்துக்கு நேராக கரங்களை உயர்த்தி, மலர்ந்த முகத்துடன். "எவனாகிலும்" என்ற வார்த்தையைச் சொல்லி விட்டு, கீழே விழுந்து மரித்தான். பெர்ட், மோட்சத்திற்கு

செல்லும் வழியைக் கண்டுகொண்டான். போர்க்களத்தின் குழியில் இருந்தவன், அடுத்த கனத்தில் கிறிஸ்துவிடம் இருந்தான். அன்பனே, உன் நிலைமை என்ன? இப்பொழுதே உன் உள்ளத்தைத் திறந்து இரட்சகரை ஏற்றுக்கொள்.

★

Dr. ஆஸ்வால்ட் ஜே. ஸ்மித் அவர்கள் எழுதிய

தேவன் பயன்படுத்தும் மனிதன்

என்ற எமது வெளியீட்டை ஒவ்வொரு கிறிஸ்தவனும் வாசிப்பது மிகவும் நல்லது. பிரதிவேண்டுவோர் எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம். புத்தகத்தின் விலை ரூபாய் ஒன்று.

இந்திய இல்லந்தோறும் நற்செய்தி
(தமிழ்நாடு)
1/9, ரித்தர்டன் ரோட், வேப்பேரி, சென்னை-7.

THE SALVATION OF GOD

(Tamil)

by

Dr. OSWALD J. SMITH

Published by

INDIA EVERY HOME CRUSADE
(TAMILNADU)
1/9, RITHERDON ROAD,
VEPERY, MADRAS-7